
இலங்கைத் தமிழா!
இது கேளாய்!
கலைஞர்
மு.கருணாநிதி

இலங்கைத் தமிழா!
இது கேளாய்!

கலைஞர் மு. கருணாநிதி

பாரதி நிலையம்
தியாகராய நகர் : : சென்னை-17.

முதற்பதிப்பு : நவம்பர் 1981

விலை ரூ. 3-90

(தொகுப்பு :- வீரன்)

அச்சிட்டோர்,
எஸ். மோத்தி பிரிண்டர்ஸ்
சென்னை-6.

இலங்கைத் தமிழருக்காகப் போராடிய கலைஞரை விடுதலை
செய்யக் கோரி செப்டம்பர் 16 முதல் 28 வரையில்
நீக்குளித்து உயிர்நீத்த

[illegible]
விருத்தாவன்

திருச்சி
மனோகர்

திருவாரூர்
கிட்டு

பெருந்துறை
முத்துப்பாண்டியன்

கல்லாவி
ராஜேந்திரன்

மேல்மாயில்
ஜெகநாதன்

சென்னை மேரி

ஆசியோர்க்கு இந்நூல் காணிக்கை
பாரதி நிலையத்தார்

முகப்பு!

தமிழ் இனத்திற்கு ஒரு ''சாபக்கேடு'' இந்த இனத்திற்கு ஏற்படுகிற பகைவர்கள் மட்டுமல்ல, தமிழர்களாகப் பிறந்தவர்களேயே தந்திர நரிகள் மோதவிட்டு இரத்தம் குடிக்கிற நிலைமையுமாகும்! இலங்கைத் தமிழர்கள் கொடுமைக்கு ஆளாவதைக் கண்டித்துக் குரல் எழுப்பிய காரணத்திற்காகவே கடந்த செப்டம்பர் திங்களே சிவப்புத் திங்களாக மாற்றி விட்டது தமிழ் நாட்டில் எம். ஜி. ஆர் அரசு! இருபதாயிரம் தமிழர்கள் சிறையில்! ஏழுபேர் தீக்குளித்து தியாகச் செயல்!

இதை எல்லாத் தமிழர்களும் உணர வேண்டும்; உண்மையை அறிய வேண்டும் என்பதற்காகவே ''இலங்கைத் தமிழா! இது கேளாய்!'' என்ற இந்தத் தொகுப்பு நூலினை தமிழ்க்கனிப் பதிப்பகத்தாரிடம் உரிமை பெற்று முதல் வெளியீட்டைப் பாரதி நிலையத்தினர் வழங்கியுள்ளனர்.

கோயிலடி பிருந்தாவன், திருச்சி மனேகர் பெருந்துறை முத்துப்பாண்டியன், திருவாரூர் கிட்டு, சென்னை மேரியம்மாள், கல்லாவி இராசேந்திரன், மேல்மாயில் ஜெகநாதன் தீக்குளித்து உயிர் விட்ட அந்த திருவிளக்குகளின் தியாக ஒளியை யார் தான் மறைக்க முடியும்?

அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி, இந்த நூலை இதய முள்ளோர்க்கு காணிக்கையாக்குகிறேன்.

5.11.81

அன்புள்ள

சென்னை

மு. கருணாநிதி

1. கண்ணீரே கவசம்

உடன் பிறப்பே,

இலங்கையில் மீண்டும் கொந்தளிப்பு! யாழ்ப்பகுதியில் தமிழினத்தின் நரம்புகள் அறுபடுகின்றன! அவல ஓசை எழுகிறது! அடிக்கடி குமுறிக்கிளம்பும் கொடுமைக் கடலின் அலைக்கரங்கள், தமிழ்ச் சாதி மக்களை கிளிஞ்சல் பொடி களாக ஆக்குவதற்கு மீண்டும் தாவிக் கிளம்பி விட்டன!

வருகிற செய்திகள், நெஞ்சில் நெருப்பைக் கொட்டு கின்றன!

நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர் யோகேஸ்வரன் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டதாகவும் — தமிழர் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டதாகவும் — சிங்களப் போலீசார், சாதாரண உடையில் தமிழர்கள் மீது தொடர்ந்து தாக்கு தலை நடத்தி வருவதாகவும் — வந்துள்ள செய்திகளைவிட வராத செய்திகள் அதிகமென்றும்—பாதுகாப்புப் படையி னரே பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்குள் நுழைந்து ஒரு பாலகனைச் சுட்டுக் கொன்றார்கள் என்றும் — தமிழர் பிணங்கள் வீழ்ந்து கொண்டேயிருக்கின்றன என்றும்— இலங்கையிலிருந்து வரும் தகவல்கள் நம் இதயத்தைப் பிழிந்தெடுக்கின்றன!

இலங்கை முழுவதும் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட் டுள்ளது! இராணுவத்தின் ஆதிக்கத்தில் இலங்கை பூமி விடப்பட்டிருக்கிறது! கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் மற்றும் சில நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர்களும் அதிபர் ஜெய வர்த்தனே அவர்களின் ஆணைப்படி விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

இவையனைத்தும் ஏதோ உரிய நடவடிக்கைகள் எடுத்த தைப் போலத் தோற்றமளித்தாலும் - இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக இடைவிடாது போர்க்கோலம் கொண்டிருக்கிற இலங்கைவாழ் சிங்களவர்களின் இன வெறியை அகற்றுவதற்கு ஏற்ற மனிதாபிமான நட வடிக்கைகள் இதுவரையில் தக்கவகையில் மேற்கொள்ளப் படவில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண் டியவனாக இருக்கிறேன்.

மாடாக உழைத்து இலங்கைத் தீவுக்கோர் மகிமை யைத் தந்த தமிழின மக்கள் இன்று மண்ணில் நெளியும் புழுவாக மிதிக்கப்படுகின்றனர்!

தமிழ் இனமே! ஈழத்து மண்ணில் உதித்து, ஈழத்தை வளர்த்து வாழ வைத்த தமிழ இனமே! ஈரத்தை இதயத் தில் காயவைத்துக் கொண்டோர், உன்னை வாட்டி வதைக் கும் கொடுமை கேட்டு, ''அய்யகோ! என் காதுகள் செவி டாகி விடவில்லையே!'' என்று அலறத்தான் தோன்று கிறது!

எத்தனை இன்னல்கள் உனக்கு! எத்தனை தடைவைகள்! எத்தனை ஆண்டுகளாக!

அன்றொருநாள் தமிழனைக்கட்டி வைத்து, அந்தத் தமிழனுக்கெதிராகவே அந்தத் தமிழனின் தமிழச்சியை மானபங்கம் செய்தனர்-அச்சம்-நடுக்கம் — அடுத்து என்ன நடக்குமோ என்ற துடிப்பு — இவைகளினூடே எத்தனை ஆண்டுகளாக அங்குள்ள நம்மினம் ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பது?

இந்த இருள் விடியவே விடியாதா? விமோசனம் பிறக்கவே பிறக்காதா?

மத்திய அரசைப் பொறுத்தவரையில் இது இன்னொரு நாட்டுப் பிரச்சினை! மிகக் கவனத்துடனும் ஜாக்கிரதையுட னும் தான் அணுகிடவேண்டும் நாம் அறியாததல்ல! ஆனால் மனிதாபிமானப் பிரச்சினை? ஐந்து கோடித் தமிழர்கள் இங்கேயுள்ளனர் இந்தியாவில்! ஆம்; தமிழ்நாட்டில்! அந் தத் தமிழ் இனத்தின் ஒரு பகுதி, இலங்கையிலே வேட்டை யாடப்படுவதை எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும் இந்த உணர்வை அறியமாட்டாதவர் அல்ல பிரதமர் இந் திரா காந்தி அம்மையார்!

''தானடாவிடினும் தன் தசையாடும்'' என்ற இரத்த பாசம்—இலங்கையில் அவதியுறும் தமிழினம் குறித்து இங்குள்ள தமிழினத்துக்கு உண்டு!

அந்தப் பாச உணர்வே; இதோ கண்ணீராக வழிகிறது! இரத்தக் கண்ணீராக வழிகிறது!

இலங்கையில் துடித்திடும் தமிழ்சாதி மக்களே! எங்கள் கண்ணீரைத்தான் உங்களைப் பாதுகாக்கும் கவசமாக எங்க ளால் தர முடிகிறது!

வேறென்ன செய்ய நாங்கள்? அய்யோ! வேறென்ன செய்ய நாங்கள்?

அன்புள்ள,

மு. க.

(6-6-81 அன்று முரசொலியில் வந்த கடிதம்)

ஈழத் தமிழர்கள் பிரச்சினை மனிதாபிமான பிரச்சினை

''இங்கே தம்பி கோபாலசாமியும், எல். கணேசனும் எடுத்துக் காட்டியதைப் போல், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஐந்து கோடித் தமிழர்களுக்காக மாத்திரமல்ல; நியூயார்க்கிலே வாழ்கிற தமிழ ஞனும், சிகாகோ நகரத்திலே வாழ்கின்ற தமிழனுனும், சிங்கப்பூரிலே வாழ்கின்ற தமிழனுனும், ஈழத்திலே இருட் டறையிலே வேதனைப்படுகின்ற தமிழனுனும் அவனுடைய உடலிலே தூசுபட்டால் துடித்துப் போகின்ற தமிழர் இயக் கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

முதலமைச்சர் வாய்திறக்கவில்லையே என்று கேட் டார்கள்.

இன்று மாலையிலே 'மாலை முரசு' பத்திரிகையைப் படித்துப் பார்த்தேன். முதலமைச்சர் வாய் திறந்திருக் கிறார்–இலங்கைப் பிரச்சினை குறித்து என்ன தெரியுமா?

இதுவா கண்டனம்?

சென்னையிலே ஆதித்தனருக்கு இரங்கல் கூட்டம் அதிலே பேசிய முதலமைச்சர் சொல்லுகிறார். ஆதித்தனர் மாத்திரம் உயிரோடு இருந்திருந்தால் இலங்கைப் பிரச்சினை யைப் பற்றி எப்படி கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டிருப்பார் தெரியுமா? என்று பேசியிருக்கிறார்.

இவர் என்ன அதைப் பற்றிச் சொல்லுகிறார்? ஒன்றும் சொல்லவில்லை. ஆனல், ஆதித்தனர் உயிரோடு இருந்திருந்

தால் தினத்தந்தி பத்திரிகையிலே எப்படிச் செய்தி வெளியிட்டிருப்பார் தெரியுமா? என்று பேசி இருக்கிறார்.

இது இலங்கை மக்களுக்காக எம். ஜி. ஆர். விடுகின்ற கண்ணீரா! இலங்கையில் நடைபெறுகின்ற கொடுமைகளுக்காக எம்.ஜி.ஆர். விடுக்கின்ற கண்டனமா? எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால், இது நம் வீட்டுப் பிரச்னை. நம்முடைய இனப் பிரச்சினை. நம்முடைய மொழி-மானப் பிரச்சினை. நம்முடைய உதிரங்களுக்கு தசைக் கோளங்களுக்கு - நம்முடைய உடன் பிறப்புகளுக்கு-நம்முடைய சொந்தம், பந்தம், சுகிர்தம் அத்தனையும் கொண்ட இந்த இன மக்களுக்கு இலங்கையிலே இழைக்கப்படுகின்ற கொடுமைகளைக் கேள்விப் படுகின்ற நேரத்தில் யாரும் தூண்டிவிட்டு, யாரும் சொல்லிக்கொடுத்து, யாரும் அறிவுரை கூறி யாரும் உசுப்பிவிட்டு அதைப் பற்றிப் பேச வேண்டியதில்லை. நான் கடிதத்தில் எழுதி இருப்பது போல், தாளுடா விட்டாலும் தன் சதை ஆடும் என்பதைப் போல தாளுகவே நம்முடைய தசை ஆடுகிறது. இரத்தம் கொதிக்கிறது. நம்முடைய கண்கள் குளமாகின்றன, நம்முடைய விழிகள் நீர் வீழ்ச்சிகளாகின்றன. ஐயோ! தமிழா! இலங்கையிலே படாதபாடுபடுகிறுயா?' என்ற அவலம் நம்முடைய இதயத்திலே நம்மை யறியாமல் முழங்குகின்றது.

நாம் கைபிசைந்து நிற்கிறோம். நம்மால் எதுவும் ஆகி விடாது. காரணம், மத்திய அரசின் மூலமாகத்தான் நம் முடைய மனக் குறையை இலங்கை அரசுக்கு நம்மால் வெளிப்படுத்த முடியும். இலங்கைத் தூதுவர்கள் மூலமாகவும் வெளிப்படுத்த முடியும். நேரடியாக நாம் இலங்கையினுடைய எந்த சர்ச்சைக்கும் போகின்ற அளவிற்கு நாம் அரசியல் தெரியாதவர்கள் அல்ல. 'சர்வதேச' நிலைமைகள் புரியாதவர்கள் அல்ல. அகில உலக அரங்கில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற அரிச்சுவடியைப் படிக்காதவர்கள் அல்ல.

நான் இந்திரா காந்தி அம்மையார் அவர்களைக் கூட கேட்டுக் கொள்வதெல்லாம் - இதிலே சட்டப் பிரச்சினை இருக்கட்டும். ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்குமுள்ள

பிரச்சினையாகவும் இருக்கட்டும் அதற்கிடையிலே மனிதாபிமானப் பிரச்சினை. அதை மறந்து விடாதீர்கள்.

அயர்லாந்தில் ஏறத்தாழ நான்கு அல்லது ஐந்து இளைஞர்கள் சிறைச்சாலையிலே தங்களை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டுமென்று அறுபது நாள், எழுபது நாள் பட்டினி கிடந்து-உண்ணு நோன்பு மேற்கொண்டு, துடிக்கத் துடிக்கச் செத்துப் போயிருக்கிறார்கள்.

அயர்லாந்திற்கும், இந்தியாவிற்கும் என்ன தொடர்பு? என்று திருமதி இந்திராகாந்தி அம்மையார் கேட்டிடவில்லை. அதை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு இங்கிலாந்து பிரதமர் தாட்சர் அவர்களுக்கு இந்திரா காந்தி அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இந்த நிலைமையைக் கவனியுங்கள் என்று.

அதைப் போல இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இலங்கைப் பிரச்சினையை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்மைப் பொறுத்த வரையில் இது இரு நாட்டுப் பிரச்சினை. இது மனிதாபிமானப் பிரச்சினை. அதே நேரத்தில் நம்முடைய இனப் பிரச்சினை. அதை மறந்து விடக் கூடாது.

எனவே, அந்த இனப் பிரச்சினையை திராவிடமுன்னேற்றக் கழகம் எந்த வகையில் வெளிப்படுத்துவது? எந்த வகையில் நம்முடைய கண்டனத்தைத் தெரிவிப்பது? என்பதை நான் தனி ஒருவனை அல்ல; இந்த இயக்கம் ஜனநாயகப்பூர்வமான இயக்கம் என்ற காரணத்தால் நான் சென்னை திரும்பியதும் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களைக் கலந்து கொண்டு நம்முடைய கழகத் தலைவர்களைக் கலந்து கொண்டு தலைமை நிர்வாகக்குழு உறுப்பினர்களையெல்லாம் கலந்து கொண்டு-விரைவில் இலங்கைப் பிரச்சினைகளுக்கான நடவடிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மன்னார்குடி பொதுக்கூட்டத்தில் 7-6-81 அன்று கலைஞர் ஆற்றிய உரையில் ஒருபகுதி).

(முரசொலி 10-6-81)

ஈழத் தமிழர்கள் சித்திரவதை

பிரதமருக்கு கலைஞர் தந்தி

சென்னை, ஆக. 13—

பட்டப் பகலில் ஈழத் தமிழ் மூதாட்டியொருத்தி படு கொலை செய்யப்பட்டிருக்கிறாள். இராணுவத்தின் பிடியில் யாழ்ப்பாணம் சிக்கித் தவிக்கிறது. தமிழர்களைத் தாக்க சிங்களவர் அரசே தூண்டிவிடுகிறது. எனவே, மனிதாபிமான அடிப்படையில் தாங்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு உதவிட வேண்டுகிறேன் என்று தலைவர் கலைஞர் அவர்கள் இன்று பிரதமர் இந்திராகாந்தி அம்மையாருக்குத் தந்தி அனுப்பினார்.

தலைவர் கலைஞர் அவர்கள் இந்த தந்தியில் கூறியுள்ளதாவது:-

கடந்த இருவாரமாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் இலங்கையின் கிழக்கிலும், தெற்கிலும் கலவரங்கள்பரவிவருகின்றன என்று கூறுகின்றன. அங்குள்ள அரசாங்கமே கலவரத்தை ஊக்குவிப்பதாகத் தோன்றுகிறது. வட கொழும்பில் தமிழர்களின் இல்லங்கள் தாக்கப்படுகின்றன.

இரு நாட்களுக்கு முன் யாழ்ப்பாணம் ரயில்கள் தாக்கப்பட்டுள்ளன. அதிலிருந்த தமிழ்ப் பயணிகள் கொள்ளையடிக்கப்பட்டு வண்டியை விட்டு வழியில் தூக்கியெறியப் பட்டிருக்கின்றனர்.

அம்பாரை கோவில் தேர் (சிங்கள வெறியர்களால்) நொறுக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வம்சாவழித் தமிழர்களும் இலங்கை முழுதும் பல இடங்களில் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழர்களைத் தாக்குங்கள், தூக்கியெறியுங்கள் என்று சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட போஸ்டர்களை அரசாங்கமே அச்சிட்டுத் தந்து அனுப்பியிருக்கிறது.

நிலைமை கட்டுப்பாட்டை மீறிப் போய் விட்டது.

நேற்று கொழும்பில் வயதான தமிழ் மூதாட்டி ஒருவர் பட்டப் பகலிலேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

தமிழ் அதிகாரீகளுக்கு நிவாரணம் அளிக்க முன்வரும் அமைப்புகள் இயங்க அரசாங்கம் அனுமதி தரமறுக்கிறது.

யாழ்ப்பாணத்தை இராணுவம் வளைத்துக் கொண்டிருக்கிறது. அங்கே அதிகார பூர்வமற்ற முறையில்ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்படுகிறது.

கலவரங்களை அடக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

செய்திகள் உங்களுக்கு நேரடியாகக் கிடைக்குமாதலால் இப்பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் தாங்கள் தங்கள் கவனத்தை செலுத்தி உதவிட வேண்டுகிறேன்''.

இவ்வாறு தலைவர் கலைஞர் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு தந்தி அனுப்பியுள்ளார். தந்தியின் நகல் வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(தலைவர் கலைஞர் 13.8.81 அன்று
பிரதமருக்கு அனுப்பிய தந்தி)

★

பிரதமருக்கு கலைஞர் மீண்டும் தந்தி

அத்தந்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:!

''ரத்தினபுராவில் மலைத்தோட்டங்களில் வேலை பார்த்த நாலாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்று கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்களுடைய உடமைகள் பறிக்கப்பட்டுள்ளன. பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவுக்குக் கூட வகைசெய்து தரவில்லை. பிச்சை எடுக்கும் நிலைக்கு அவர்கள் துரத்தப்பட்டுள்ளனர். உடனடியாக அவர்களுக்கு உதவி செய்யவில்லை என்றால் உயிரிழக்கும் நிலை ஏற்படும். இந்தப் பிரச்சினைகளில் அரசாங்கமும்,போலீசும் ஒன்றாக இணைந்து செயல் படுகின்றன என்று நம்பகமாகத்தெரிகின்றது. தமிழர்களின் உயிரைக்

காப்பாற்ற உடனடி உதவி தேவை. இப்பிரச்சினையில் தலையிட்டு விரைந்து ஆவன செய்யும்படி வேண்டுகிறேன்.

இவ்வாறு பிரதமருக்கும், வெளியுறவு அமைச்சருக்கும் அனுப்பிய தந்தியில் தலைவர் கலைஞர் குறிப்பிட்டிருக்கிறார்.

(கலைஞர் 18.8.81 அன்று பிரதமருக்கு அனுப்பிய தந்தி)

★

அந்த திசையை நோக்குகிறார்கள் ஐந்துகோடித் தமிழர்கள்

உடன் பிறப்பே,

கண்ணீர் வடிக்கிறோம்—

கவலை தெரிவிக்கிறோம்—

கண்டனக் குரல் கொடுக்கிறோம்—

இலங்கையில் வதைபடும் தமிழர்களுக்காக இங்குள்ள நாம் அதைத்தான் செய்கிறோம்! அதைத் தான் செய்ய முடிகிறது! இலங்கையில் வதைபடும் தமிழர்கள் எனப் பொதுவாகத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தியத் தமிழர்களானாலும் இலங்கையில் தமிழ் ஈழம் கோருகிற தமிழர்களானாலும் மலைத்தோட்டத் தமிழர்களானாலும் நமது நோக்கில் தமிழக்குலம்தானே!

அந்தத் தமிழ்க்குலம் அங்கே படும்பாடு - பஞ்சுதான் படுமோ என்றல்லவா எண்ணி எண்ணி வேதனைத் தணலில் விழுந்து துடிக்கிறோம்.

இன்று-நேற்றா? எத்தனை ஆண்டுகளாக இந்தக் கொடுமையின் கோர நர்த்தனம் இலங்கை மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்திடும் தமிழ் மங்கையரின் சுற்புக்குக் களங்கம் விளைவிக்கும் செயல் கண்டும், தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் கொள்ளை போவதைக் கண்டும் - அண்ணா காலத்திலிருந்தே, தி. மு

கழகம் தொடர்ந்து பேரணிகள், கண்டனக் கூட்டங்கள் வாயிலாகத் தாயகத் தமிழர்களின் இதயத்துடிப்பினை இந்தியப் பேரரசுக்கு எடுத்துக்காட்டி-இலங்கையில் எழும் சிங்களவர் வெறிக்கு அணை கட்டி வந்திருக்கிறது.

இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்பு இலங்கையில் தமிழர்கள் மீண்டும் கொலைவெறிக்கு ஆளான போதும் கழகத்தின் பேரணியும், தமிழர்கள் ஒருமித்த குரலில் கொடுத்த எதிர்ப்பு முழக்கமும்—இலங்கைத் தமிழர்களை வாழவைக்கப் பெரிதும் உதவின!

இப்போது மீண்டும் தொல்லை! இல்லை தமிழர்கள் உரிமையும், உடைமையும், உயிரும் - ஏன் மானமும் கூட கொள்ளையோ கொள்ளை!

இதோ அந்த அநியாயத்தைக் கண்டித்துத் தமிழகம் கிளர்ந்தெழுந்து நிற்கிறது!

இலங்கைத் தமிழர்கள் இப்படி எத்தனை முறைதான் செத்துச் செத்துப் பிழைப்பது.

இந்தியப் பாராளுமன்றத்தில் நமது கழக உறுப்பினர்கள் உட்படப் பலரும் கவனர்ப்புத் தீர்மானங்களைக்கொடுத்திருப்பதாகத் தகவல். குலுக்கல் முறைப்படி எந்த கவன ஈர்ப்புத்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறதோ: இம்மடல் தீட்டும் வரையில் எனக்குத் தெரியாது! இலங்கையில் தமிழர்களுக்குற்ற தீமை கூறையப்பட, இந்தியப் பேரரசு எடுத்திட வேண்டிய முறையான கடமைகளைக் குறித்து நமது கழகத்தினர் டில்லியில் வலியுதத்துவார்கள்! தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருப்பார்கள்!

கழகத்தின் சார்பில் பிரதமரையும், வெளி விவகார அமைச்சரையும் நேரிலே சந்தித்து இலங்கை நிலவரங்களை ஏற்கனவே விளக்கியிருக்கிறேன்.

அவ்வப்போது அங்கே உருவாகிடும் நிலைமைகள், தலைமைக் கழகத்துக்குத் தரப்பட்டவுடன் அவற்றை உடனடியாக பிரதமர் அவர்களின் கவனத்திற்கும், வெளிவிவகார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கழகத்தலைமை, தந்திகளின் மூலம் தெரிவித்துக் கொண்டேயிருக்கிறது!

தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த கவலை இலங்கையைப் பற்றியதாக இருப்பதை உணர்ந்துள்ள நமது மத்திய அரசு

அதுகுறித்து அறிக்கையொன்றினை நாடாளுமன்றத்தில் வைத்திடப்போகிறது என்ற செய்தியும் வந்துள்ளது.

வேறொரு நாட்டுப் பிரச்சினையில் எத்தனை எச்சரிக்கையோடு தலையிடவேண்டும் என்பதை நாம் உணராதவர்கள் அல்ல!

தமிழ்க்குலத்தினரைத் தாக்கி யொழிப்பது என்ற பெயரால் இலங்கையில் மனிதாபிமான உணர்வுக்கே அறைகூவல் விடப்பட்டுள்ளது என்பதை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எண்ணிப்பார்த்து செயல்படத் தயங்க மாட்டார் என்றே தாய்த்தமிழகத்து மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கொழும்பில் உள்ள இந்திய ஹை கமிஷனர் திரு. ஆப்ரகாம் அவர்களிடமிருந்து இந்திய அரசுக்குக் கிடைத்துள்ள தகவலின்படி இலங்கையில் நிலைமை மோசமாக இருக்கிறது-பெரும்பாலும் தமிழர்கள் வன்முறை வெறியாட்டங்களால் தாக்குண்டு பாதிக்கப்பட்டுள்ளார்கள்-என்ற உண்மைகள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

மானபங்கம்- சித்ரவதை - மரணம் - என்ற வன்முறை நெருப்பு வலையங்களுக்குள் புழுக்களாய்த் துடிக்கும் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் எப்படி நிர்ணயிக்கப்பட இருக்கிறதோ! என்பதை கொந்தளிக்கும் உள்ளத்தோடு-இங்கே உள்ள ஐந்துகோடித் தமிழர்கள் உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறார்கள்!

அன்புள்ள,

மு. க.

(தலைவர் கலைஞர் 20-8-81 அன்று முரசொலியில் எழுதிய கடிதம்)

★

முழுக்க முழுக்க வெளிநாட்டு பிரச்சினை என்று இலங்கை தமிழர் பிரச்சினையை தவிர்த்துவிட முடியாது

சென்னை, ஆக. 21

முழுக்க முழுக்க வெளிநாட்டுப் பிரச்சினையென்று கூறி இலங்கைத் தமிழர் பிரச்சினைய தவிர்த்துவிட முடியாது என்று இன்று சட்டப் பேரவையில் இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து அரசின் சார்பில் கொண்டுவரப் பட்ட தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

தலைவர் கலைஞர் அவர்களது உரை வருமாறு:-

அரசின் சார்பில் அவை முன்னவரால் கொண்டு வரப் பட்ட இந்தத் தீர்மானத்தை வழி மொழிகிற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். இருபதாண்டு காலமாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினை பயங்கரமாக எழுவதும், இலங்கையிலே உள்ள தமிழர்கள் இனவெறிக்கும் ஆதிக்க வெறிக்கும் ஆளாவதும் அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற கரம் தாய்த் தமிழகத்திலிருந்து எழுவதும் வரலாற்று உண்மை நீசழ்ச்சியாக ஆகி விட்டதை நாம் உணர்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே இருபதாண்டுகளுக்கு முன்பு இலங்கையிலேதமிழர்கள், தமிழ் மங்கையர், தமிழ் மழலையர் இவர்கள் அனைவரும் மரண வேதனைக்கு, மானபங்கத்திற்கு ஆட்படுத்தப்பட்டபோது தமிழ் நாடு கொடுத்த குரலின் காரணமாக அமைதிநிலவிடவும் அதற்குப் பிறகு ஒரு நீண்ட இடைவெளிக் காலம் தமிழர்கள் சற்று நிம்மதியாக வாழ்ந்திடவுமான நிலை இலங்கையில் ஏற்பட்டது.

ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு இலங்கையிலே இருக்கிற சிங்கள மக்களோடு நாங்களும் ஒற்றுமையாக, அதே நேரத்தில் தமிழர்களுக்கு உரிய கலாச்சார மொழி இனஉரிமைகளை சமமாக பெற்று வாழவேண்டும்

என்று திட்டம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த தமிழர்கள் தனிநாடு கேட்க வேண்டிய அளவிற்கு துரத்தப்படடிருக் கிற'துரத்தப்படுகிற ஒரு சூழ்நிலை உருவாயிற்று.

இனி தங்களால் இணைந்திருந்து வாழமுமுயாது என்ற ஒரு நிலைமை ஏற்பட்ட காரணத்தால் விடுதலை போர்க் கொடியை இலங்கையிலே உள்ள தமிழர்கள் உயர்த்தினர் கள்.

அதன் தொடர்பான விளக்கங்களை நான் இந்தத்தீர் மானத்தின் அடிப்படையிலே இந்த அவையில் எந்தக் கருத் துக்களையும் எடுத்துவைக்க விரும்பவில்லை.

முழுக்க முழுக்க வெளிநாட்டுப் பிரச்சனை இது என்று சொல்லப்பட்டாலும்கூட, அதே முழுக்க முழுக்க என்ற சொற்களை பயன் படுத்தி முழுக்க முழுக்க நான் இதை அறவே தவிர்த்து விடுகின்ற பிரச்சினையும் அல்ல என்பதை இந்த அவையிலே உள்ளவர்களுக்கு அல்ல- இந்தியப் பேரரசை இன்றைக்கு நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அவையின் சார்பாக இந்ததீர்மானத்தின் அடிப்படை யில் நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மனிதாபிமானப் பிரச்சினை

வெளிநாட்டுப் பிரச்சினைகளில் குறிப்பாக மைனரிட்டி ரைட்ஸ் இவைகளில் வெளிநாட்டுப் பிரச்சினைகளில் தலையிடு கின்ற உரிமையையும் அவற்றை பேசுகின்ற உரிமையையும் மக்கள் உரிமைச்சங்கங்கள் உலகளவில் பெற்றிருக்கின்றன. என்பதை நாம் மிகத் தெளிவாக அறிவோம்.

குறிப்பாக சிறுபான்மையோர் உரிமையாலுலும், வெளி நாட்டு குடிமக்களுடைய உரிமையாலுலும் இவை களெல்லாம் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும் என்பதிலே ஆழ்ந்த கவனத்தை அப்படிப்பட்ட மக்கள் உரிமைச் சங்கங்கள் நிலைநாட்டிவருகின்றன. அதேபோல் இந்த அவையிலே உள்ள நான் நம்முடைய தாயத் தமிழகத்தோடு அவைமுன்னவர் நாவலர் எடுத்துக்காட்டியதைப் போல இன உணர்வில், மொழி உணர்வில் பண்பாட்டு உணர்வில் நம்மோடு கலந்திருக்கின்ற இலங்கைத்தமிழர்கள் தமிழர்கள் என்கிற அந்த உணர்வோடு நாம் அணுகுகிறோம் என்றாலும் கூட இந்தியப்பேரரசு மனிதாபிமான உணர்வோடு இந்தப்

பிரச்சினையை அணுகிட வேண்டும் என்பதுதான் மிக முக்கியமானதும்—அவசரமானதும் —அவசியமானதுமான நம் முடைய வேண்டுகோள்.

கடந்த சில நாட்களுக்கு முன்புதான் ஒரு பெரும் கலவரம் யாழ்ப்பாணம் பகுதியில் நடைபெற்று தமிழர்கள் அவதிக்கு ஆளானார்கள். தமிழர்களுடைய பொருட் களெல்லாம், கோவில்களெல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழர்களின் பத்திரிகை அலுவலகங்களெல்லாம் சூறையாடப்பட்டன.

தமிழர்களுடைய நீண்ட நெடுங்காலமாக பாதுகாத்து வருகிற தொன்மை நூல்களெல்லாம் நிறைந்த ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள இலங்கையிலே மிகப் பெரிய நூல்நிலையம் சாம்பல் ஆக்கப்பட்டு ஒரு நூலினுடைய ஒரு பக்கத்தை ஒரு ஏட்டை கூட திரும்பி பெற முடியாத அளவிற்கு கருகிவிட்ட செய்தியை நாம் கேள்விப்படு கிறோம்.

அது மாத்திரமல்ல — அமெரிக்கா செல்கிற வழியில் எங்களைச் சந்தித்த ஈழத்தமிழர்களின் தலைவர் அமிர்த லிங்கம் அவர்களும் அந்தச் சோக சம்பவங்களையெல்லாம் எங்களிடம் விவரித்துச் சொன்னார். இந்தக் கொடுமைகளை யெல்லாம் இந்திராகாந்தி அவர்களிடம் முதலமைச்சர் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

நான் பிரதமர் அவர்களை சந்தித்துப் பேசியநேரத்திலும் இவற்றை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

நம்முடைய தமிழர்களுக்காக எடுத்து வைத்த கோரிக்கை களை ஆழ்ந்து கவனித்து இந்தியப் பிரதமர் அவர்களும் தக்க ஏற்பாடுகளை நிச்சயமாக இந்தியப்பேரரசு கவனிக்கும் என்ற உறுதி மொழியை எனக்கு அளித்திருக்கிறார்கள்.

அதைப்போல முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிற செய்திகளையும் ஏடுகளில் பார்த்து மன ஆறுதல் பெற்றுள் ளேன்.

நமது ஆதரவு என்றும் உண்டு

இந்தியவெளி விவகாரத்துறை அமைச்சரிடமும் இது பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர்கள் தாக்கப்படுகிற நேரத்திலெல்லாம் தமிழ் நாட்டிலிருந்து இந்தியப் பேரரசுக்கு எல்லாக் கட்சியில் உள்ளவர்களும் கட்சி சார்பற்ற முறையில் கட்சி வேறுபாடுகளையெல்லாம் மறந்து 'அனைவரும் தமிழர்கள்' என்கிற அந்த உணர்வோடு அவதிப்படுகிற தமிழர்கள் இலங்கையிலிருந்தாலும், அவர்கள் உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலிருந்தாலும் அவர்களுக்கு தமிழகத்திலிருக்கிற ஐந்துக் கோடித் தமிழர்களின் ஆதரவு என்றென்றைக்கும் உண்டுஎன்ற பேருண்மை நாம் இதிலே காட்சிகளையெல்லாம் மறந்து நிலைநாட்டியிருக்கிறோம்.

அந்த வகையில் தமிழர்கள் ஒற்றுமையோடு இன்றைக்கு இந்த ஒரு தீர்மானத்திலே இருக்கும் கட்சியை என்னால் காண முடிகிறது.

இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே நாம் கருத்து சொல்வதற்கு தகுதியற்றவர்கள் என்று நாம் நிச்சயமாக, ஆகிவிடமாட்டோம்.

அயர்லாந்து போராட்டத்தில் பாபிசாண்டசும் அவரை தொடர்ந்து இதுவரையில் எட்டு பேரும் உண்ணாவிரதமிருந்து இறந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்காக நாம் அனுதாபம் தெரிவிக்கிறோம். நாடாளுமன்றத்தில்கூட அது குறித்து சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசியிருக்கிறார்கள்.

தமிழர் சிந்துகிற செந்நீர் தடுத்து நிறுத்தப்படவேண்டும்

அதைப் போல வெளிநாட்டில் அவதியுறுகிறவர்கள் தமிழர்கள் என்ற பிரச்சினையைவிட அனைவதம்மனிதர்கள் என்ற அந்த உணர்வின் அடிப்படையில் மனிதாபிமானத்தமையோடு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும் என்ற வகையில்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. பல கட்சிகளின் சார்பிலும் ஒத்திவைப்பு கவனஈர்ப்பு தீர்மானங்களும் இந்தப் பிரச்சனையில் கொடுக்க வேண்டும் என நாங்களெல்லாம் கருதி அதற்கான நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்தாலும்கூட அரசின் சார்பில் ஒரு தீர்மானம் வருவதுதான் பொருத்தமுடையது என்று நாங்கள் கருதியதற்கேற்ப அரசின் சார்பாக கொண்டு

வந்திருக்கிற தீர்மானத்தை மனநிறைவோடு நான் வழி மொழிந்து தீர்மானம் நிறைவேறுகிறது என்ற அளவோடு இல்லாமல் இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை யில்வாழுகிற தமிழர்களின் துயர் தீர்க்கப்பட வேண்டும். அவர் சிந்துகிற செந்நீர் நிறுத்தப்படவேண்டும் என்பதை எடுத்துக் கூறி அமைகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

(தமிழகச் சட்டப்பேரவையில் கலைஞர் 21.8.81 அன்று ஆற்றிய உரை)

25-8-81

இலங்கைக்குச் சுற்றுலா சென்ற தமிழ் இளைஞர் தனபதி படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக இன்று சட்டப் பேரவையில் எதிர்கட்சித் தலைவர் கலைஞர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிப் பேசினார்.

கலைஞர் அவர்கள் பேசியதாவது:—

இலங்கைக்குத் தமிழகத்திலிருந்து சுற்றுப் பயணம் சென்ற சில தமிழர்களுள் கதிர்காமத்தில் சுற்றுலாவை முடித்துவிட்டு திரும்புகிற வழியில் தனபதி என்ற ஒரு தமிழ் வாலிபர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் கொலை செய்யப் பட்டார் என்ற செய்தி ஏடுகளில் வந்துள்ளது.

நேற்றைய தினம் அமிர்தலிங்கம் அவர்களின் செயலாளர் எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

இலங்கை அதிகார வட்டாரத்தால் முதலமைச்சருக்கும் மத்திய அரசுக்கும் அப்படிச் செய்தி தரப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது.

கொலை செய்யப்பட்ட அந்த தமிழ்வாலிபர் தனபதியின் உடல் தமிழகத்திற்கு அனுப்பப்பட இருக்கிறது என்றும் செய்திகள் வந்துள்ளன.

இதுகுறித்து என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன?

இலங்கைத் தமிழர்கள் கொலை செய்யப்படுவதையும் அவர்களுக்கு இழைக்கப்படுகிற வன்முறைகளையும் கண்டித்து

ஒருமனதாக இங்கே ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட கொலைகள் தொடர்கின்றன— இங்கே இருந்து சென்றவரைக் கூட அடையாளம் தெரியாத அள விற்கு கொன்று இருக்கிறார்கள் என்றால், எந்த அளவிற்கு தமிழர்களைப் படுகொலை செய்யும் நிகழ்ச்சிகள் அங்கே நடை பெறுகின்றன என்பதை யூகிக்க முடிகிறது.

எனவே என்ன முடிவு எடுக்க இருக்கிறோம்? இதுபற்றி அரசு என்ன தகவல்களை பெற்று இருக்கிறது?

சங்கரையா (மார்க்சிஸ்ட்) என். எஸ். வி. சித்தன் (இ. காங்): இது குறித்து நாங்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

அவைத்தலைவர்

அவைத்தலைவர்:- எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக தரவில்லை. தகவல் தெரிவித்துக் கொள்ளத்தான் எழுப்பியிருக்கிறார்கள்.

எனவே ஒத்திவைப்புத் தீர்மானம் இப்பொழுது வேண் டாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

முதலமைச்சர்

முதலமைச்சர்:-இலங்கை வெளிநாட்டு அமைச்சர் என்னிடம் தொலைபேசி மூலம் வேதனையோடு இந்தத் தகவலைத் தெரி வித்தார். இலங்கை-இந்தியா உறவைக் கெடுப்பதற்காக யாரோ சதி செய்வதாகக் கூறினார். தூதர் மூலமும் இதே செய்தியைத் தெரிவித்தார்கள். மாலையில் சடலம் வருவதாக செய்தி வந்திருக்கிறது. இந்தியப் பேரரசுக்கும் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். முழுத்தகவல் வந்ததும் அவைக்குத் தெரிவிக்கிறோம்.

★

தமிழன் நாதியற்றவனா?

உடன் பிறப்பே,

இலங்கைத் தீவில் என்ன நடக்கிறது என்பதற்கு, தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சுற்றுலா சென்ற தனபதி படுகொலை செய்யப்பட்ட கொடுமையான நிகழ்ச்சியொன்றே போதும்.

தமிழர்களைக் கண்டாலே—கண்ட இடத்தில் அவர்களை கண்டதுண்டமாக்க வேண்டும் என்ற வெறியுணர்ச்சியுடன் சிங்களவர்கள் கையில் கொலைக்கருவிகளுடன் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து சென்ற ஒரு தமிழன் கொல்லப்பட்டான் என்றதும் இலங்கை அரசினர் வருத்தம் தெரிவித்துப் பேசுதல்—கடிதம் எழுதுதல்—சிலரைக் கைது செய்தல் போன்ற நாடகங்களை ஆடினாலுங்கூட, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைக்குரலை ஒடுக்க—சிங்களவர்களின் வன்முறை வெறியாட்டத்தை ஊக்கப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள் என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது.

சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட தமிழ் நாட்டுக் காரர்களில் ஒரு சிலர், அங்கிருந்த சிங்களவர்களுக்குக் கொடுத்த தொல்லை என்ன? எதுவுமேயில்லை!

திருவொற்றியூரைச் சேர்ந்த தனபதி ஒரு தொழிலாளி! அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்! அவரும் அவருடன் சென்றவர்களும் கதிர்காமம் கண்டு திரும்பும் வழியில் அவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து பழுது பட்டுவிடுகிறது! அதைப் பழுது பார்க்க விட்டு விட்டு தனபதியும் வேறு இருவரும் ஒரு முடியலங்காரச் சாலைக்குச் செல்கிறார்கள்! தனபதி முகச் சவரம் செய்து கொண்டு, மற்ற இருவருக்காக வெளியில் உள்ள பலகையில் அமர்ந்து காத்திருக்கிறார்.

அப்போது சிங்கள வெறியர்கள், கையில் கோடரியுடன் கூட்டமாக வருகின்றனர். தனபதியைக் கண்டதும் "ஆ! அதோ ஒரு தமிழன்!" என்ற ஆத்திரம் பீறிட்டெழுகிறது! மான் குட்டி மீது பாயும் ஓநாய்களைப் போல் பாய்கின்றனர்! இரத்தம் கொப்பளிக்கிறது! சிங்களவர் கோடரிக்குக் குருதி

குளிப்பாட்டல் நடைபெறுகிறது! தனபதி-அய்யோ-அந்தத் தமிழன்—இலங்கையின் வளம் காணப் போனவன்! ஐந்து பிணந்தின்னும் கழுகுகளின் தினியாகிறான்!

தனபதி செத்து மடிவதைக் கண்டு கடைக்குள்ளிருந்த அவரது நண்பர்கள் வெளியே ஓடி வருகின்றனர். அந்தத் தமிழர்களையும் கொன்று குவிக்கச் சிங்களவர்கள் பாய்கின்றனர், ஆனால் அவர்கள் தப்பி விடுகின்றனர்.

அருகில் உள்ள காவல் நிலையத்திற்குச் சென்று கதறியிருக்கிறார்கள் தப்பிப் பிழைத்தவர்கள்! காவல் துறையினர் அது பற்றிக் கவலைப் பட்டுக் கொள்ளவே இல்லையாம்!

எப்படிக் கவலைப்படுவார்கள்? தமிழர்களை நிலைகுலையச் செய்து அடக்கி ஒடுக்கத் திட்டமிட்டுக் கொண்டு ஆட்சியாளர்களே வன்முறைகளுக்குத் தூபமிடுகின்ற அந்தத் தீவில்—மின்னையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகின்ற காரியம்தான் நடைபெறுகிறதே தவிர, சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படுவதாக ஏமாளிகூட ஏற்றுக்கொள்ள இயலாது!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பகைமூட்டிட இடையில் யாரோ சதி செய்கிறார்கள் என்பதெல்லாம் இலங்கை அரசின் திசை திருப்பும் பேச்சேயாகும்!

இலங்கை அரசுதான்! தமிழனை நாதியற்றவன் எனக் கருதிக் கொண்டு 'அவனைக்கொலை செய்து—மானபங்கம் செய்து—அடக்கு முறைக்கு ஆளாக்கி—அவன் உடமைகளை ஊருத்தெரியாமல் ஆக்கி—அழித்து ஒழித்து விடலாம் எனத் திட்டம் வகுத்திருப்பதைப்போல் தெளிவாகத் தோன்றுகிறது!

தமிழர் நூல் நிலையங்கள் தீக்கிரை-ஆலயங்கள் சேதம்-தமிழர்கள் படுகொலை-கற்பழிப்பு-இலங்கைத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்தை கழுவில் ஏற்றிக் கொல்ல வேண்டும் என்று இலங்கை நாடாளுமன்றத்திலோ ஆளுங்கட்சியின் ஆணவப் பேச்சு-தமிழனைக் கண்டாலே கொல்வது என்ற திட்டத்திற்கு உதாரணமாக இதோ தனபதியின் உயிர்ப்பலி!

இவ்வளவும் செய்துவிட்டு இலங்கை அரசு சாகச நாடகம் ஆடுகிறதென்றால்—

தமிழன் நாதியற்றவனு?

என்ற கேள்விக்கு விடை காண வேண்டிய விரைவு மிருந்த கட்டம் வரத்தான் போகிறது!

வரத்தான் வேண்டும்!

அன்புள்ள

மு. கு.

(தலைவர் கலைஞர் 27.8.81 அன்று எழுதிய கடிதம்)

★

இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே!

உடன் பிறப்பே,

- அவர்களிடம் எத்தப் பொருளையும் விலை கொடுத்து வாங்கக் கூடாது!
- அவர்களுக்கு எந்தப் பொருளையும் விற்கக் கூடாது!
- அவர்களில் டாக்டர்களாயிருப்பவர்களிடம் சிகிச்சைக்கு செல்லக் கூடாது!
- அவர்களில் வழக்கறிஞர்களாயிருப்பவர்களையும் வழக்குகளுக்கு நாடக் கூடாது!
- அவர்களில் பொறியாளர்களாக இருப்பவர்களிடம் அணுகக் கூடாது!
- அவர்களுக்கு வேலை வாய்ப்பு தரக் கூடாது!
- அவர்களுக்கு நிலத்தை விற்கக் கூடாது?
- அவர்கள் விளைவித்ததை வாங்கக் கூடாது!
- அவர்களுக்கு விதைகளை விற்றிடக் கூடாது!
- அவர்களிடம் அடமானம் கடன் இவான்ற காரியங்கள் எதிலும் தொடர்பு கொள்ளக் கூடாது!

இப்படிப் பத்துக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன! எங்கேயென்று தெரிந்துகொள்வதற்கு முன்பு

''அவர்கள்'' என்று குறிப்பிட்டிருப்பது யாரையென்று தெரிந்து கொள்ள வேண்டாமா?

''அவர்கள்'' என்பது, தமிழர்களையும், முஸ்லீம்களையும் குறிப்பதாகும்!

இந்த விளக்கத்திற்குப் பிறகு—மேலே குறிப்பிடப் பட்டுள்ள வேதனை தரும் பத்துக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ள இடம் இலங்கைத் தீவுதான் என்பதை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

A way to fight ''EELAM'' என்ற தலைப்பில் சிங்களவர்கள் வெளியிட்டுள்ள துண்டு அறிக்கையில் தான் இந்தப் பத்துக் கட்டளைகள் அச்சியற்றப் பட்டுள்ளன.

அந்தத் துண்டு அறிக்கையின் முகவுரையாக எழுதப் பட்டிருக்கிற வாசகங்கள் பயங்கரமானவை! சிங்களவர்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும் நஞ்சினை உலகிற்கு உணர்த்தக் கூடியவை! இதோ அந்த வரிகள்!

''ஈழம் வேண்டுமென்ற கூப்பாடு, கண்டிக்கத் தக்க ஒன்று! நேரிடையான பகைவர்கள்—மறைமுகமான பகைவர்கள்—அதாவது தமிழர்களும் முஸ்லீம்களும் ஆகிய இருசாராரையும் ஒரேயடியாக ஒழித்து கட்ட வேண்டும். இந்தப் பொதுவான காரியத்தையொட்டி அனைத்துச் சிங்களவர்களும் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுதான்!

நம்முடைய கோரிக்கையில் வெற்றி பெற நாம் ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்த வேண்டாம்! தமிழ் ஈழத்தை எதிர்க்கக் கூடிய உறுப்பினர்களை தேசியப் பேரவைக்கும், மற்ற ஜனநாயக அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கக்கூடிய காலம் வரும் வரையில் முழுமையான பொருளாதாரத்துறைப் புறக்கணிப்பு மூலம் தமிழர் முஸ்லீம் ஆகிய இரட்டை எதிரிகளை முறியடிப்போம்!''

இந்த முகவுரையைத் தொடர்ந்துதான், சிங்களவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பத்து அம்சத் திட்டத்தை அந்தத் துண்டு அறிக்கை, பிரகடனப்படுத்துகிறது.

எத்துணைச் சீற்றமும் வெறித்தன்மையும் வெறுப்பும் கலந்த தாக்குதல்களுக்கு இலங்கைத் தமிழர்கள் ஆளாகி

வருகிறார்கள் என்பதற்கு இந்தத் துண்டு அறிக்கை மற்றொரு எடுத்துக் காட்டாகும்.

"The cry for EELAM is Ridiculous and it is time all Singalese united in one Common cause to stamp out for all time This twin cause, the known and unknown Enemies, namely the Tamils and Muslims".

சிங்களவர் ஒன்றுபடுதல்! தமிழர்களையும் முஸ்லீம்களையும் ஒழித்துக் கட்டிப் பூண்டற்றுப் போகச் செய்தல்! இது இலங்கையில் தீட்டப்பட்டுள்ள திட்டம்!

இந்தத் திட்டம் திறைவேற சிங்களவர் ஒரு சொட்டு ரத்தம் கூட சிந்திடக் கூடாதாம்!

அங்கு தவித்திடும் தமிழர்களும், இங்கிருந்து சென்றிடும் தனபதிகளும் மட்டுமே ரத்தம் சிந்தி மாண்டிட வேண்டுமாம்!

ஆதிக்கவாதிகளின் பலமுனை ஆக்கிரமிப்புக்களால் தேய்ந்து தேய்ந்து மேலும் தேய்ந்து கொண்டிருக்கும் தமிழினத்துக்கு விமோசனமே கிடையாதா என்ற கேள்வி, பெருமூச்சுடன் வெளிப்பட்டுக் கண்ணீரால் குளிப்பாட்டப் படுவதை கண்ட பிறகாவது—தூங்கிடும் தமிழன் விழித்துக் கொள்ள மாட்டானோ?

இந்தக் கேள்வியின் விளைவுதான் இன்று 29.8.81 காலை பத்து மணிக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் சித்தாபதி எம். எல். சி தலைமையில் என். வி. என். சோமு எம். எல். ஏ பொன்னுரங்கம் எம். எல். ஏ புருடோத்தமன் எம். எல். ஏ, மாணவர் அணிச்செயலாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவிருக்கிற அடையாள மறியல்!

அற வழி!
அமைதி வழி!
அண்ணா வழி!

அவ்வழி பிறழோம் என்பதற்கு அடையாளமாக அண்ணா சிலையிலிருந்து அண்ணாசாலை வழியாக!

இலங்கையில் தமிழர்கள்மீது விழும் ஒவ்வொரு அடியும் நமது நெஞ்சில் இடியாக விழுகிறது!

இலங்கையில் கொல்லப்பட்ட பத்து தமிழர்களின் பிணங்கள் வேதாரண்யம் கடற்கரையில் ஒதுங்கியிருப்பதாக எனக்கு நண்பர் மீனாட்சிசுந்தரம் கொடுத்துள்ள தந்தி குறித்து நமது சிறப்பாசிரியர் சட்டமன்றத்தில் குறிப்பிட்டுள்ள செய்தியையும் நீ அறிவாய்!

கல்லால் தாக்குண்ட குழந்தை தாயின் முகத்தைப் பார்த்துக் கதறியழுவதைப் போல இலங்கைத் தமிழ்க்குலம் அழுகிறது!

அதனை வேடிக்கை பார்த்திடும் வீணர்கூட்டமல்ல இங்குள்ள தமிழர் கூட்டம் என்பதை எடுத்தியம்பவே அறப்போர்—அடையாள மறியல்!

துளியளவு வன்முறைக்கும் இடமின்றி- துன்பங்களைத் தொலைக்களைத் தாங்கிக் கொள்ளும் தியாக உள்ளத்துடன் அடையாள மறியலுக்கு அணிவகுப்போர்.

''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றுதல் கண்டே''

என்று பாடிய பாவேந்தர் கவிதையைச் செயல்படுத்திக் காட்டிடுவீர்.

அன்புள்ள

மு.க.

(தலைவர் கலைஞர் 29.8.81 அன்று எழுதிய கடிதம்)

★

இலங்கைத் தமிழர் பிரச்னை சட்ட மன்ற நிகழ்ச்சி!

அம்பிகாபதி (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி):- இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு ஆபத்தான நிலைபற்றி நாம் விவாதித்தோம். சர்வகட்சிகளும் சேர்ந்து தமிழகம் தழுவிய அர்த்தால் நடத்தலாம் என்று முதலமைச்சர் அறிவித்தார். சகல கட்சிகளும் அதை வரவேற்று ஒப்புதல் தெரிவித்தோம். தனபதி என்ற தமிழர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்த நிலையில் தமிழ் மக்கள் உணர்வைப் பிரதிபலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது

உமாநாத்

உமாநாத் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி):- முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரிவித்ததற்கிணங்க அர்த்தால் நடத்தவதற்காக தேதி குறிப்பிட எதிர்க்கட்சிகளையெல்லாம் அழைப்பார் என்று எதிர்பார்த்தோம். ஆனல் அழைப்பு எதுவும் இல்லே. ஆனல் நேற்று முதலமைச்சர் என்ன பேசியிருக்கிறார் என்றால், எந்தக் கட்சியும் பதில் சொல்லவில்லே என்று பேசியிருக்கிறார். ஆகவேதான் நாங்கள் தயார் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அவர் சொல்கிறார். நாங்களும் தயார் என்று சொல்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர்

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர்:— தலைவர் அவர்களே, நண்பர் அம்பிகாபதி அவர்களும், நண்பர் உமாநாத் அவர்களும் பேசியதை யொட்டியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அரசு நிகழ்ச்சியிலே தெரிவித்துள்ள கருத்துக்களையொட்டியும் நானும் ஒரு சிலவிவரங்களை இந்த அவையின் முன்னுல் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் அழைப்புக் கடிதமே வரவில்லே என்று சொன்னுர்கள். பதில் கடிதம் வரவில்லே என்று முதல்வர் பேசிய செய்தி பத்திரிகையில் வந்த பிறகு, அப்படி ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று தேடிப் பார்த்தேன். ஏறத்தாழ நான்கைந்து நாட்களாக நானும், எங்கள் கட்சியின் துணைத்தலைவரும் மற்ற உறுப்பினர்களும் இந்த அவையில்தான் இருக்கிறோம். அவையிலோ அல்லது எதிர்க்கட்சித்தலைவர் அறையிலோதான் இருக்கிறோம். அவை முன்னவரோடு பேசிக் கொண்டு இருந்திருக்கிறோம். முதலமைச்சரும் இங்கே இருந்திருக்கிறார். அப்போதெல்லாம் எந்தத் தேதியில் அர்த்தால் வைத்துக் கொள்வது என்பது பற்றி எங்களிடம் கலந்து ஆலோசிக்கவில்லே. ஆனல் இன்று தேடிப் பார்த்த பிறகு வீட்டிலே கிடைத்த ஒரு கடிதம் ஒரு அதிகாரியால் எழுதப்பட்டிருக்கிற கடிதம். அவர் ''அன்பார்ந்த திரு கருணுநிதி'' என்று விளித்து எழுதியிருக்கிறார். ஆங்கிலத்தில் ''டியர் கருணுநிதி'' என்று எழுதுவதைப் போல அப்படியே தமிழாக்கம் செய்து எழுதியிருக்கிறார். அதில் ஒன்றும் நான் குறைவாக கருதவில்லே. அந்த கடிதத்தில்—

"அன்பார்ந்த திரு. கருணாநிதி,

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கும், அநீதிக்கும் கண்டனம் தெரிவிக்கும் வகையில் பொது அர்த்தால் ஒன்று மாநில அளவில் நடத்துவது என்று சட்டமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது. அவ்வகையில் அந்த பொது அர்த்தாலை என்றைக்கு நடத்துவது என்று முடிவு செய்வதற்காக சட்டமன்ற அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நாளைப் பிற்பகல் (26-8-81) வைத்துக் கொள்ளலாமா என்பது பற்றிய தங்களது கருத்தினை முதலமைச்சர் அறிய விரும்புகிறார்கள். தங்களின் கருத்தினை தெரிவிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

என்று வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு ஒரு கடிதம் எழுதி, நான் ஒரு தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டு, ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் ஒவ்வொரு தேதியைக் குறிப்பிட்டு பதில் கடிதம் எழுதி, முடிவெடுப்பது என்றால் அது நிச்சயமாக விரைவில் நடக்காது. அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட நடைபெற்றது. அதிலே கூட கலந்து பேசியிருக்கலாம். அர்த்தாலை தி. மு. கழகமோ மற்ற எந்த எதிர்க்கட்சிகளோ நிராகரிக்கவில்லை. ஒத்துழைப்பதாகத் தான் கூறியிருக்கிறோம். இன்றைக்கும் அந்த ஒத்துழைப்பைத் தர நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அர்த்தால் என்று முதலமைச்சர் அறிவித்த பிறகு கூட தமிழகத்தில் உள்ள மாணவர்கள், தொழிலாளர்கள், வேறு பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைப் பிரச்சினைக்காக ஆர்ப்பாட்டங்களை, கண்டனக் கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அதைப் போலத்தான் தி. மு. கழகம் இன்றைக்கு ஒரு மறியலை அடையாளமாக ஒருநாள் நடத்த அனுமதி கேட்டது. ஆனால் அதற்கும், அதற்கு முன் நடத்தவிருக்கின்ற ஊர்வலத்திற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. நேற்று இரவு நூற்றுக்கணக்கான தி. மு. கழகத்தோழர்கள், தோண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது எல்லாம் இந்தப் பிரச்சினையில் இங்குள்ள தமிழர்களெல்லாம் ஒன்றுக இருக்கிறோம் என்பதற்கு அடையாளம் ஆகாது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கரையா

சங்கரையா:-இதைப் போன்றதொரு கடிதம் எனக்கும் வந்து, நான் உடனே மறுநாள் முதலமைச்சரின் தனிச்செயலாளர் பரமசிவம் அவர்களுடன் தொடர்பு கொண்டு எப்போது வைத்துக் கொள்ளுகிறீர்கள்? தகவல் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறேன். முடிவு செய்த பிறகு சொல்கிறேன் என்று கூறினர். அவ்வளவு தான்.

நெடுமாறன்

நெடுமாறன்(காமராஜ் காங்கிரஸ்:)-26-ஆம் தேதி பிற்பகலில் இந்தக் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டு, அரசு தரப்பிலிருந்து 26-ஆம் தேதி அன்று காலை நான் சட்டசபைக்கு வந்த பிறகு 11மணி அளவில் என்னுடைய இல்லத்தில் இந்தக் கடிதத்தைக் கொண்டு போய் கொடுத்திருக்கிறார்கள். நான் அன்று மாலை வீட்டிற்கு போன பிறகு அந்தக் கடிதத்தைப் பார்த்தேன். அதற்குப் பின்னால் இப்படி ஒரு கூட்டம் ஏற்பாடாகியிருக்கிறதா என்று முதலமைச்சர் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு கேட்ட போது, அவர்கள் இன்னும் ஏற்பாடாகவில்லை என்று தெரிவித்தார்கள். இந்தக் கடிதம் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்ட தாமதத்தின் விளைவாகத்தான் யாருமே அரசாங்கத்திற்கு உரிய நேரத்தில் பதில் கொடுக்க முடியவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

ஹாஜாசெரீப்

ஹாஜா செரீப் (இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர்): ஒவ்வொரு தலைவர்களுக்கும் எப்போது வைத்துக் கொள்ளலாம் எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்று கேட்பதற்குப் பதில் ஒரு தேதி ஒரு நேரம் குறிப்பிட்டு, ஒரு இடத்தையும் குறிப்பிட்டு எழுதினால் அந்தத் தேதியில் வந்து விடுகிறோம்.

பண்ருட்டி

பண்ருட்டி ராமச்சந்திரன்.— இலங்கையில் தமிழர்கள் படுகின்ற அவதிகுறித்து எந்த நடவடிக்கையாலும் அதில் எல்லோரும் ஒன்றுகச் சேர்ந்து செயல்பட வேண்டும் என்கிற

உணர்வினை இப்போதும் அனைத்துக் கட்சியினரும் தெரிவித்த தற்காக நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன், முதலமைச்சர் அன்று இந்தப் பிரச்சினைபற்றி பேசியபோது, தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றுவதைவிட மக்களும் நம்மோடு இருக்கிறார்கள் என்கிற உணர்வினை நிரூபிக்கும் வகையில் ஒரு நாள் கதவடைப்பு செய்யலாம் என்ற கருத்தை எடுத்து வைத்தார்கள். அது சம்பந்தமாக அனைத்துக் கட்சி தலைவர்களோடும் கலந்து பேசி அந்த நாளை நிர்ணயிப்பது என்ற அடிப்படையில் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தை இங்கே எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் படித்துக் காட்டினார்கள். அந்தக் கடிதம் அரசின் பொதுத் துறையிலேயிருந்து அவர்களுக்குப்போய் இருக்கிறது.

அதற்கு மாறாக முதலமைச்சரே கையெழுத்திட்டுக் கூட டி. ஒ. லெட்டர் என்று சொல்வார்கள்-அந்த அடிப்படையில் கடிதம் எழுதியிருந்தால் நன்றாக இருக்கும் என்ற உணர்வினை அவர்கள் பேசியபோது என்னால் உணர முடிந்தது. அவர்களும் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். பொதுத்துறை பைலிலே வருகிற போது அதை ஏற்றுக்கொண்டு உத்தரவு இடுகிறபோது அந்த கடிதங்களுக்கு நகல்களாக ஆக்கிஅதிலே பொதுத்துறையை சேர்ந்த செயலாளர் கையெழுத்துப் போடுவது வழக்கம். அந்த வகையிலேதான் வந்திருக்கிறதே தவிர வேறல்ல. அதை அவர்கள் ஒரளவிற்கு கண்ணியக் குறைவாகக் கருது வார்களானால், அதற்காக உண்மையிலேயே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அந்தக் கடிதத்திலே அவர்கள் சொன்னதைப் போல ஆங்கில நகலை தமிழிலே மொழி பெயர்த்திருக்கிறார்கள். அந்த வகையில் நேர்ந்துவிட்டதவறே தவிர வேறல்ல. மற்ற கட்சிக்காரர்களும் இந்திராகாங்கிரஸ் கட்சித்தலைவரும் எடுத்து சொல்கிறபோது, நீங்கள் ஒரு தேதியை குறிப்பிட்டு அழைப்பதுதானே என்று சொன்னார்கள். அந்தத் தேதி வசதிப்படவில்லை என்று வந்து விடுமே என்பதற்காகத்தான் எல்லோருடைய சௌகரியத்தையும் உத்தேசித்து கூட்டுவது தான் சரி என்ற முறையில் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக் கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் இங்குள்ள தமிழர் ஒன்றுதல் என்பது இதுதானா? எங்களுடைய அடையாள மறியலுக்கும்

ஊர்வலத்துக்கும் தடை விதிப்பது முறைதானு? என்று கேட்டார்கள். இந்தப்பிரச்சினையில் நாமெல்லோரும் ஒன்று பட்டு இங்கே பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறபோது நீங்கள் மட்டும் தனியே ஊர்வலம் போவது முறைதானு? நீங்கள் ஏன் உங்களைத்தனியாகப் பிரித்துக் கொள்கிறீர்கள்? ஊர்வலம், அடையாள மறியல் என்ற செய்தி ஓரிரு தினங்களுக்கு முன்னுல்தான் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது. சட்டசபை நடக்கிறபோது பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் பிரச்சினைகளை எழுப்புகிற முழுஉரிமையை நீங்கள் பெற்றிருக்கிறபோது, வெளியே ஒரு ஊர்வலம்தேவைதானு? மற்றவர்கள் சட்டசபைக்கு வரமுடியாத கட்சியினர் செய்யலாம்.

கைது பற்றி குறிப்பிட்டார்கள்-எந்த ஊர்வலத்திலும் அதுவும் குறிப்பாக மறியல் என்று சொல்கிற போது— அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவல் அது தொடர்ந்து நடத்தப் போவதாக தகவல் கிடைத்தது. ஆனுல் எதிர்க்கட்சித் தலைவர் அடையாள மறியல் என்று சொன்னார்கள். இப்படி தனித்து நின்று பிரச்சினைகளைக் கிளப்புகிற போது, அதில் சமூக விரோத சக்திகளும் சேர்ந்து எந்த அசம்பாவிதத்தையும் செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல.

உண்மையை சொல்லவேண்டுமானுல் இலங்கைக்கு சென்று இறந்துவிட்ட தனபதி- எங்களுடைய சொந்தப் பிணம்; நாங்களேசும்மா இருக்கிறபோது நீங்கள் ஏன் இப்படி ஆர்ப்பாட்டம் நடத்துகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

கலைஞர்

எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர்:- தலைவரவர்களே அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்த பிறகு நானும் அதற்கு பதிலளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சட்டமன்றம் கூடுவதற்கு முன்பே நம்முடைய அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் என்னைச் சந்தித்து, தான் ஒரு தனி நபர் தீர்மானம் இலங்கையைப் பற்றித் தரப் போவதாகவும், அதற்கு தி.மு.கழகம் தன்னுடைய ஆதரவைத் தரவேண்டுமென்றும் நல்ல எண்ணத்தோடு அணுகிக் கேட்டார். அப்போதுநான் அவரிடம்இப்படி ஒவ்வொரு கட்சியும்

தனித் தனியாகத் தீர்மானம் கொண்டு வருவதை விட அரசாங்கமே ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் அது மிகத்தவும் பயனுள்ளதாக இருக்கும். அனைவரும் வரவேற்றுப் பேசலாம். அதற்கு ஆவன செய்வோம் என்று சொன்னேன். அதிலிருந்து புரிந்துகொள்ளலாம். இந்தப் பிரச்சினையை நாங்கள் கட்சி நோக்கத்தோடோ கட்சி இலாபத்தோடோ அணுகவில்லை என்பதை அவரும் அதற்கு ஒத்துக் கொண்டார். பிறகு அரசின் சார்பாக தீர்மானம் வந்து அனைவரும் வரவேற்றிருக்கிறோம்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு கட்சியிலும் உள்ள தமிழர்கள் தங்களுடைய உணர்வைக் காட்டிக்கொள்வது, அரசு எடுத்துள்ள முடிவிற்கு மேலும் வலுவைத் தருமேயல்லாமல்—வலுவைக் குறைக்க நிச்சயமாக அவைகள் பயன்பட மாட்டா. காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்கட்சி நண்பர் குமரிஅனந்தன் தலைமையில் உள்ள கட்சிகூட, இலங்கைத் தூதுவராலயத்திற்கு முன்னால் ஒரு நாள் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தி, அது பத்திரிகைகளில் புகைப்படங்களாக வெளிவந்திருக்கின்றன.

இங்கே தீர்மானம் நிறைவேற்றிய பிறகு கூட—எனக்கு நினைவு—தி.மு.கழகம் அல்லாதவேறு பல கட்சிகள் எல்லாம் சேர்ந்து இலங்கைத் தமிழர்கள் சித்திரவதை குறித்து ஒரு கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய கட்சி சார்பிலே கண்டனத்தை தெரிவிப்பதும், அனைத்துக்கட்சிகளும் அரசு உட்பட ஒட்டு மொத்தமாக ஒரு நாள் அர்த்தால் கடைப்பிடிப்பதும் இலங்கை தமிழர்களுக்கு சாதகமான விவகாரமே தவிர பாதகமான விவகாரம் அல்ல.

சமூகவிரோதிகள் கைது செய்யப்படுவதாக அமைச்சர் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வட்டச் செயலாளர்கள், பகுதிக்கழகச் செயலாளர்கள் எல்லாம் கூட — எனக்கு வந்துள்ள தகவல்படி இரவு ஒரு மணிக்கே கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். நான் கூட என்னுடைய அறிக்கையிலே திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கிறேன். மறியல் செய்கின்ற இடத்தில் — போலீசார் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற உதவி செய்யும் வகையில் — தூதுவராலயத்தில் நுழைந்து விடாமல் பாதுகாக்க மறியல் செய்யப் போகின்றவர்களை தடுத்து நிறுத்தி கைது செய்வது எப்போதும் நாங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறைதான்.

அதைத்தவறு என்று சொல்லவில்லை. ஆனால் ஊர்வலம் புறப்படுவதையே தடுப்பதும், இரவே கைது செய்யப்படுவதுமான முறை சரிதானா என்றுதான் கேட்கிறேன். இதற்கும் அர்த்தாலுக்கும் எந்தவிதமான முரணும் கிடையாது. அர்த்தால் நடக்கின்ற நேரத்தில் நிச்சயமாக தி.மு கழகம் ஒத்துழைப்பு தரும். ஆனால் எல்லா கட்சித் தலைவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல 25ம் தேதி அன்று ஒரு கடிதம், 26ஆம் தேதி வைத்துக் கொள்ளலாமா என்று கேள்வி கேட்டு எழுதுவது என்பது, முதலில் அர்த்தால் என்று அரசின் சார்பில் எடுத்துச் சொல்லிவிட்ட போதிலும், அதனை நடத்துவது பற்றி ஒரு மனநிறைவான கருத்து இல்லையோ என்ற சந்தேகத்தைத்தான் எங்களுக்குத் தோற்றுவிக்கிறது

பண்ருட்டி இராமச்சந்திரன்:- 25-ஆம் தேதி கடிதம் எழுதி 26ம் தேதி அழைப்பது என்பது எப்படி தவறான காரியமாகும்?

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர்.- 26-ஆம் தேதி கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா என்று எங்களுக்கு எழுதி ஹாஜா செரீப் அவர்களுக்கு எழுதி, சங்கரையா, அழகிரிசாமி, குமரி அனந்தன், நெடுமாறன், மற்றும் முஸ்லீம்லீக் உறுப்பினருக்கு, ஜனதா கட்சி உறுப்பினருக்கு, இவர்களுக்கெல்லாம் எழுதி, ஒவ்வொருவரும் தங்களுக்கு இந்த தேதி வசதி, இந்த தேதி வசதி என்று தேதி குறிப்பிட்டு பதில் எழுதினால் அதற்கு முடிவு என்னவாகும். நீங்களே ஒரு தேதியை குறிப்பிட்டு எழுதிவிட்டால் எனக்கு வசதிப்பட்டால் நான் வருகிறேன். இல்லாவிட்டால் எங்கள் கட்சியின் துணைத்தலைவர் வருகிறார். அப்படி ஏற்பாடு செய்யப் பட்டிருக்க வேண்டுமேயல்லாமல், வைத்துக் கொள்ளலாமா? என்பதற்கு ஒரு ஆலோசனை என்பது சிலை வைப்பதற்கு பீடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டலாமா என்பதைப் போலத்தான் இருக்கிறது.

பேராசிரியர்

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர்:- ஆளும் கட்சிசார்பில் ஒரு நாளைக் குறிப்பிட்டு, இந்த தேதியில் அர்த்தால் நடைபெறும். 31—ஆம் தேதி நடக்கும் என்று சொல்லிவிட்டால் இதற்காக ஒரு கூட்டமே தேவையில்லை—31 ஆம்தேதி நடத்தலாம் என்று நான் ஆலோசனையைச் சொல்கிறேன்.

பேரவைத் தலைவர்:— 31-ஆம் தேதி சட்டமன்றம் இருக்கிறது. அதுமுடிந்த பிறகு வைத்துக் கொள்ளுங்கள்.

பண்ருட்டி ராமச்சந்திரன்:- அந்த தேதியை இங்கே சட்டப்பேரவையில் அறிவிக்க அரசு தயாராக இருக்கிறது.

இளையபெருமாள் (இந்திரா காங்கிரஸ்):-எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரி எழுதிய கடிதம் பற்றிச் சொல்கிற போது ஆங்கிலத்தின் தமிழாக்கம் என்று அமைச்சர் பிசான்ஞர். அன்பார்ந்த கருணாநிதி என்றுதான் அந்தக் கடிதத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் என்று கூட எழுதவில்லை. அமைச்சர் அவர்கள் கூட, ''அது தவறு என்றுகருதுவாரேயானால் வருத்தம்தெரிவிக்கிறேன்'' என்று தான் சொன்ஞர். தவறு என்பதை அமைச்சர் ஒப்புக்கொள்கிறாரா? அந்த அதிகாரி செய்தது சரி என்கிறாரா?

எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய பெயர் சம்பந்த பட்ட விஷயம் என்பதால் கேட்க கூச்சப்படலாம். அது இந்த அவையின் மரியாதையைப் பொறுத்தது. எதிர்க்கட்சி தலைவர் தனக்காக எப்படி வாதிட முடியும்? ஒரு அரசாங்க அதிகாரி எழுதியிருக்கிறார்.

பண்ருட்டி இராமச்சந்திரன்:- நான் முதலில் சொன்ன ஆங்கில இலக்கணத்தால் வருகிற தவறு இது. முதவரியில் டாக்டர் எதிர்க்கட்சித் தலைவர் என்று போட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர்:—இலங்கையில் உள்ள தமிழர்களுக்கான பிரச்சினை பற்றிப் பேசும் போது நான் என்னுடைய மரியாதைக்காக கவலைப்படுகின்ற பிரச்சினையாக மாறிவிடக் கூடாது என்று கருதுகிறேன். முதலமைச்சரோ மற்ற அமைச்சர்களோ கடிதம் எழுதுவதாக இருந்தால் கூட இப்படி எழுத மாட்டார்கள். அதிகாரி அப்படித் தான் எழுதியிருக்கிறார். அப்படித்தான் எழுதுவார்- ஆங்கில மொழி பெயர்ப்பை இப்படி தமிழுக்கு கொண்டு வரக்

கூடாது: யாருக்கு எழுதினாலும் முறையாக எழுதுவது நல்லது: அதிகாரிகளுக்கு அப்படிப்பட்ட குறிப்புகளை அரசின் சார்பில் தர வேண்டும்.

நெடுமாறன்:—இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆளுங் கட்சி எதிர்க்கட்சி, எல்லோரும் ஒன்று பட்டு இருக்கிறோம் என்பதைக் காட்ட, 31-ஆம் தேதி அர்த்தால் நடத்தி விடலாம்.

பேரவைத் தலைவர்

பேரவைத் தலைவர்.- அதனைக் கூடிப்பேசி செய்து கொள்ளலாம்.

பண்ருட்டி ராமச்சந்திரன்:-31-ஆம்தேதி தலைவர் தெரிவித்த மாதிரி சட்ட சபை நடக்க வேண்டும். அர்த்தால் என்று சொல்லி விட்டால் சட்டசபை நடத்த முடியாது.

★

தடை உடைந்தது! கழகத்தவர் கைது!

சென்னை ஆக, 29—

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்து சென்னை மாவட்டக் கழக சார்பில் ஏற்பாடு செய்திருந்த பேரணியில் கலந்து கொள்ள தமிழக அரசின் தடை உத்தரவையும் மீறி — பல்லாயிரக் கணக்கான கழகத் தோழர்கள் வந்து குழுமினர். இவர்களில் மாவட்டச் செயலாளர் ஆர். டி. சீதாபதி சட்டப் பேரவை உறுப்பினர்கள் என். வி. என். சோமு, து. புருடோத்தமன் கழக மாணவர் அணிச் செயலாளர் இரா. கணேசன் உட்பட 250 பேரை மட்டுமே போலீசார் கைது செய்தனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்றிரவே 200 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திவரும் இனவெறி படுகொலையைக் கண்டித்து இன்று காலை அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலையிலிருந்து சென்னை மாவட்டச் செயலாளர் ஆர். டி சீதாபதி தலைமையில் எழுச்சியும், உணர்ச்சியும் மிகுந்த கண்டனப் பேரணி நடைபெற்றது.

காவல்துறை தடையையும் மீறி நடந்த கண்டனப் பேரணியில் 250க்கும் மேற்பட்ட கழகத் தோழர்களை போலீசார் கைது செய்தனர்.

சென்னை மாவட்டக் கழகம் அறிவித்ததற்கிணங்க இலங்கையில் நடைபெறும் தமிழினப் படுகொலையைக் கண்டித்து நடைபெற்ற பேரணியில் பங்கேற்க அதிகாலையிலிருந்து பல்லாயிரக் கணக்கான கழகத் தோழர்களும், மகளிர் அணியினரும் சென்னை அண்ணாசாலை கழக சட்டமன்ற கட்சி அலுவலகம் முன்னால் அணி திரண்டனர்.

அண்ணா சாலையெங்கும் ஆயுதம் ஏந்திய போலீசார், குதிரைப் படையினர் பெருமளவில் திரண்டு நின்று பேரணிக்கு வருவோரை விரட்டிக் கொண்டிருந்தனர். எனினும் எழுச்சியும் உணர்ச்சியும் பொங்க கழகத் தோழர்களின் இன உணர்வை வெளிப் படுத்தும் வகையில் பல்லாயிரக் கணக்கில் அணி திரண்டு வந்தனர்.

சுமார் 11 மணியளவில் கழக சட்டமன்ற அலுவலகம் முன்னால் இருந்து கழகத் தோழர்கள் அண்ணா சாலை நோக்கி அணிவகுத்துச் சென்றனர்.

முன்னதாக கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக், துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார் ஆகியோர் முன்னிலையில் பேரணிக்கு தலைமையேற்ற ஆர். டி. சீத்தாபதிக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் என். வி. என். சோமு, புருடோத்தமன், கழகமாணவர் அணிச்செயலாளர் ஆர். கணேசன் ஆகியோருக்கும் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மாலையணிவித்து வாழ்த்தி அனுப்பிவைத்தார்.

அப்போது கழக சட்டப்பேரவை-மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னணித் தலைவர்கள் ஆகியோர் இருந்தனர்.

''தலைவர் கலைஞர் வாழ்க!'' ''பேராசிரியர் வாழ்க!'' ''சாதிக் வாழ்க!'' ''நாஞ்சிலார் வாழ்க!'' என்று கூடி

யிருந்த கழகத் தோழர்கள் வாழ்த்து முழக்கங்கள் எழுப்பினர்.

பேரறிஞர் அண்ணா சிலையை நோக்கி பேரணி புறப் பட்டது, பேரணியின் முன்னால் ''இலங்கையில் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து தி.மு.க. அடையாள மறியல்,, என்று பொறிக்கப்பட்ட பெரும் பதாகையை கழகத் தோழர்கள் பிரகாசமும், அறிவு மணியும் ஏந்தி வந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களும், மகளிர் அணியினரும் ''சிங்கள வெறி யர்களே! இலங்கைத் தமிழர்களை கொடுமைப் படுத்தாதீர்!'' ''இந்தியப் பிரதமரே அவர்களே! இலங்கைத் தமிழர் களுக்கு பாதுகாப்பு கொடுங்கள்!'' ''தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!'' ''இலங்கைத் தமிழரைக் கொடுமைப் படுத்தாதே'' ''தமிழக அரசே! கலைஞர் நடத்தும் கண்டனப் பேரணிக்குத் தடை போடாதே!''

என்று உணர்ச்சிகரமான முழக்கங்களை எழுப்பி வந்தனர்.

பேரணிக்கு அரசு போட்டிருந்த தடையையும் மீறி— கழகத்தோழர்கள்—மடை திறந்த வெள்ளம் போல் அண்ணா சாலைக்கு வந்தனர்.

அண்ணா சாலையில் குவிக்கப்பட்டிருந்த போலீசார் ஊர்வலத்தினரை வளையம்போல் சூழ்ந்து நிறுத்தினர்.

இந்தத்தடையினையும் மீறி இனஉணர்வுமிகுந்த கழகத் தோழர்கள் முன்னேறிச் சென்றனர்.

உடனே போலீசார் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டி ருப்பதை நினைவுபடுத்தி, தடையை மீறிய கழகத்தோழர் களையும், மகளிர் அணியினரையும் கைது செய்து லாரிகளில் ஏற்றிச் சென்றனர்.

இதே நேரத்தில் தடையை உடைத்துக் கொண்டு ஆர்.டி.சீதாபதி, என்.வி.என்.சோமு, து.புருடோத்தமன், இரா.கணேசன், டி.ஆர்.பாலு ஆகியோர் தனி காரில் வந்து இறங்கி முழக்க மிட்டவாறே அண்ணாசிலையைக் கடந்து முன்னேறிச் சென்றனர்.

போலீஸ் முற்றுகை!

உடனே அவர்களை குதிரைப்படை போலீசாரும், காவல் துறையினரும் வளையம் போல் சுற்றி வளைத்து கைது செய்து லாரியில் ஏற்றினர்.

மேலும் பழனி மாணிக்கம், ராஜா இளங்கோ, கலியாண சுந்தரம், மயிலை சம்பந்தம், கே. எஸ். பிரகாசம் அறிவுமணி, சந்திரசேகரன், மதுரை அனுசுயா பிரம்மானந்தம், தமிழ்ச்செல்வி, ராஜம் நடராசன், முத்து மெல்கமி உட்பட சுமார் 250க்கு மேற்பட்ட கழகத்தோழர் களும், மகளிர் அணியினரும் கைது செய்யப்பட்டனர்.

★

உணர்வைப் புரிந்து கொள்க!

உடன் பிறப்பே,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகத் திராவிட முன் னேற்றக் கழகம் சென்னையில் உள்ள இலங்கைத்தூதரகத் தின் முன்பு மறியல் அறப்போர் நடத்தப் போவதாக அறி வித்ததை ''கருணாநிதியின் பித்தலாட்டம்!'' என்று மூத லமைச்சர் எம். ஜி. ஆர் அவர்கள், அரசாங்கமும், மாநக ராட்சியும் நடத்திய நிகழ்ச்சியொன்றில் பேசியதாக அவ ரது குடும்பப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து அரசால் நடத்தலாம் என்று பேரவையில் முடிவெடுத்திருக்கும் போது, தி. மு. கழகம் இப்படியொரு மறியலை நடத்துவதா? என்று அரசு விழாவில் முதலமைச்சர் கேட்டிருக்கிறார்.

அரசு விழா நிகழ்ச்சி! கழக எம். பி, கலாநிதியும் கலந்து கொண்ட விழா! அந்த நிகழ்ச்சியில்தான், மூத லமைச்சர் அவர்கள் இவ்வளவு நாகரீகமாக நடந்து கொண் டிருக்கிறார்.

அப்படியொரு நாகரீகத்தை அவரிடம் எதிர் பார்க்க முடியாததுதான்!

அன்னை மணியம்மையார் அவர்களை மேடையிலே உட் கார வைத்துக் கொண்டே, பெரியார் சிலை திறப்பு விழா வின் போது பெரியாரின் கொள்கைக்கும் பெரியார் வலி

யுறுத்திய சமத்துவ உரிமைக்கும் வேறுபாடு தெரியாமல் பெரியாரையே கேலி பேசியவரல்லவா?

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க முடியும்!

''அர்த்தால் பற்றி முடிவெடுக்க எதிர்க்கட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதினேன். பதில் எழுதவில்லை. மறியல் நடத்துவதாக அறிவிக்கிறார்கள். ஒரு எதிர்க் கட்சி செய்யும் காரியமா இது? இலங்கைத் தூதரகம் முன் மறியல் என்பது கருணாநிதியின் பித்தலாட்டம்!''

முதலமைச்சரின் விமரிசனமும், வியாக்யானமும் அவருடைய அதிகார பூர்வமான கட்சி ஏட்டில் வந்துள்ளதைத் தான் அப்படியே எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

ஆனால் உண்மை என்ன?

இலங்கைப் பிரச்சினை குறித்த தீர்மானம் சட்டப் பேரவையில் விவாதிக்கப்பட்டது 21-3-81 என்ற நாளில்! அர்த்தால் என்று முதல்வர் யோசனை தெரிவித்து அதனை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டது அதே நாளில்தான்!

பிறகு இரண்டு மூன்று நாட்கள் அரசின் சார்பில் எந்தத் தாக்கீதும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வரவில்லை!

இதற்கிடையே இலங்கை சென்ற தமிழ்நாட்டு வாலிபர் தனபதி இலங்கையில் சிங்கள வெறியர்களால் கோடரி கொண்டு பிளக்கப்படுகிறார்.

(இதைக் குறிப்பிட்டால் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள்; ''விழுந்தது எங்கள் பிணம்! எங்களுக்கில்லாத அக்கறை — உங்களுக்கேன் வந்தது?'' என்று கோபித்துக் கொள்கிறார்.)

தமிழர்களுக்கு இலங்கையில் இழைக்கப்படும் கொடுமைகளுக்குத் தனபதி கொலை செய்யப்பட்டது ஒன்றே போதுமான சான்று என்று சுட்டிக்காட்டி, 25.3.81 அன்று நான் பேரவையில் பிரச்சினை எழுப்பினேன்.

அப்போது முதல்வரும் இருந்து அது குறித்து பதிலளித்திருக்கிறார்.

அடுத்தசில விநாடிகளுக்குள்ளேயே பேரவையில் இருந்த எல்லாக்கட்சித் தலைவர்களிடமும் கலந்துபேசி- (அவை

வீலேயே) எந்தத் தேதியில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக்கூட்டி அர்த்தால் தேதி பற்றி முடிவு செய்யலாம் என்று முதல்வரோ அல்லது அவைமுன்னவரோ கேட்டிருக்கலாம்!

ஆனால் என்ன நடந்திருக்கிறது? அனைத்துக் கட்சிக் கூட்டத்தை 26-ந்தேதி வைத்துக்கொள்ளலாமா என அறிந்து கொள்ளமுதல்வர் விரும்புகிறார் என ஒரு அதிகாரி கடிதம் எழுதி, அந்தக் கடிதம் 26-ந்தேதி மாலையில்தான் அனைத்துக்கட்சித் தலைவர்களுக்குக் கிடைக்கிறது.

சட்டப்பேரவையிலேயே நேருக்கு நேராகப் பேசி ஒரு வசதியான தேதியைக் குறித்துக் கொண்டு அனைத்துக்கட்சித் தலைவர்களும் கலந்து முடிவெடுக்கும் கூட்டத்தை நடத்துவற்குப் பதிலாக, தலையைச் சுற்றிக்கொண்டு மூக்கை வீரவால் தொடுகிற காரியத்தை மேற்கொண்டவர்கள் யார்?

அரசினரா?

அல்லது அனைத்துக்கட்சித்

தலைவர்களா?

அர்த்தால் என்றுஅவையில் அறிவித்துவிட்டு, அதற்குரிய முன்னேற்பாடான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முனைந்திடாத நிலையில் இலங்கையில் தமிழனைக் கொன்று அவன் மாமிசத்தை விலைகூறி விற்கிறார்கள் என்ற கோரச் செய்திகள்; தமிழ்நாடு ஏடுகளில் வெளிவந்ததைக் கண்ட பிறகும்—இங்குள்ள தமிழர்களின் இரத்தம் கொதிப்படையாமல் ஆமைகளாய் ஊமைகளாய் இருந்திட இயலாது என்பதின் அடையாளம்தான்; தி.மு.க. நடத்திய ஒரு நாள் அடையாள மறியல்!

அந்த மறியலின் அடிப்படை உணர்வைப் புரிந்து கொள்ளாமல் எம்.ஜி.ஆரின் பத்திரிகை; மறியலைக் கேலி செய்தும், போலீசாரைக் கண்டு தி.மு.க. தொண்டர்கள் ஓட்டமெடுத்தனர் என்றும், ஏகடியம் புரிந்தும் செய்தி வெளியிட்டிருப்பது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆளுங்கட்சிக்குரிய அக்கறையைத்தான் வெளிப்படுத்துகிறது.

''இலங்கையில் விழுந்த தனபதியின் பிணம் எங்கள் பிணம்—நாங்களே சும்மாயிருக்கும் போது உங்களுக்கென்ன வந்தது?''

என்று ஒரு அமைச்சரே அலையில் பேசுகிறார் என்றால் இதைவிட வேதனை வேறென்ன இருக்க முடியும்!

பதினேழு லட்ச ரூபாய் கட்டிடத்தைத் திறக்கப் பல லட்ச செலவில் விழா ஏற்பாடுகளை நடத்தி—அந்த அரசாங்க விழாவில் தி. மு. கழகம் இலங்கைப் பிரச்சினைக்காக நடத்தும் கண்டன ஊர்வலம் மறியல் ஆகியவற்றைக் குறித்து விமர்சித்தும், எந்தக் கட்சி தலைவர்களுக்கும் உரிய நேரத்தில் போய்ச் சேர முடியாத அளவுக்கு அரசின் சார்பில் எழுதிய கடிதத்தைப் பற்றி விளக்கவுரை அளித்தும்—அரசு நிகழ்ச்சியை அரசியல் நிகழ்ச்சியாக மாற்றிய முதலமைச்சரைத் திருத்துவது முயற்கொம்பே!

அன்புள்ள

மு. க.

31.8.81 அன்று எழுதிய கடிதம்

★

தலைவர் கலைஞர் எச்சரிக்கை!

சென்னை, ஆக. 30—இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக ஊர்வல கழகக் கண்மணிகள் மீது எம்.ஜி.ஆர். அரசின் பழிவாங்கும் நடவடிக்கை விரைவாக அடையாள மறியலாக ஆரம்பித்தது தொடர் மறியல் ஆகலாம் என்று தலைவர்கலைஞர் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் மீது, தொடர்ந்து நடைபெறும் தாக்குதல்களை கண்டித்து அடையாள மறியல் செய்த கழகத்தவர் கைது செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து தலைவர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இலங்கையில் தமிழர்கள் மீது தொடர்ந்து நடைபெறும் வன்முறை தாக்குதல்கள், படுகொலைகள், கற்பழிப்புச் சம்பவங்கள் முதலியவற்றைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் கண்டனக்குரல் கொடுத்து வருவதையொட்டி 26-8-81 காலை சென்னை மாவட்டக் கழகச் சார்பில் மாவட்டச் செயலாளர் சிதாபதி எம்.எல்.ஏ. தலைமையிலும்

என்.வி.என். சோமு எம்.எல்.ஏ புருடோத்தமன் எம்.எல்.ஏ மாணவர் அணிச்செயலாளர் ஆர். கணேசன், சென்னை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனுசூயா ஆகியோர் மூன்னிலையிலும் அண்ணா சிலையிலிருந்து புறப்பட்டு இலங்கைத் தூதரகத்தின் முன்பு ஒரு நாள் அடையாள மறியல்செய்வதென முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

மறியலில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வது சட்டப்படி முறையானது என்ற போதிலும், மறியலுக்காக ஊர்வலம் செல்வதிற் கூடாது என எம்.ஜி.ஆர், ஆட்சி தடைவிதித்து, மூன் கூட்டியே சென்னை மாவட்டக் கழகப் பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட சுமார் மூன்னூறு தோழர்களை முதல்நாள் நள்ளிரவே கைது செய்து, இன்று காலை அவர்களை விடுவித்திருக்கிறது.

பத்து மகளிர் உட்பட
150 பேர் சிறையேகினர்!

29.8.81இல் சீதாபதி எம்.எல்.சி. தலைமையில் ஊர்வலம் செல்ல முன்னேந்தவர்களில் சுமார் நூற்றி ஐம்பது பேரை (பத்து தாய்மார்கள் உட்பட) கைது செய்து நிமாண்டு பெற்று மத்திய சிறைச்சாலையில் அடைத்துள்ளனர்.

ஒருநாள் அடையாள மறியல்—அதுவும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக என்று தெளிவாக முன்கூட்டி அறிவித்து அமைதியான முறையில் கண்டனத்தைத் தெரிவிக்க முன்னேந்த கழகத்தினரை கைது செய்து பதினேந்து நாள் நிமாண்டு வழக்கு—விசாரணை—அதற்கான சட்டப் பிரிவுகள் பிரயோகம் என்ற அளவுக்கு எம்.ஜி.ஆர் அரசு பழிவாங்கும் எண்ணத்துடன் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் கண்டனக் குரல் எழுப்பும் கடமையுடன், எம்.ஜி.ஆர். அரசின் இந்தப் பழிவாங்கும் போக்கிற்கும் எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை தி.மு. கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து என்ன நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்வது என்பது பற்றித் தலைமைக் கழகம் முடிவு செய்து இரண்டொரு நாட்களில் அறிவிக்கும்.

இவ்வாறு தலைவர் கலைஞர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

(31.8.81 அன்று முரசொலி பத்திரிக்கையில் வெளியானது)

★

இலங்கை தமிழருக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்து - எம்.ஜி.ஆர். அரசு பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்து - செப்டம்பர் 3 முதல் தடையை மீறி ஊர்வலம்! மறியல்!

சென்னை, செப். 1— இலங்கைத் தமிழர் பிரச்சினை, எம்.ஜி.ஆர், அடக்கு முறைப் பிரச்சினை ஆகிய இரண்டையும் கண்டித்து செப். 3 முதல் சென்னையில் தடை மீறி ஊர்வலமும் இலங்கைத் தூதுவர் அலுவலகம் முன் மறியலும் நடத்துகிறது கழகம். அண்ணா பிறந்த நாளான செப். 15 அன்று இந்த ஊர்வலத்திற்கும் மறியலுக்கும் தலைவர் கலைஞரே தலைமை தாங்குகிறார். இதை அவரே இன்று இங்கு செய்தியாளர்கள் கூட்டத்தில் அறிவித்தார்.

செய்தியாளர் கூட்டத் துவக்கத்தில் தலைவர் கலைஞர் அறிக்கை ஒன்றைத் தந்தார். தொடர்ந்து செய்தியாளர் வினாக்களுக்குப் பதிலளித்தார்.

தலைவர் கலைஞர் தந்த அறிக்கை வருமாறு:—

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை எதிர்த்தும் எம். ஜி. ஆர். அரசு வேண்டுமென்றே திட்டமிட்டு தி. மு. கழகத்தின் மீது பழி வாங்கும் போக்கினைக் கண்டித்தும் தொடர்ந்து கழக முன்னணியினர் தலைமையில் பின்வரும் நாட்களில் சென்னை நகரில் தடையை மீறி ஊர்வலமும், இலங்கைத் தூதுவரகத்தின் முன் மறியலும் நடைபெறும் என, தி. மு. கழகத் தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவித்துக் கொள்கிறேன்.

3-9-81 முன்னாள் மேயர் மைனர் மோசஸ் தலைமை.

4-9-81 திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் மாணிக்கம் தலைமை.

5-9-81 ரகுமான்கான் எம். எல். ஏ. தலைமை.

7-9-81 சோ. கி. மூர்த்தி—ஆர். கே நகர்ப் பகுதிச் செயலாளர் சி. என். ரத்தினம் தலைமை.

8-9-81 அர்த்தால்.

9-9-81 தலைமை நிலைய வழக்கறிஞர் டி. பி. ராதாகிருஷ்ணன் தலைமை.

10-9-81 துறைமுகப் பகுதிச் செயலாளர் பலராமன் தலைமை.

11-9-81 எஸ். பாலன் எம். எல். ஏ. தலைமை.

12-9-81 ப. பொன்னுரங்கம் எம். எல். ஏ. தலைமை.

14-9-81 தொழிலாளர் அணிச் செயலாளர் மா. வெ. நாராயணசாமி தலைமை.

15-9-81 அண்ணா பிறந்த நாளன்று கழகத் தலைவர் தலைமை.

இவ்வாறு தலைவர் கலைஞர் அறிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்கள் எழுப்பிய வினாக்களும் தலைவர் கலைஞர் தந்த பதில்களும் வருமாறு:

தலைவர் கலைஞர் பேட்டி

கேள்வி: ஊர்வலம் எங்கிருந்து எப்போது புறப்படும்?

பதில்: எங்கே முதலில் தடை விதிக்கப் பட்டதோ அதே இடமான அண்ணா சிலையிலிருந்து காலையில் புறப்படும்.

கேள்வி: உண்ணா விரதமிருந்த இந்திரா காங்கிரசாரை மட்டும் கைது செய்து விடுதலை செய்திருக்கிறார்களே!

பதில்: இளைஞர் காங்கிரசார் உண்ணா விரதமிருந்து கைது செய்யப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. காந்தி காமராஜ் தேசியக் காங்கிரசின் சார்பில் இலங்கைத் தூதுவராலயத்தின் வாசலிலேயே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அவர்கள்

யாரும் கைது செய்யப்படவில்லை. தடை விதிக்கப் பட வில்லை. ஆனால் தி.மு.க. மீது மட்டும் வேண்டும் என்றே குற்ற இயல் திருத்தச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுத்து 150 பேரை சிறையில் வைத்திருக்கிறார்கள்.

எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினை, எம்.ஜி.ஆர். அடக்கு முறைப் பிரச்சினை ஆகிய இரண்டுக்கும் சேர்த்துத் தான் நாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம்.

15-9-81 வரை இப்போது பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு, மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், தொழிலாளர் அணியினர், மாணவர் அணியினர் ஆகியோர் தொடர்ந்து ஈடுபடுவார்கள்.

இவ்வாறு தலைவர் கலைஞர் பேட்டி தந்தார்.

(தலைவர்—கலைஞர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி 1-9-81)

உலகத் தமிழர் பேரியக்கம் துவங்க வேண்டும்!

பம்பாய் நகரில் தமிழ்ப்பேரவைக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் பேசியதாவது.-

தமிழர்களுடைய நிலை உலகம் எங்கும் எப்படி இருக்கிறது என்று நாம் வேதனைக்கு ஆளாகி இருக்கிற நேரத்தில் இந்தக் கூட்டம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம் என்று நான் கருதுகின்றேன்.

எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய நண்பர்கள் அனைவரும் இலங்கை எரிந்து கொண்டிருக்கிறது என்பதனைச் சுட்டிக் காட்டினார்கள்.

சிங்களவர் நிகழ்த்திய கொடுமைகள்

ஏறத்தாழ இருபதாண்டு காலமாக தொடர்ந்து வன் முறை வெறியர்களுடைய தாக்குதலுக்கு தமிழர்கள் ஆளாக்கப்படுவதும், தமிழ் மகளிர் தங்களுடைய கற்பை இழக்கக்கூடிய சூழ்நிலை உருவானதும், அவர்களுடைய மங்கள நாண் பூண்ந்த மணாளர்களை மரத்திலே கட்டிவைத்து விட்டு அவர்களுக்கு நேராகவே அவர்தம் துணைவியரை சிங்களக் கொடுமையாளர்கள் கற்பழித்துக் கொல்வதும் இலங்கையிலே கடந்த கால நிகழ்ச்சிகளாக இருந்தன என்று

நாம் எண்ணிப் பெருமூச்சு விட்டால் போதாது. அவைகள் நிகழ்காலத் தொடர்கதையாகவும், இன்னும் முடியாத தொடர்கதையாகவும் இலங்கைத் தீவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணி நாம் எண்ணீர் விட்டால் போதாது. தமிழன் என்றோர் இனம் உண்டு. அந்த இனம் எங்கெங்கு சிதறிக் கிடந்தாலும் அப்படிச் சிதறிக் கிடக்கின்ற அந்த இனத்திற்கு "வெங்கொடுமைச் சாக்காட்டில் வீளையாடும் தோள்கள், எங்கள் வெற்றி தோள்கள்" என்று உறுதி எடுத்துக் கொள்கின்ற ஒரு வீர குணம் உண்டு என்பதை நிருபிக்கின்ற வகையிலேதான் உலகெங்கும் பரவிக் கிடக்கின்ற ஏறத்தாழ ஏழுகோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் இன்று பதறிப் போய் இருக்கிறார்கள்; பதட்டம் அடைந்திருக்கிறார்கள்.

இலங்கையிலே தமிழர்கள் அவதிப்படுவது மாத்திரமல்ல, தங்களுடைய தாய் மண்ணை தமிழ் நிலத்தை விட்டு இந்தியாவிலேயே வேறு மாநிலங்களிலே பரவிக் கிடக்கின்ற தமிழர்களுக்குக் கூட அத்தகைய ஒரு ஆபத்து—அவலம்—அவதி—இவைகள் ஏற்படுகின்றன என்பதைக் கேள்விப்படும் பொழுது பிறந்த சஞ்சலத்திற்கு நாம் ஆளாகின்ற ஒரு நிலை ஏற்படத்தான் செய்கின்றது.

அந்தமானிலும் தமிழன் ஆட்டிப்படைக்கப்படுதல்

இங்கே மராட்டிய மண்டலத்தில் தமிழகத்திலே இருந்து வந்து குடியேறியிருக்கின்ற மக்களுடைய நிலை என்னவென்பது நான் சொல்லி நீங்கள் யாரும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியத்திலே இல்லை.

இந்தியாவிலேயே பெரிய குடிசைப் பகுதி என்று சொல்லக்கூடிய தாராவி. அந்த தாராவியிலே வாழுகின்ற தமிழ்ப் பெருங்குடி மக்கள், எவ்வளவு நாற்றத்திற்கு இடையே-எவ்வளவு சுகாதாரக் கேடுபாடுகளுக்கிடையே எவ்வளவு நோய் தொடிகளுக்கு இடையே தங்களுடைய நாட்களை எண்ணிக் கொண்டு வாழ்கிறார்கள் என்பதை நான் அறியாதவன் அல்ல.

தமிழகத்தினுடைய சந்தன மரங்களை வெட்டி வெளி நாடுகளுக்கு நாவாய்களிலே அனுப்பிய தமிழன் இன்று அந்தச் சந்தன வாடை இல்லா விட்டாலும் பரவாயில்லை,

சாக்கடை வாடையை அனுபவித்துக் கொண்டு பல்வேறு மாநிலங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற கொடுமையான காட்சியைக் காண வேண்டிய நிலை, தாராவி மாத்திரம் அல்ல. இன்னும் பல்வேறு மாநிலங்களில்—ஏன்? தனித் தீவாக விளங்கிக் கொண்டிருக்கின்ற ஆனால் இந்தியாவோடு தொடர்புடைய அந்தமான் தீவிலே கூட தமிழர்கள் ஆட்டி படைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய உரிமைகள்பறிக்கப் படுகின்றன என்கின்ற செய்திகள் வந்து கொண்டிருக் கின்றன.

இவைகளை எல்லாம் எண்ணும்போது, தமிழ் அகாடமி அல்லது தமிழ்ப் பேரவை என்று ஒரு பெயரை நாம் சூட்டு வதை விட 'தமிழர் பேரவை' பம்பாயிலே தமிழர் பேரவை இருக்கலாம். தமிழ்ச் சங்கம் இருக்கலாம். வன்னுவர் பெய ரால் மன்றங்கள் இருக்கலாம். இளங்கோவின் பெயரால் மன்றங்கள் இருக்கலாம். அதைப் போல வேறு பல வெளி நாடுகளில் கடல் கடந்து தமிழர் வாழுகின்ற நாடுகளில் அது ஜாவாவாக இருந்தாலும்—சுமத்ராவாக இருந்தாலும்: அது இருண்ட கண்டம் என்று சொல்லப்படுகின்ற ஆப்பிரிக்கா கண்டமாக இருந்தாலும்; துபாயாக இருந்தாலும்: அரபு நாடுகளாக இருந்தாலும் லண்டன் மாநகராக இருந்தா லும்; சிகாகோ நகரமாக இருந்தாலும்; நியூயார்க் பட்ட ணமாக இருந்தாலும்; மலேசியா வாழ்ந்தாலும்; சிங்கப்பூராலு லும் இங்கெல்லாம் வாழுகின்ற தமிழர்கள் அத்தனை பேருக்கும் ஒட்டு மொத்தமாக ஒரு இயக்கம்—உலகத் தமிழர் இயக்கம் ஒன்றை நாம் கண்டாக வேண்டும். அந்த உலகத் தமிழர் இயக்கம் அரசியல்களை எல்லாம் கடந்த ஒரு இயக்கமாக — அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமானதாகவோ- திராவிடர் கழகத் திற்குச் சொந்தமானதாகவோ அல்லது வேறு பல கட்சிகளுக்குச் சொந்தமானதாகவோ இல்லாத, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்கிய ஒரு பேரியக்கம்- உலகத் தமிழ்ப் பேரியக்கம் ஒன்றை நாம் கண்டாக வேண்டும்.

அந்த உலகத் தமிழ் பேரியக்கம் தான் இன்று இலங்கை யிலே நடைபெறுகின்ற இந்த கொடுமையான நிகழ்ச்சிகளை போன்ற நிகழ்ச்சிகள் எங்கு நடைபெற்றாலும் அவைகளைக் கண்டிக்கத்தக்க அதிகாரம்படைத்ததாக, உரிமை படைத்த தாக இருந்திட வேண்டும்.

சரி, அப்படிப்பட்ட ஒரு பேரியக்கத்தை நாம் தொடங்குவதற்கு முன்பு அது வரையில் நடைபெறுகிற கொடுமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு நாங்கள் அந்தப் பேரியக்கத்தைத் தொடங்கப் போகிறோம்—அது வரையிலே இந்தக் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள் என்று ஆறுதல் அளிப்பது நியாயமா? நேர்மையா? நீதியா? அப்படிச் சொன்னால் நம்முடைய உடலிலே ஓடுவது தமிழ்க் குருதியா?

இந்தக் கேள்வி வராமல் போகாது?

கண்ணீர்த் திரையில் காணும் கோரம்!

எனவே தான் இலங்கையில் நடைபெறுகின்ற கொடுமைகளை இன்றைக்குத் தாய்த் தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு தமிழனும் கண்களிலே நீர்த்திரை விழவிழ அந்த நீர்த்திரையின் வழியாகப் பார்த்துக் கொண்டே பரபரப் படைகிறான்—பதைக்கிறான்—திகைக்கிறான்— திக்குத் தெரியாமல் விழிக்கிறான்.

என்ன செய்ய முடியும்?

இலங்கை இன்னொரு நாடு. வேறு ஒரு நாடு. இந்தியாவில் நாம் வாழுகிறோம். வெளி நாட்டு உறவுகளை இன்றைக்கு கவனிக்க வேண்டிய, கண்காணிக்க வேண்டிய பெரும் பொறுப்பு மத்திய பேரரசுக்கு இருக்கிறது. வெளிநாட்டு உறவுகளைப் பொருத்த வரையிலேமத்தியப் பேரரசோடு ஒத்துழைப்பது என்கிற கொள்கையை உடையவர்கள் நான் சார்ந்திருக்கின்ற தி.மு.கழகத்தினர். எனவே வெளி நாட்டு உறவு பாதிக்கப்படக் கூடாது.

அதே நேரத்திலே இலங்கையிலே ரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறார்கள்—மானத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றனே அவனுடைய நிலையையும் நாம் உடனடியாகத் துடைத்தாக வேண்டும். அவனுடைய கண்ணீரையும் நிற்க வைக்க வேண்டும். அதற்கு என்ன வழி?

வழி தெரியாமல் நிற்கும் தமிழர்!

வழி தெரியாமல்தான் கை பிசைந்து நிற்கிறோம். இலக்கியத்திலேதான் படித்திருக்கிறோம்—ஒரு பாறையில்

வெண்ணெய் வைக்கப்பட்டு, பாறையிலே வைக்கப்பட்ட வெண்ணெயைப் பத்திரமாகப் பார்த்துக் கொள் என்று இரண்டு கைகளும் இல்லாத ஒரு ஊமையினிடத்திலே சொல்லி விட்டுப் போய் காலையிலே ஐந்து மணிக்கு பாறையிலே வைக்கப்பட்ட வெண்ணெயை 'கையில்-ஊமை கை இல்லாத அந்த ஊமை பாதுகாத்துக் கொண்டிருக்கிற நேரத்தில், வெயில் எரிக்கத் தொடங்கி, வெய்யில் வேகமாக எரிக்க எரிக்க உச்சி வெயில் ஏற ஏற வெண்ணெய் உருகத் தொடங்கும் பொழுது கையும் இல்லாத வாயும் இல்லாத அந்த ஊமையால் அந்த முடவனால் எப்படி உருகிக் கொண்டி ருக்கின்ற வெண்ணெயைக் காப்பாற்ற முடியாதோ—அதே கையில் 'ஊமை' நிலையிலேதான் இந்தத் தமிழகத்திலே வாழுகின்ற தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணும் பொழுது என் மனம் குமுறுகிறது; கொந்தளிக்கும் கடலாகிறது.

பத்திரிகையிலே செய்தி வருகிறது. படித்துப் பார்க் கிறோம். படித்துப் பார்த்தப் பிறகும் உயிரோடு தான் இருக்கிறோம்.

தமிழனுடைய உயிரைப் போக்கி உடலைக் கூறு கூறுக்கி, அவனுடைய தசைகளைப் பாளம் பாளமாக்கி அவைகளைக் கூடையிலே போட்டு ''இங்கே தமிழனுடைய மாமிசம் விற் பனைக்குக் கிடைக்கும்'' என்று எழுதி வைக்கப்படுகின்ற காட்சி இன்றைக்கு இலங்கையிலே நடைபெறுவதாக ஏடு களிலே செய்தி வருகிறது என்றால் அதைப் பார்த்த பிறகும் துடிக்காமல் இருக்கின்ற இதயம் ஒரு மனிதனுக்கு இருக் கின்றது என்று யாராவது சொல்வார்களேயானால் அவன் பிறக்கும் பொழுதே இருதயம் இல்லாமல் பிறந்து விட்டான் என்றுதான் சொல்ல முடியுமே தவிர வேறு எதுவும் சொல்ல முடியாது.

இத்தகைய கொடுமைகளுக்கு எல்லாம் நிவாரணம் காண, இனியும் வெளி நாடுகளில் நம்முடைய தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளில் இருந்து அவர்களை மீட்க, எங்கு வாழ்ந்தாலும் கலாச்சாரம், நம்முடைய பண் பாடு, நம்முடைய இலக்கியம், நம்முடைய இனம், இப்படி ஒடிக் கொண்டிருக்கின்ற அந்த இழை அறுந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்ள இந்தத் தமிழ்ப் பேரவை பேரியக்க மாக மலர்ந்திட வேண்டும்.

இது அரும்பு, ஒராண்டு காலத்து அரும்பு, இதற்கு அவர்கள் தமிழ் அகாடமி என்று பெயர் வைத்திருக்கிறார்கள் 'அகாடமி' என்ற ஆங்கிலச் சொல் தமிழ் என்கிற அந்தத் தனித் தமிழ்ச் சொல்லோடு இணைகிறதா என்ருல் இணைய வில்லே. ஆனல் அகாடமி என்று இருந்தால்தான் சில காரி யங்களே அதிகார பூர்வமாக நடத்திக் கொள்ள முடியும் என்பது நிறுவியவர்களுடைய எண்ணம்.

நேற்றுக் கூட நான் இதனுடைய தலேவர் நண்பர் இராமசந்திரன் அவர்களுடனும், நண்பர் சிவப்பிரகாசம் அவர்களுடனும் மற்றவர்களுடனும் கலந்து உரையாடிய போழுது சொன்னேன். ஆங்கிலத்திலே தமிழ் அகாடமி என்றும், தமிழிலே எழுதும் போது பம்பாய் தமிழ்ப் பேரவை என்றும் குறிப்பிடுங்கள் என்றும் சொன்னேன். அதைநீங் களே நாளேய தினம் விழாவிலே சொல்லுங்கள். அதை ஏற்றுக் கொள்கிறேம் என்று சொன்னர்கள். ஆக முதலி லேயே ஒப்புக் கொண்டு, நேற்றைக்கே ஒத்திகை பார்க்கப் பட்டு இன்றைக்கு உங்கள் முன்னல் இது அரங்கேற்றப்பட் டிருக்கிறது என்பதை மாத்திரம் நான் எடுத்துக் கூற கட மைப் பட்டிருக்கின்றேன்.

இலங்கைத் தமிழர்களுக்காக சென்னே மாநகரத்தில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு இலங்கைத் தூது வருடைய அலுவலகத்தின் வாயிலில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்—பலர் இருக்கலாம்—இரு ந்தாலும் கூட, இங்கே எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் கள் என்று நான் சொல்வதற்குக் காரணம்—இந்தத் தமிழ்ப் பேரவையிலிருந்து என்னேயும், என்னுடைய கட்சியையும் பிரித்து நான் பேசுகிறேன்—கட்சியிலே உள்ளவர்கள் தமிழ்ப் பேரவையிலே இருக்கலாம், ஆனல் கட்சி அதிலே இருக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு, நூற்று ஐம்பதுக்கு மேற் பட்டோர், இசன்னே மத்திய சிறைச்சாலேயிலே இன்றைக்கு வாடிக் கொண்டிருக்கின்றர்கள்.

ஏன் அவர்கள் கைது செய்யப்பட வேண்டும்? அவர் களுடைய கண்டன ஊர்வலம் ஏன் தடை செய்யப்பட வேண்டும் என்று கேட்டால், எங்களுக்கு அளிக்கப்படுகின்ற

பதில், நாம்தான் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு அர்த்தால் நடத்துவதாக இருந்தோமே, அதற்குள்ளாக உங்களுக்கு மாத்திரம் என்ன அப்படிப்பட்ட அக்கறை? என்று கேட்கிறார்கள்?

படைக்கு பல்வேறு விதப் போர்க் கருவிகள் உண்டு

எந்த ஒரு படையிலும் பல்வகையான போர்க்கருவிகள் உண்டு. அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு வரையிலே இன்றைக்கு உண்டு.

ஆனால் நம்முடைய வரலாறுகளைப் பார்த்தால் 'அணித் தேர்ப் புரவி; ஆட்பெரும் படை' என்று கூறுகின்றன.

தேர்ப்படை உண்டு; யானைப் படை உண்டு, குதிரைப் படை உண்டு; காலாட் படை உண்டு.

இதற்காகத் தேனிலே உள்ள அரசன் நான்தான் படை நடத்திச் செல்லுகிறேனே, காலாட் படை எதற்காக?என்று கேட்க மாட்டான் காலாட் படைதான் இருக்கிறதே, குதிரைப் படை எதற்கு? என்று கேட்க மாட்டான். குதிரை படைதான் இருக்கிறதே யானைப் படை எதற்காக? என்று கேட்க மாட்டான்.

குதிரைப்படையாக இயங்கும் கழகப்படை

அதைப்போலத்தான்— ஒரு படையில் ஒரு மன்னனுக்கு நால்வகைச் சேனைகள் இருப்பதைப் போல் இன்றைக்கு இலங்கையிலே தமிழனுக்கு தொல்லை, துயரம், துன்பம். அவனுடைய பொருட்கள் கொள்ளை, கற்பு பறிமுதல்; கொலை என்கின்ற அளவுக்கு அங்கே நிலைமைகள் போய்க் கொண்டிருக்கின்ற நேரத்தில், எல்லாக் கட்சிகளும்— தமிழன் என்ற உணர்ச்சியைப் பெற்றிருக்கின்ற எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவரவர்களால் இயன்ற அளவிற்குத் தங்களுடைய தொண்டினை—தங்களுடைய பங்கினைச் செலுத்தியாக வேண்டும்.

அந்த வகையிலே நாங்கள் குதிரைப் படையாக இருந்து கொஞ்சம் வேகமாகப் போயிருக்கலாம்.

யானைப் படையோடு, குதிரைப் படையோடு வர முடிய வில்லையே என்பதற்காக ஒரு படை போதாதா? இன்னொரு படை எதற்காக என்று கேட்பது, நம்முடைய போர்த் திற னையும் குறைக்கும்: நாம் ஈட்ட வேண்டிய வெற்றிக்கும் இடையூறாக ஆகிவிடும்.

எனவே பல முனையிலும் தாக்கிட வேண்டும். ஆனால் ஒருவர் தாக்கி, ஒருவர் தாங்குகிறார் என்றால் அப்பொழுது பேசலாம், 'நான் தாக்குகிறேன்—நீ தாங்குகிறாய், நியா யமா?' என்று.

நான் கண்டிக்கிறேன்—நீ கனிவுடன் பேசுகிறாய்; நியாயமா? என்று கேட்கலாம்.

எல்லோரும் சேர்ந்து கண்டிப்பது இலங்கையில் நடை பெறுகிற கொடுமைகளைத்தான். இலங்கையிலே இழைக்கப் படுகின்ற அநீதிகளைத்தான் எல்லோரும் சேர்ந்து கண்டிக் கிறோம்.

அப்படிக் கண்டிக்கிற நேரத்திலே, அவரவர்களுக்கு இயன்ற அளவுக்கும் தங்கள் கட்சியின் பலத்தைத் திரட்டி காட்டுகிறோம்.

அர்த்தால் நடத்துவோம் என்றால், அதிலே ஆளும் கட்சியும் இணைந்து கொள்கிறது என்றால், இரட்டிப்பு மகிழ்ச்சி எங்களுக்கு, எல்லோரும் சேர்ந்து நடத்துவோம்.

அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மறியல் நடத்துவதோ, அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சி யின் சார்பில் உண்ணாவிரதம் நடத்துவதோ கூடாது என்று கூறி 150 திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இரண்டு நாளைக்கு முன்பு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவைகளுக்கிடையிலே எட்டாம் தேதி அர்த்தால் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன்.

அர்த்தாலுக்கு வரவேற்பு

எட்டாம் தேதி அர்த்தாலுக்கு தமிழகத்திலே இருக் கிற ஆளும் கட்சியும் பக்கபலமாக இருக்கிறது என்பதற்காக இங்கிருந்தவாறே தமிழக முதலமைச்சர்-என்னுடைய நண்

பர் எம். ஜி. ஆருக்கு என்னுடைய நன்றியறிதலையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆனால் இது அனைவரும் சேர்ந்து நடத்துகின்ற ஒல் அர்த்தால் என்றாலும்கூட இடையிடையே அவரவர்களால் இயன்ற கண்டனத்தை இலங்கை அரசுக்குத் தெரிவித்தாக வேண்டும்.

ஒரு வாரப்பத்திரிகைக்குப் பேட்டியளித்த இலங்கையின் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனே அவர்கள் ஒன்றை குறிப் பிட்டிருக்கின்றார்கள்.

'பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் கருணாநிதிக்குச் சொல்ல வேண்டும், —என்ன சொல்ல வேண்டுமாம்.— இலங்கையிலே இருக்கின்ற தமிழர்கள் தனி நாடு கேட்கக் கூடாது; இதைக் கருணாநிதி இலங்கையிலே உள்ள தமிழர் களுக்குச் சொல்ல வேண்டும் என்று இந்திரா காந்தி அம்மை யார் கருணாநிதிக்குச் சொல்ல வேண்டும், என்று ஜெயவர்த் தனே கூறி இருக்கிறார்கள் என்றால். திடீரென்று வெடித்து விட்ட ஒரு நிகழ்ச்சியல்ல இலங்கையில் இன்றைக்கு ஏற்பட் டிருக்கின்ற நிகழ்ச்சி.

குமுறிக் குமுறி வெடித்த எரிமலை!

இலங்கையிலே ஏற்பட்டுள்ள நிகழ்ச்சி இருபதாண்டுக் காலமாக கொஞ்சங் கொஞ்சமாகப் பொங்கிப் பொங்கி இன்றைக்குக் குமுறி வெடித்திருக்கின்ற எரிமலை என்று சொன்னால் அதை யாரும் மறுத்திட இயலாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே இலங்கையிலே நடைபெற்ற கொடுமையைக் கண்டித்துப் பேரணி நடத்தி இருக்கின்றோம்—அண்ணா அவர்களுடைய தலைமையில்.

இலங்கைத் தூதுவருடைய அலுவலகம் வரையிலே ஊர்வலம் சென்று அந்த ஊர்வலத்திற்கு அண்ணா தலைமை ஏற்று, நாங்கள் எல்லாம் அண்ணா அவர்களோடு சேர்ந்து சென்று அதன் பிறகு, இலங்கை தூதுவருக்குத் தர வேண்டிய மகஜரைக் கொண்டு போய் கொடுத்திருக்கின்றோம்.

அதைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் இலங்கையில் ஏற்பட்ட போதெல்லாம் தமிழகத்திலே திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலே நம்முடைய பலத்த கண்டனத்தை இலங்கை அரசுக்கும், சிங்கள வெறியர்களுக்கும் தெரிவித்திருக்கிறோம்.

இப்பொழுது நிலைமை எப்படி மாறி இருக்கிறது!

அமிர்தலிங்கம்- இலங்கையிலே இருக்கின்ற ஈழத்தமிழகம் வேண்டுமென்று கோருகின்ற தமிழர்களுடைய தலைவர் அமிர்தலிங்கம்—மிக மென்மையான இதயம் படைத்தவர்—மூரட்டு குணம் வாய்ந்தவர் அல்ல.

அவர் மீது கண்டனத் தீர்மானம் இலங்கை ஆளுங் கட்சியின் சார்பிலே அளிக்கப்பட்டு ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் பேசுகிறார்கள்.

என்ன பேசுகிறார்கள்? இந்த அமிர்தலிங்கத்தைக் கொலை செய்ய வேண்டும்; எங்கே, நாடாளுமன்றத்திலே பேசுகிறார்கள்—இந்த அமிர்தலிங்கத்தை கழுகு மரம்—கழுகு என்றால் பாக்குமரம்—இரண்டு பாக்கு மரங்களுக்கிடையே கட்டி இரண்டாகக் கிழித்தெறிய வேண்டும்—இவைகளையெல்லாம் இலங்கை நாடாளுமன்றத்திலே பேசுகிறார்கள்.

இந்தப் பேச்சை பத்திரிகைகளிலே படித்துப் பார்த்து விட்டும்—நாம் ஆமைகளாய், ஊமைகளாய்த்தான் வாழ வேண்டும் என்று சொன்னால் தமிழன் சோற்றாலடித்த பிண்டம் அல்ல என்பதை இலங்கைக்கு உணர்த்திட வேண்டாமா?

தமிழன், கண்ணீர் பொழிந்தவனுக்குக் கருணைகாட்டக் கூடியவன். ஆனால் தமிழன் போர்க்களத்திலே என்றைக்கும் புறமுதுகு காட்டாதவன்! (பலத்த கைதட்டல்) அப்படிப் பட்ட நெடிய வரலாறு அவனுக்கு உண்டு.

'எங்கேயம்மா உன் மகன்?' என்று கேட்ட தாயைப் பார்த்து, 'மகன் போன இடம் எனக்குத் தெரியாது. அவன் போர்க்களத்துக்குப் போயிருப்பான். எந்தப் போர்க்களமோ எனக்குத் தெரியாது. ஆனால், அந்த புலி இருந்த குகை இதோ இருக்கிறது!' என்று வயிற்றைக் காட்டினாள் ஒரு தாய்;

அப்படிப்பட்ட வீர வரலாற்றுக்கு—வீர வரிகளுக்குச் சொந்தக்காரர்கள் நாம்.

இங்குமட்டும் காட்டிக் கொடுப்பது தொடர்கதையானதோ!

ஆனால் வீரத்திற்கு விளைநிலமான நம்முடைய தமிழக வரலாற்றிலே தான் காட்டிக் கொடுக்கின்ற படலம் தொடர் கதையாக இருக்கிறது.

அப்படிக் காட்டிக் கொடுத்தவர்களுடைய புகழ் மிஞ்சுகிறதா? அல்லது காட்டிக் கொடுக்கப்பட்டவர்களுடைய புகழ் மிஞ்சி இருக்கிறதா என்று பார்த்தால் காட்டிகொடுத்தவர்கள் காற்றிலே கலந்தவர்களாக ஆகி விட்டார்கள். காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள் வரலாற்றிலே பதிந்தவர்களாக ஆகிவிட்டார்கள்.

கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தான் எட்டப்பன் அவனுக்கு எவ்வளவு வரலாறு எழுதி இருக்கிறான்? காட்டிக் கொடுக்கப்பட்டு தூக்கிலே மாட்டப்பட்ட கட்டபொம்மனுக்கு எத்தனை பேர் வரலாறு எழுதியிருக்கிறார்கள்? அந்த வரலாறு எத்தனை நாடகங்களாக நடிக்கப்பட்டிருக்கின்றன? எந்த அளவிற்குத் திரைப்படமாக எடுக்கப்பட்டது?

அதைப்போல இராவணனைக் காட்டிக் கொடுத்தான் வீடணன்! அவனைக் காட்டி கொடுத்தவன் என்று சொன்னால் இராமாயணத்திலே நம்பிக்கை உள்ளவர்களுக்குக் கோபம் வரும். அப்படிக் கோபம் வருகின்றவர்கள் யாரையாவது பார்த்து ''ஐயா விபீஷணழ்வாரே!'' என்று சொல்லுங்கள். அதைப் புன்னகையோடு ஏற்றுக் கொள்வார்களா?

'விபீஷணழ்வாரே!' என்று ஒருவரைப் பார்த்து சொன்னால், அவருக்குக் கோபம் வருகிறது. காரணம் விபீஷணன் காட்டிக் கொடுத்த துரோகி, அந்தப் பெயரை நமக்குச் சொல்கிறானே என்று!

ஆனால் விபீஷணன் காட்டிக் கொடுத்தான் என்று சொன்னால், அப்படிச் சொல்லாதே என்று இலக்கிய மேடையிலே சர்ச்சைக்கு வருகிறார்கள்.

இப்படிக் காட்டிக் கொடுக்கின்ற படலங்களால்தான் தமிழன் சீர் குலைந்தான்.

தமிழர்கள் எல்லாம் மொத்தமாக வலிவு பெற என்ன வழி?

இன்றைக்குக் கூட நிருபர்கள் கேட்டார்கள். நான் பதிலளிக்கும் போது "தமிழர்கள் ஒற்றுமையாக இல்லாது இருப்பது ஒன்றுதான், நீண்ட நெடுங்காலமாக அவர்கள் போற்றிப் பாதுகாக்கின்ற இலக்கணம். அதுதான் இன்றைக்குத் தமிழர்களிடத்திலே இத்தகைய கேடுபாடுகளை உண்டாக்கியிருக்கிறது" என்று சொன்னேன்.

ஆனால் அந்த ஒற்றுமையை நிலை நாட்டுவதற்கு புலவர் பெரு மக்களெல்லாம் பெரு முயற்சி எடுத்தார்கள். கோவூர் கிழார், ஔவையார் இப்படிப்பட்ட புலவர் பெரு மக்கள் அந்தக் காலத்திலேயே—மூவேந்தர்களும் மற்றவர் களும் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டபோது அந்த மூவேந்தர்களைச் சந்தித்து ஒருவரோடொருவர் இணக்கமாக உறவாக-நட்பாக வாழும்படிக் கேட்டுக் கொண்டார்கள்.

அது நடைபெறுத காரணத்தினாலேதான் எப்படி அன்றைக்கு மூவேந்தர்கள் பிரிந்து—பிரிந்து—பிரிந்து நாடு கலகலத்து, இனப் கலகலத்து, மொழியிலே பிற மொழி ஆதிக்கங்கள் வந்து, அறிவார்ந்த சமுதாயம் அறிவற்ற மூட நம்பிக்கைகளுக்கு அடிமைப்பட்ட ஒரு சமுதாயமாக மாறு கின்ற சூழ்நிலை ஏற்பட்டு நொந்து போனதோ—அதனுடைய தொடர்ச்சி தான் இன்றளவும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இது தொடரக் கூடாது என்பதற்காகத்தான் தந்தை பெரியார் தோன்றினார். பெரியார் வழியில் பேரறிஞர் அண்ணா பணியாற்றினார்.

மறைமலை அடிகளார் போன்றவர்கள், தமிழ்த்தென்றல் திரு.வி.க. போன்றவர்கள் கவிஞர் பாரதிதாசனைப் போன்ற வர்கள் இவர்களெல்லாம் பாடுபட்டார்கள்.

நம்முடைய தமிழ் மொழியினுடைய ஆக்கம், ஊக்கம், ஆற்றல் ஆகிய இவைகளையெல்லாம் வெளிப்படுத்துகின்ற வகையிலே எளிய நடையிலே புரட்சிகரமான-புதுமையான கவிதை ஆக்கித் தந்து பேர் பெற்றார் கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார்!

தமிழால் ஆவேசத்தை ஊட்ட முடியும்; தமிழுக்கு உணர்ச்சியுண்டு, தமிழ்தென்றலாகவும் வீசும், எரிமலையாகவும் குமுறும் என்பதை எடுத்துக் காட்டியவர் தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார்.

அந்த பாரதியாருடைய நூற்றாண்டு கொண்டாடப்படுகின்ற நேரத்தில், இந்தத் தமிழ்ப் பேரவையினுடைய ஆண்டு விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்த பாரதியும், பாரதிதாசனும் அவர்கள் வழி வந்த கவிஞர்களும் தமிழர்களுக்கு-தமிழ் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களை எல்லாம் நெஞ்சிலே நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பழைய வரலாறுகளை மாத்திரம் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டிருந்தால் போதாது.

எவ்வளவோ புகழுக்கு உரியவர்கள் இன்றைக்கு அங்கிங்கெனுதபடி எங்கெங்கும் சிதறிக்கிடக்கிறார்கள்.

சிதறிக் கிடப்பது மாத்திரமல்ல. சீர் குலைந்து கிடக்கிறார்கள். அப்படிச் சீர்குலைந்தவர்களை எல்லாம் ஒன்று சேர்க்கிற சக்தியாகத்தான் தமிழர் இயக்கம் உருவாக வேண்டும்.

இன்றைக்கு பம்பாயில் ஏற்பட்டிருக்கின்ற இந்தத் தமிழ்ப் பேரவை போல் பல்வேறு மாநிலங்களிலே-பல்வேறு நாடுகளிலே ஆங்காங்கு இருக்கின்ற தமிழர்கள் எல்லாம் அவரவர்களுடைய முயற்சிக்குத் தக்கவாறு தமிழ் மன்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். என்றாலும், அவைகளை எல்லாம் ஒரு இணைப்பு மன்றங்களாக ஆக்குகின்ற அளவிற்கு அவர்களும் முன் வந்து உலகத் தமிழ் பேரியக்கம் ஒன்று நிறுவி, உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற தமிழர்களை ஆளுவதற்கல்ல—ஆபத்திலே இருந்து காப்பாற்றுவதற்கு- அவர்களுடைய கலாச்சாரத்தை மங்காமல்-மறையாமல் காப்பதற்கு அந்தப் பேரியக்கம் உருவாக வேண்டும்.

அப்படி உருவாக வேண்டும் என்பதற்கான விதையை இந்த ஆண்டு விழாவிலே நாம் நட்டு விட்டு அதற்குத் தண்ணீர் ஊற்றி அதைச் செடியாக, கொடியாக வளர்க்க வேண்டிய கடமை எல்லாத் தமிழர்களுக்கும் உள்ள உரிமை என்று கூறிக் கொள்கிறேன்.

(பம்பாய் தமிழ்ப் பேரவையில் 31.8.81 அன்று தலைவர் கலைஞர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி)

அமைதியாகத் தொடரட்டும் அறப்போர்!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தமிழகத்தில் ஆளுங் கட்சியும் இணைந்து நடத்தும் முழுஅடைப்பு(அர்த்தால்) இத் திங்கள் எட்டாம் நாள் நடைபெறுமென்று நாள் குறிக்கப் பட்டதை ஆகஸ்டு 31-ம் நாள் மாலையிலேயே பம்பாயில் இருந்த நான் அறிந்து கொண்டு, அன்று பம்பாய் சண்முகா னந்தா அரங்கில் நடைபெற்ற தமிழ்ப் பேரவை ஆண்டு விழாவில் தமிழக ஆட்சியாளருக்குப் பாராட்டு தெரிவித்துப் பேசியிருக்கிறேன்.

இலங்கையில் கொடுமைக்கு ஆளாக்கப்படும் தமிழர் களைக் காப்பதற்கு தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கட்சி களும் தனித் தனியாகக் குரல் எழுப்பிடுவதும் ஒன்றுபட்டு ''அர்த்தால்'' நடத்திடுவது இலங்கைத் தமிழர்களுக்குப் புதிய வலிவை வழங்குவதோடு ஆறுதலையும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த கால நிகழ்ச்சிகளை-கட்சிமாச்சரியங்களை-இலங்கைப் பிரச்சினைக்காக மறந்து விட்டு இங்குள்ள தமிழர் கள் ஒன்றுக அணிவகுத்திடும் நேரத்தில் நாம் கொண்டுள்ள மகிழ்ச்சியும் எழுச்சியும் ஒருகணம் மறைந்திடும் வீதத்தில் தமிழக ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை!

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் சென்ட் உறுப்பினர்களின் பதவிக்கால வரம்பு கட்டப்படும் சட்டம் கொண்டு வரப்படாமல் நமது நண்பர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களை மனதில் வைத்து மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதைப் போலத்தான்-இலங்கைப் பிரச்சினைக்காக தூதுவரகத்தின் முன்னே ஆர்ப்பாட்டம் செய்த கட்சிகள், உண்ணாவிரதம் இருந்த கட்சிகள், அமைப் புகள், ஆகியவற்றின் மீது மேற்கொள்ளாத நடவடிக்கைகளை இந்த அரசு, தி.மு.கழகத்தினர் மீது மட்டும் மேற்கொண்டு முன் கூட்டியே கைது, கைது செய்யப்பட்டவர்களில் பத்து மகளிர் உட்பட நூற்றி ஐம்பத்திஏழு பேர் மீது ரிமாண்டு, மத்தியசிறைச்சாலையில் அடைத்தல், பல பிரிவுகளில் வழக்கு கள், என்று அறிவித்து செயல் படுகிறது!

அரசும் இணைந்து நடத்துகிற அர்த்தால் அறிவிக்கப்பட இருப்பதால்- அதற்கிடையே தி.மு.கழகம் அறப்போரில் அதுவும் ஒருநாள் அடையாளமாக அறப்போரில் ஈடுபடக் கூடாதாம்!

அது மாபெரும் பாதகச் செயலாம்-அதாவது தி.மு.கழகம் அப்படியொரு அடையாள மறியலை நடத்துவதால் அதனை ஆட்சியாளரால் பொறுத்துக்கொள்ள முடியாதாம்!

அர்த்தால் நடக்குமென அவையில் அறிவித்த பிறகு மற்ற கட்சிகள், இலங்கைப் பிரச்சினைக்காக கண்டனக் கூட்டங்கள் நடத்தலாம்! ஆர்ப்பாட்டங்கள் நடத்தலாம்! உண்ணாவிரதம் நடத்தலாம்!

தி.மு.கழகம் மட்டும் அந்தத் திக்கு நோக்கிச் செல்லக் கூடாதாம்!

ஏனென்றால் இருபதாண்டுக் காலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையில் எடுத்துக் கொண்டு சிங்கள வெறியர்களுக்கு எதிராக முழக்கமிடும் இயக்கமல்லவா தி.மு.கழகம்; அதனால் அந்தக் கழகம் தனியாகச் சிங்கள வெறியரை எதிர்த்து எந்தக் குரலும் எழுப்பக் கூடாதாம்!

இப்படியொரு ''அநீதி''யை ''நீதி''யெனக் கூறிக் கொண்டு சட்டமும் ஒழுங்கும்-தனது பாய்ச்சலே நமது கழகத்தின் மீது நடத்துவதை நாட்டுக்கு உணர்த்திடும் பொறுப்பு நமக்கு உண்டு!

அந்தப் பொறுப்பினை நிறைவேற்றவே, செப்டம்பர் மூன்றும் நாள் முதல் நமது அறப்போராட்டம் தொடங்குகிறது.

ஒவ்வொரு நாளும் கழக முன்னணியினர் தலைமையில் கழகச் செயல்வீரர்கள், அரசின் தடையை மீறி அறப்போரில் ஈடுபடுவர்!

சிங்களவரால் சீரழியும் தமிழர்களுக்காக, நாம் இங்கே சிறையினில் ''தவம்'' இருப்போம்!

சிறையில் இருக்கும் உடன்பிறப்புகளையும்—சிறையேகிட அணிவகுக்கும் உடன்பிறப்புகளையும் வாழ்த்துகிறேன்!

உங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பினை நானும் பெற இருப்பதை எண்ணி மகிழ்கிறேன்!

அமைதிக்கு அணுவளவும் குந்தகம் நேர்ந்திடாதவாறு நமது அறப்போர் தொடரட்டும்!

அன்புள்ள

மு. கு.

(கலைஞர் 3.9.81 அன்று எழுதிய கடிதம்)

★

சென்னை மருத்துவக் கல்லூரியில் கலைஞர் உரை!

''இன்று உங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் இலங்கையிலே கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்ற தமிழர்களுக்கு ஓரளவு பாதுகாப்பு தரமுடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த உண்ணாநோன்பினை ஒரு நாள் அடையாளமாக நீங்கள் நடத்துவது கண்டு உங்களை எல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் இன்று நம்முடைய உள்ளத்திலே பூண்டுள்ள நோன்பு உண்ணாநோன்பு மாத்திரமல்ல; நாம் கொண்டுள்ள நோன்பு—நாம் கடைப்பிடிக்கின்ற நோன்பு— கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்களுக்கு வந்துற்ற கேடுபாடுகளை எல்லாம் நீக்குவதற்கு நம்மால் இயன்ற எல்லாவிதமான ஒத்துழைப்பையும் தருவோம். அவர்களுக்கு உறுதுணையாக நிற்போம் என்ற நோன்பும் ஆகும்.

மாணவர்கள் ஆர்வத்தோடு அதே நேரத்தில் தமிழர்கள் சித்திரவதைக்கு ஆளாகிறார்கள் என்ற ஆத்திரத்தோடு இலங்கையிலே கண்ணீரும் செந்நீரும் சிந்துகின்ற தமிழர்களுடைய துயரைத் துடைக்க வேண்டும் என்ற ஆதங்கத்தோடு இந்த நிகழ்ச்சியை இன்றைய தினம் தொடங்குகிறார்கள்.

தமிழ்நாட்டிலே உள்ள ஒவ்வொரு கட்சிக்கும் இடையே எத்தனை கொள்கை மாறுபாடுகள், முரண்பாடுகள் இருந்தாலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே அனைத்துக் கட்சிகளும் ஒரே குறிக்கோளைக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறியாதவர்கள் அல்ல.

கொடுமைக்கு ஆளாகிற இலங்கைத் தமிழர்களை மீட்டிட வேண்டும். அவர்களுக்கு நல்வாழ்வு அளித்திட வேண்டும் என்று எல்லா கட்சிகளும் தனித்தனியாக குரல் எழுப்பி யுள்ளன. வருகிற 8-ஆம் தேதி அன்று எல்லாக் கட்சிகளும் இணைந்து தமிழகம் முழுவதும் மாநிலம் தழுவிய அர்த்தால் ஒன்றினை நடத்துவதாகவும் இருக்கிறோம்.

அப்படி முழு அர்த்தால் நடத்துகின்ற காரணத்தா லேயே வேறு வகையான கண்டனங்கள். இலங்கை இன வெறிக்கு எதிர்ப்பான நிகழ்ச்சிகள் அறப்போராட்டங்கள் நடை பெறக்கூடாது என்பது நியாயமில்லை. நாம் அனை வரும் ஒட்டு மொத்தமாக போராடுகிறோம் என்ற காரணத் திற்காக நம்முடைய உள்ளக் கொந்தளிப்பை, ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர்களோ, அமைப்புக்களோ வெளியிடு வதில் தவறு கிடையாது. நாம்தான் ஒருநாள் அர்த்தால் நடத்தப் போகிறோமே, அதற்கிடையே நீங்கள் ஏன் உண்ணா விரதம் இருக்க வேண்டும்? என்று நான் உங்களைக் கேட்க மாட்டேன். எனக்கு வருகிற விளம்பரம் மற்றவர்களுக்கு போய்விடப் போகிறதே என்ற பொறுமை எனக்கு இல்லை; என்னுடைய கட்சிக்கு இல்லை; ஆகவே தான் அனைவரும் ஒருங்கிணைந்து அர்த்தால் 8-ஆம் தேதி நடத்தவிருக்கிறோம் என்றாலும் கூட, அதற்கிடையே ஏற்படுகிற பல்வேறு நிகழ்ச்சிகளை யொட்டி ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளை இலங்கை அரசுக்கு வெளிக்காட்டிக் கொள்வதில் தவறு கிடையாது.

சட்டமன்றப் பேரவையில் கூட நம்முடைய பேராசிரியர் எனக்கு வந்த ஒரு தந்தியைக் குறிப்பிட்டுக் கேட்டார்கள் தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்திற்கு அருகேயுள்ள கோடிக்கரை கடற்கரையில் இலங்கையிலிருந்து சில பிணங்கள் வந்து ஒதுங்கியிருப்பதாக வந்த தந்தி பற்றி குறிப்பிட்டுக் கேட்ட போது, அவை முன்னவர் நாவ லர் விவரங்கள் அறிந்து சொல்வதாகச் சொன்னார். அதற் குப் பிறகு அந்தச் செய்தி தவறு என்று நாவலர் மறுத்திருந் தார். ஆனால் இன்று எனக்கு கிடைத்துள்ள தகவல்படியும், தொடர்ந்து இரண்டு நாட்களாக வந்துள்ள செய்திபடியும், அப்படி பிணங்கள் வந்து ஒதுங்கியது உண்மைதான் என்றும் அந்தப் பிணங்களில் சில தலையற்றவையாகவும், சில கை, கால் அற்றவையாகவும் வந்து ஒதுங்கியுள்ளதாகவும், மீன் பிடிக்கச் செல்கிற மீனவர்கள் அவைகளைப் பார்த்ததாகவும்

செய்திகள் வருகின்றன. அப்படி வருகின்ற பிணங்களை அதிகாரிகள் எடுத்துப் புதைத்து விட்டு, அப்படி பிணமே ஒதுங்கவில்லை என்று சொல்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அந்த அதிகாரிகளும் தமிழர்கள் தான். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் தான்; அவர்கள் இப்படிச் செய்வது உண்மையாக இருக்குமானால் அது கடும் நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டியதாகும்.

இன்று காலையில் கூட எனக்கு இது குறித்து செய்தி வந்து, நான் டெல்லியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிறேன். இவ்வளவு பிணங்கள் தொடர்ந்து இலங்கையில் விழுந்து கொண்டிருப்பதால் நம்முடைய எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்ட மாணவர்கள் இந்த அடையாள நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாணவர்களின் அந்த உறுதி வாய்ந்த நெஞ்சத்தை நான் பாராட்டுகிறேன். என்றென்றும் கடல் கடந்து வாழ்கிற தமிழர்களுக்கு நம்முடைய அனுதாபமும், பாதுகாப்பும் உண்டு என்பதை திரும்பிக்கும் வகையில் நடந்து காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இடையிடையே இப்படிப்பட்ட எத்தனை நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் 8-ம் தேதி நடைபெறப் போகிற அர்த்தாலிலும் நாமனைவரும் பங்கு பெற்று இலங்கை அரசு நடத்துகின்ற அராஜகங்களைக் கண்டிக்கின்ற வகையில் தமிழர்கள் ஒருமித்த குரல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாணவர்கள் இன்று தொடங்குகின்ற அடையாள உண்ணாநோன்பினைத் தொடங்கிவைக்கின்றேன்.

(சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதத்தை தொடங்கி வைத்து 2-9-81-ல் கலைஞர் ஆற்றிய உரை)

★

பள்ளிக்குப் போன பிள்ளை திரும்பிவரவில்லை என்றால் தாயே பிள்ளையைத் தேடிப் போவது போல் சீத்தாபதியும் மற்றவர்களும் சிறையிலிருந்து திரும்பி வராவிட்டால் நானும் அவர்கள் இருக்கும் இடம் செல்வேன்!

நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சென்னை இரயிலில் ஏறுகிற நேரத்தில் சென்னை மாவட்டக்கழகத் தின் செயலாளர் ஆர். டி. சீத்தாபதி இந்தத் திருமணத் திற்கான தேதியை என்னிடம் உறுதி செய்து அய்யாச் சாமிக்கு அறிவித்தார்.

அவர் உறுதி செய்து கொடுத்த காரணத்தாலோ என்னவோ நன்றி மறவாமல் இந்தத் திருமண அழைப் பிதழில் மணமக்களை ஆர். டி. சீத்தாபதி வாழ்த்துவார் என்று அச்சிடப்பட்டிருக்கிறது.

ஆனால் நண்பர் எம். ஜி. ஆர். அவர்களின் கருணையின் காரணமாக சீத்தாபதி தூத்துக்குடி வருகிறார். அவரை அலையவிடக் கூடாது என்பதற்காக நண்பர் எம். ஜி. ஆர். கடந்த ஐந்து நாட்களாக சென்னை சிறைச்சாலையிலே அரசாங்க விருந்தினராக வைத்திருக்கிறார்.

சீத்தாபதி வேறு எந்தக் குற்றமும் செய்து விட்டு சென்னை சிறைச்சாலையிலே அடைப்பட்டிருக்க வில்லை. சீத்தாபதி செய்த ஒரே ஒரு குற்றம் இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுடைய இரத்தமும், இந்தத் தமிழகத்திலே வாழ் கிற தமிழர்களுடைய இரத்தமும் ஒரே இரத்தம் தான் என்று சொன்னார். அந்தக் குற்றத்தை என்னுடைய ஆட்சி யிலே செய்யலாமா? என்று கேட்டு நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் சீத்தாபதியையும் அவரோடு 150-க்கும் மேற் பட்ட தோழர்களையும் மகளிர் அணியைச் சார்ந்த 10 பேர்

களையும் சென்னை மத்திய சிறைச்சாலையில் அடைத்து அவர்கள் மீது குற்றப்பிரிவுகள் பலவற்றைத் தொகுத்து வழக்கும் தொடர்ந்து அவர்களின் ரிமாண்டு காலம் 15 நாள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அவர்களை எல்லாம் வழி அனுப்பி வைத்தவன் என்ற முறையில் அவர்கள் இன்னும் திரும்பி வராத காரணத்தால் என்னுடைய கடமையை நான் நிறை வேற்ற வேண்டிய வனுக இருக்கிறேன்.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகிற தாய், பள்ளிக் கூடம் போன பிள்ளை திரும்பி வராவிட்டால் தெருவோரத் திலே நின்று அந்தத் திக்கை எதிர்பார்த்து இருப்பாள். பிள்ளை வருவானு? என்று எதிர்பார்த்திருப்பாள். வரவில்லை என்றால் பிறகு அவளே பள்ளிக்கூடம் நோக்கிச் செல்வாள். பிள்ளையைத் தேடி பிள்ளை இருக்கின்ற திக்கு நோக்கிச் செல்வோம் என்று அங்கே செல்வாள். அதைப் போலத் தான் பிள்ளையைத் தாய் வழியனுப்பி வைத்ததைப் போல், நான் சீத்தாபதியையும் மற்றவர்களையும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அறப்போராட்டத்திற்கு வழி அனுப்பி வைத்தேன்.

அவர்கள் திரும்பி வரவில்லை. என்ன ஆனார்களோ என்று பார்க்கக் காத்திருக்கிறேன். திரும்பி வராவிட்டால் நானும் அவர்கள் இருக்கிற இடத்திற்குச் செல்ல வேண்டியவனுக இருக்கிறேன் என்பதைத் தான் நேற்று முன்தினம் அறிக்கை வாயிலாக நான் தெரிவித்தேன்.

அடையாள மறியல் என்றநிலை மாற்றப்பட்டு தொடர் மறியலாகி விட்டதற்குக் காரணம் நாங்கள் அல்ல. நாட்டிலே நடைபெறுகிற அரசுதான் என்பதையும் தமிழ்ச் சமுதாயப் பெருங்குடி மக்களுக்கும், உலகெங்கும் வாழ்கிற தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் உரக்கக் கூறிவிட்டு அந்த பணியில் நாங்களே எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறோம்.

(தூத்துக்குடியில் 3.9.81 அன்று நடைபெற்ற ஒரு மணவிழாவில் தலைவர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி)

★

இரத்தத்தோடு ஊறிய பிரச்சினை!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இலங்கைப் பிரச்சினை, ஏறத்தாழ இருபது-இருபத்து ஐந்தாண்டு காலமாக நம்முடைய இரத்தத்தோடு ஊறிய பிரச்சினை.

இலங்கையிலே வாழுகின்ற தமிழர்கட்கு ஓர் இன்னல் என்றால், அவர்கள் மீது தூசு பட்டிருந்தால் அவர்களுக்குத் துன்பம் துயரம் என்றால், துடித்து எழக்கூடிய பட்டாளம் தமிழகத்திலே தாயகத்திலே—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பட்டாளம்தான்! இந்த உணர்வை ஏற்று இருக்கின்ற அண்ணா காலத்திலிருந்து இந்தக்காலம் வரையில், திராவிட முன்னேற்றக் கழகம் புதைத்துப் போய் — பதறிப் போய் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து- அவர்களுக்குத் தந்தி மூலம் தகவல்களைத் தெரிவித்து — சென்னைக்கு வந்த அமிர்தலிங்கத்துடன் பேசி-இலங்கையிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளையெல்லாம் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ரீதியில் நம்முடைய கண்டனக் குரலை எழுப்பினோம்!

சட்டமன்றத்திலே இலங்கைப் பிரச்சினை பற்றித் தீர்மானம் வந்தபோது, நம்முடைய கருத்துக்களை அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அர்த்தால் நடத்தப்படும் என்றார்கள் சொன்னார்களே தவிர, அதிலே வேகம் காட்டப்படவில்லை.

எட்டாம் தேதி என்றார்கள். இப்போது பன்னிரண்டாம் தேதி என்று மாற்றப்பட்டிருப்பதாக எனக்கு மாலையிலே தகவல்!

அர்த்தாலில் தி. மு. க. ஒத்துழைக்கும் அதற்கிடையில் நான் சேட்பதெல்லாம், எல்லோரும் சேர்ந்து அர்த்தால் நடத்துகிறோம். சரி! அதே நேரத்தில் அந்தந்தக் கட்சியும் தன்னுடைய கண்டனத்தை இலங்கை பிரச்சினைக்கு ஏன் காட்டக்கூடாது? அந்த உரிமை கிடையாதா?

நான் பக்தர்களுக்குச் சொல்கிறேன், பிள்ளையார் கோவில் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நேற்றோ அதற்கு முன்தினமோ விநாயகர் சதுர்த்தி பிள்ளையார் கோவிலிலே மாலை நேரத்திலே பிள்ளையாரை ஜோடித்துப் பிரார்த்தனை நடத்துவர்.

எல்லா பக்தர்களும் ஒன்று கூடி இசை விழா முதலிய வைகள் எல்லாம் நடைபெறுகின்றன. ஊரிலுள்ள பக்தர் களெல்லாம் கோவிலுக்குச் செல்வர்! பிள்ளையார் கோவி லுக்கு விழா நடத்துகிறார்கள்!

அதற்காக தனித்தனியாக வீட்டில் களிமண் பிள்ளை யாரை வாங்கி வைத்து—அந்தப் பிள்ளையாரையும் பூஜிக் கின்ற வழக்கம் உண்டா? இல்லையா?

பிள்ளையாரை வைத்துக் கொண்டாடுகின்ற பக்தர்களே தான் நான் கேட்கிறேன்? அப்படி உண்டல்லவா?

அதைப் போலத்தான் எல்லோரும் சேர்ந்து பிள்ளை யார் கோயிலிலே விழா நடத்துவதைப் போல—இலங்கைப் பிரச்சினைக்கு அர்த்தால் நடத்துகிறோம்!

கோவிலிலே விழா நடந்தாலும் கூட-வீட்டிற்குள்ளே பிள்ளையாருக்குப் படைக்க பிள்ளையார் உருவத்தை வைத்து வணங்குவதைப் போல, நாங்கள் இலங்கைத் தூதுவரகத் தின் வாசலில் மறியல் நடத்துகிறோம்! இது எப்படித் தவறாகும்.

''கோவில் விழா நடக்கும் போது உன்னுடைய வீட்டிலே பிள்ளையார் எதற்கு?'' என்று எம். ஜி. ஆர். சொல்கிறார்.

இதற்குப் பக்தர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்!

இலங்கைப் பிரச்சினைக்காக ஒரு அர்த்தால் என்றால், அது எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நடத்துகின்ற நிகழ்ச்சி! அதற்கிடையே ஒவ்வொரு கட்சியும் இலங்கைத் தூதுவர கத்திற்கு முன்பு போராட்டம் நடத்த-ஆர்ப்பாட்டம் நடத்த-அணி வகுப்பு நடத்த-கண்டனக் குரல் எழுப்ப உரிமை படைத்தவை!

ஆனால் எம். ஜி. ஆர். காட்டிய தாமதத்தின் காரண மாகவும், இலங்கையிலிருந்து வந்த செய்திகளின் காரண மாகவும் நெஞ்சு துடிக்கின்ற மாவட்டச் செயலாளர் சீத்தாபதி தலைமையில், என். வீ. என். சோமு எம். எல். ஏ., து. புருசோத்தமன் எம். எல். ஏ. ஆகியோரும் மற்றும் 150 பேரும் 10 பெண் மணிகளும் இலங்கைத் தூதுவரகத் தின் முன்னால் மறியல் செய்வார்கள் என்று அறிவிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை எங்களுக்கு ஏற்பட்டது. அப்படி என்ன நெஞ்சைக் குலுக்குகின்ற செய்தி!

தமிழ் பிணங்கள்-இலங்கையிலே வெட்டிக் குவிக்கப் பட்ட தமிழ் பிணங்கள்-மிதந்தன. தம்பி கோபால்சாமி சொன்னரே; கரிகால் பெருவளத்தானுடைய நாவாய்கள் மிதந்த கடலலையின் மீது சோழ மன்னனுடைய கப்பல்கள் மிதந்த கடலலையின் மீது-அங்கே வெற்றி கொண்டு 12 ஆயிரம் சிங்களவர்களைக் கொண்டு வந்து கல்லணைக்குக் கரை எடுத்தானே-அந்த சோழ மன்னனுடைய பரம்பரை பிணங்களாக — அந்தக் கடலலையிலே மிதந்து வருகின்றார்கள் என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்க கூடிய கட்சியா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

இன்னொரு செய்தியும் ஏடுகளிலே வந்தது-தமிழனை வெட்டுகிறான்-கூறு கூறுக்குகிறான். நெஞ்சைப் பிளக்கிறான்-இருதயத்தை பிய்த்தெடுக்கிறான்-எல்லாவற்றையும் ஒரு கூடையிலே வைத்து—ஒரு கடையிலே வைத்து-இங்கே தமிழனுடைய மாமிசம் விற்பனைக்குக் கிடைக்கும் என்று சிங்களவன் எழுதுகிறான் என்றால், ''சீறி வந்த புலியதனை சிங்கார மறத்தியொருத்தி முறத்தினாலே துரத்தினாளே'' என்று புறநானூற்று வரிகளைப் பாடிக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் அதை பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? என்று தான் நான் உங்களையெல்லாம் கேட்க விரும்புகிறேன்.

அந்த எழுச்சியின் வடிவம் தான் நடத்தப்படுகின்ற திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய அறப்போராட்டம்.

எம். ஜி. ஆர். என்ன செய்திருக்க வேண்டும்? ஒரு நாள் அடையாள மறியல் தானே-தொடர்ந்து மறியல் அல்லவே-சரி-மறியல் களம் வரையிலே சென்றவர்களைக் கைது செய்ய வேண்டியது சட்டப்படி நியாயம், நானே முதலமைச்சராக இருந்தால் கூட மறியல் களத்திற்கு வந்தவர்களை, மறியலிலே ஈடுபடுபவர்களைக் கைது செய்வது முறைதான் என்று சொல்லுவேன்.

அது ஒரு நாள் மறியல் ஆயிற்றே-மாலையிலே விடுவித்திருக்கக் கூடாதா? இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள் அதே தூதுவராலயத்தின் முன்னால் சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார்கள். காலையிலே கைது செய்த எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களை மாலையிலே விடுவித்து விட்டார். விடுவிக்கா விட்டால் என்ன நடக்கும் என்று

அவருக்குத் தெரியும். ஆகவே விடுவித்து விட்டார். ஆனாலும் காலையிலே மறியலிலே ஈடுபட்ட சிதாபதி போன்ற தோழர்களை-நூற்றி ஐம்பது தோழர்களை - பெண்மணிகள் உட்பட 157 பேரை ரிமாண்ட் கைதிகளாக ஆக்கி சென்னை மத்திய சிறைச் சாலையிலே வைத்து நாட்கள் நான்கைந்து ஆகின்றன. 15 நாள் ரிமாண்ட் அவர்கள் மீது வழக்கு.

அதற்குப் பிறகுதான் நாங்கள் முடிவு எடுத்தோம். ஒரு நாள் அடையாள மறியல் அதை வைத்துக் கொண்டு நம்மைப் பழி வாங்க எண்ணுகிறார் என்றால் கிட்டத்தட்ட இலங்கையிலே இருக்கின்ற ஜெயவர்த்தனேவிற்கும் இங்கே இருக்கிற எம்.ஜி.ஆருக்கும் என்ன வித்தியாசம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. எனவேதான் ஜெயவர்த்தனே அரசினுடைய கொடுமையைக் கண்டிக்கிற அதே நேரத்தில் இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பழி வாங்குகின்ற இந்தப் பாதக அரசையும் கண்டிக்கின்ற வகையில் இந்தப் போராட்டம் தொடரும் என்று அறிவித்து இருக்கிறோம்.

செப்டம்பர் 15-ம் நாள் அண்ணா பிறந்தநாள் விழா, அண்ணா பிறந்த நாள் விழாவின் போது மூவாயிரம் பேர்—நாலாயிரம் பேர் சிறைச்சாலையிலே இருப்பார்கள். பிறந்த நாள் விழாவைக் கொண்டாட வெளியே இருப்பவர்களுக்கு பல தலைவர்கள் கிடைப்பார்கள். ஆனால் சிறையிலே இருப்பவர்களுக்குத் தலைவர்கள் கிடைக்க மாட்டார்கள். எனவேதான் அவர்களோடு சென்று அந்தப் பிறந்தநாள் விழாவை அங்கே கொண்டாடநான் தீர்மானித்து இருக்கிறேன்.

(விளாத்திகுளத்தில் கலைஞர் எடைக்கு எடை ஒரு ரூபாய் நாணயம் வழங்கிய விழாவில் 3.9.81 அன்று கலைஞர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி).

★

தனபதி குடும்ப நிதியும் எம். ஜி. ஆர். தரங்கெட்ட பேச்சும்!

உடன் பிறப்பே,

''இலங்கையில் கொலை செய்யப்பட்ட சென்னையைச் சேர்ந்த தனபதி குடும்பத்திற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி மூவாயிரம் ரூபாய் நிதி உதவி செய்ய முன்வந்தார். ஆனால் அதைப் பெற்றுக் கொள்ள தனபதியின் குடும்பத்தினர் மறுத்து விட்டனர். கட்சியின் சார்பில் பத்தாயிர ரூபாய் வசூல் செய்து அதில் மூவாயிரம் ரூபாய் கொடுக்க முன் வந்தார். அதில் கூட ஏழாயிரம் ரூபாயைச் சாப்பிடத் துணிந்து விட்டார்.''

இப்படி பேசியது யார் தெரியுமா? எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள்தான்!

அவரது இந்த நரகல் நடை பேச்சு 'தினத்தந்தி' சென்னை பதிப்பில் வெளி வந்திருக்கிறது.

கடந்த திங்கள் ஆகஸ்டு 31-ஆம் நாள் பம்பாய் தமிழ் அகாடமியின் முதலாண்டுவிழா நிகழ்ச்சி, பம்பாய் சண்முகானந்தா அரங்கில் நடைபெற்றது. அந்தத் தமிழ் அகாடமிக்கும் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. வணிகத் துறையிலும், ஏர் இந்தியா போன்ற அலுவலகங்களிலும் பணியாற்றுகிற தமிழர்கள் ஒன்று சேர்ந்து நடத்துகிற அமைப்பு தான் அந்தத் தமிழ் அகாடமி! கட்சிச் சார்பற்ற முறையில் செயல்பட்டு வருகிற அந்தத் தமிழ் அகாடமி விழாவில் நுழைவுக் கட்டண நன்கொடைச் சீட்டுகளின் மூலம் இருபத்தைந்தாயிரம் ரூபாய்வசூலாயிற்று என்றுஅறிவிக்கப்பட்டது. அந்த வசூல் கணக்கும் அதில் மிஞ்சுகின்ற தொகையும் பம்பாயில் உள்ள அந்தத் தமிழ் அகாடமியின் பொறுப்புக்கு உட்பட்டதாகும். அந்த நிகழ்ச்சியில் அகாடமி சார்பில் தனபதி குடும்பத்திற்கு ஆயிரம்ரூபாய் நிதியை வழங்குமாறு என்னிடம் அளித்தார்கள். அதே மேடையில் பம்பாய் தி.மு.கழகத்தின் சார்பில் இரண்டாயிர ரூபாய் நிதியை என்னிடம் தந்து இலங்கையில் படு கொலைக்கு ஆளான தனபதி குடும்பத்திற்கு கொடுத்து விடுமாறு கேட்டுக் கொண்டனர்.

பம்பாய் நிகழ்ச்சிகள் முடிவுற்று மறுநாள் செப்டம்பர் முதல் நாள் காலை விமானத்தில் சென்னை திரும்பினேன். கழகப் பொருளாளர் சாதிக் அவர்களிடம் அந்த மூவாயிர ரூபாயையும் கொடுத்து அதனை திருவொற்றியூரிலுள்ள தன பதி குடும்பத்தாரிடம் சேர்த்து விடுமாறு கேட்டுக் கொண் டேன். அவரும், மா.வெ.நாராயணசாமியும் மாவட்டச் செயலாளர் ஆறுமுகமும், நகரச் செயலாளர் பழனிச் சாமியும், மற்ற நண்பர்களும் சென்று மறைந்த தனபதியின் துணைவியாரிடம் அந்தத் தொகையை செப்டம்பர் முதல் நாள் மாலையிலேயே அளித்து, அதற்கான கையெழுத்தையும் பெற்றுள்ளனர்.

அன்னையார் சோகமே உருவாக நின்று, தனபதியின் துணைவியார் அமுதா அவர்கள் கண்கலங்கிட அந்த நிதியை நன்றியுணர்வுடன் பெற்றுக்கொண்டகாட்சி புகைப்படமாக 'தினகரன்' இதழில் வெளிவந்தது. அந்தப் படத்தையும் தனபதியின் துணைவியார் அமுதா அவர்கள் நிதியைப் பெற்றுக் கொண்டதற்கான கையெழுத்திட்ட தாளையும் இத் துடன் இணைத்திருக்கிறேன்.

கொடுத்த நிதியை தனபதியின் குடும்பத்தினர் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள் என்று எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் நெல்லையில் பேசியிருப்பது எவ்வளவு பச்சை பொய் என்பது உனக்கும் ஊருக்கும் தெரிய வேண்டும் என்பதற் காகத்தான் இந்த விபரங்களையெல்லாம் தெரிவிக்க வேண்டி வந்தது!

உதவிநிதியை நன்றி கூறிப் பெற்றுக் கொண்டது மாத் திரமல்ல; அடுத்து இரண்டொரு நாட்களுக்கெல்லாம் தன பதியின் நினைவுச் சடங்கிற்கான அழைப்பை அவரது சகோ தரரே தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து எங்களிடம் கொடுத்து விட்டு அன்பினை வெளிப்படுத்தி விட்டுச் சென்றார்.

அதற்குப்பிறகு நடைபெற்றது என்னவென்று எனக்குத் தெரியாது! மூவாயிர ரூபாய் நிதியை அந்தக் குடும்பத்தினர் திருப்பி அனுப்பிவிட்டனர் என்று செய்திகள் வெளியிடப் பட்டன.

அதைத் தொடர்ந்து எம். ஜி. ராமச்சந்திரன், நெல்லை யில் இப்படியொரு அபத்தமான சொற்பொழிவை ஆற்றி யிருக்கிறார்.

''பெற மறுத்துவிட்டனர்'' என்று அவர் கூறியதற்கும் பெற்றுக் கொண்டதை ஒரு வாரம் கழித்துத் திருப்பி அனுப்புவதாகச் செய்தி தருவதற்கும் இடையிலே என்ன நடந்திருக்கும் என்பது அவரவர் யூகங்களுக்கே விடப்படுகிறது!

நெல்லை அ.தி.மு.க. மாநாட்டில் இருபத்தி ஐயாயிர ரூபாய் தனபதி குடும்பத்திற்குத் தரப்பட்டுள்ளது.

அப்படி நிதி வழங்கியதோடு நிறுத்தாமல், ''கருணாநிதி கொடுத்ததை வாங்க மறுத்து விட்டார்கள்'' என்றும், ''பத்தாயிரம் வசூலித்து அதில் ஏழாயிரத்தைச் சாப்பிடத் துணிந்து விட்டார்'' என்றும் சந்துமுனைச் சிந்துபாடி போல எம். ஜி. ராமச்சந்திரன் ஜீரணமாகாத வார்த்தைகளை வாந்தியெடுத்திருப்பது ''தினத்தந்தி'' ஏட்டில் அள்ளிக் கொட்டப்பட்டிருக்கிறது.

பிளண்டிங் யூனிட் என்றும் பாட்லிங் யூனிட் என்றும் மாவட்ட மொத்த வியாபார மது உரிமங்கள் என்றும் ஊழல் நடத்தி அதிலே வசூல் மன்னனுகத் திகழ்ந்து பஸ் முதலாளிகளிடம் கையூட்டுப் பெற்று சலுகைகளை வழங்கி அதிலும் வசூல் மன்னனுக விளங்கி, ஊரும் உலகமும் சிரித்திடுமளவுக்கு லஞ்சலாவண்ய அவதாரம் எடுத்திருப்பவர்கள்; இப்படிப்பட்ட தரக்குறைவான பேச்சுக்களின் வாயிலாகத் தங்களை உத்தமபுத்திரர்கள் என்று காட்டிக்கொள்ள முனைகிறார்கள் என்பது புரிகிறதல்லவா?

தனபதி குடும்ப நிதியென்று தி.மு. கழகத்தின் சார்பில் எவரிடமும் எங்கும் வசூல் செய்யப்படவுமில்லை! அப்படியொரு அறிவிப்பு தரவுமில்லை!

பம்பாய் தமிழ் அகாடமி ஆண்டு விழாவுக்குச் சென்ற நேரத்தில் பம்பாயில் உள்ள தி. மு. கழகத்தினரும், தமிழ் அகாடமியைச் சேர்ந்தவர்களும் மூவாயிர ரூபாயை தனபதி குடும்ப நிதியென மேடையில் அறிவித்து என்னிடம் தந்தார்கள்; அவ்வளவுதான்!

நிதியை நன்றியுணர்வோடு பெற்றுக் கொண்ட தனபதி குடும்பத்தினர் ஒரு வாரம் கழித்து அதனைத் திருப்பி அனுப்புவதாக அறிவித்துள்ளனர்.

அவர்களுக்கு இடையிலே ஏற்பட்ட தொல்லை என்ன என்பது எம். ஜி. ராமச்சந்திரனை அறிந்தவர்களே புரிந்து கொள்ள முடியும்.

தனபதி இலங்கையில் கொல்லப்பட்ட செய்தி கிடைத்ததும் அது குறித்துச் சட்டப் பேரவையில் குரல் எழுப்பி விளக்கம் கேட்டவன் நான்!

கண்ணீர்மல்க முரசொலியில் கடிதம் எழுதியவன் நான்!

''இலங்கையில் விழுந்தது எங்கள் கட்சிக்காரன் பிணம்! நாங்களே சும்மாயிருக்கும்போது உங்களுக்கேன் அக்கறை?'' என்று பேரவையில் ஒரு அமைச்சரே கேட்டார்.

பரவாயில்லை; உடனடியாக அந்தக் குடும்பத்திற்கு மூவாயிர ரூபாய் தந்த காரணத்தால்—அவர்களுக்கு இப்போது இருபத்தையாயிர ரூபாய் கிடைத்திருக்கிறது.

திருப்பி அனுப்ப வேண்டிய நெருக்கடி தனபதியின் குடும்பத்திற்கு ஏற்பட்டு விட்டதே என்ற வருத்தம் நமக்கிருந்தாலும் கூட, நம்மால் அந்தக் குடும்பத்திற்கு இருபத்தையாயிரம் கிடைத்ததே என்ற ஆறுதலும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படாமல் இல்லை!

அன்புள்ள

மு.க.

(கலைஞர் 31-8-81 அன்று எழுதிய கடிதம்)

✺

தி. மு. கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பம்பாய் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது பம்பாய் தி. மு. கழக சார்பில் ரூ. 2,000/-ம், பம்பாய் தமிழ் அகாடமி சார்பில் ரூ. 1,000/.ம் ஆக மொத்தம் ரூ. 3,000/- (மூவாயிரம் மட்டும்) தனபதி குடும்ப நிதிக்கென அளிக்கப்பட்ட தொகையினை இன்று கழகப் பொருளாளர் திரு. சாதிக் பாட்சா அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

P. அழகா

8-9-1981

★

தி. மு. க. நிர்வாகக் குழு முடிவு

கழக நிர்வாகக் குழுக் கூட்டம் 10.9.81 அன்று மாலை கழக சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கழகத் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்ட முடிவு வருமாறு:-

''இலங்கைத் தமிழர் படும் அவதியைக் கண்டித்து ஒரு நாள் அடையாள மறியலில் ஈடுபட்ட கழகத்தினரை கைது செய்து சிறையில் அடைத்து வழக்கு தொடுத்துள்ள எம். ஜி. ஆர். அரசின் அடக்கு முறையை இந்த நிர்வாகக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கைத் தமிழர் நலனுக்காக மற்றைய கட்சிகள் தங்களது கண்டனத்தை கிளர்ச்சிகள் மூலம் தெரிவித்த போதிலும் எம். ஜி. ஆர். அரசு தி. மு. கழக உடன்பிறப்புக் களை மட்டும் கைது செய்து சிறையில் அடைத்து வழக்கும் தொடுத்துக் கொண்டிருப்பது இந்த அரசின் பழிவாங்கும் போக்கைத் தெளிவாகக் காட்டுகிறது. அதன் விளைவே ஒரு நாள் மறியல் என்ற நிலை மாற்றப்பட்டு தொடர் மறிய லாக தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதுவரையில் நானூறு பேர் தி. மு. கழகத்தினர் சென்னை மத்திய சிறை யில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இலங்கையில் பல சூழ்நிலை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக இலங்கைக் குடியரசுத் தலைவர் சிங்கள வெறியர்களால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமையைக் கண்டித்தும், தூண்டி விடக் காரணமாக இருந்த தனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கண்டித்தும் சிங்கள அமைச்சர் ஒருவரையே அமைச்சரவையிலிருந்து நீக்கியும், எதிர்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களைக் கலந்து பேசியும் உடனடி தீர்வு காண முயற்சி எடுப்பேன் என வெளிப்படையாக பேசியுள்ள கருத்துக்கள் பரிசீல னைக்கு உரியவை.

பிரதமரின் நல்லெண்ணம்!

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் தனது நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டு வீட்ட கொடுமைகளுக்குப் பரிகாரம் காண்பதில் இதயசுத்தியோடு இருக்கிறார் என இந்த நிர்வாகக் குழு உணர்கிறது. ஆனால் அதே நேரத்தில் எம். ஜி. ஆரால் கைது செய்யப்பட்ட தி. மு. கழகத்தினர் நானூறு பேர் இங்கே சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று எம். ஜி. ஆர். அரசை இந்த நிர்வாகக் குழு வலியுறுத்துகிறது.

அவர்களை விடுதலை செய்வது ஒன்றே தலைவர் கலைஞர் அவர்கள் 15-ஆம் தேதி போராட்டத்துக்கு தலைமை தாங்கும் நிலையை மாற்றக் கூடியது என்றும் நிர்வாகக் குழு அறிவிக்கிறது.

கைது செய்யப்பட்டு விட்ட கழகத்தினர் அனைவரையும் செப்டம்பர் 15-ஆம் தேதிக்கு முன் விடுதலை செய்ய இந்த அரசு தவறுமேயானால் கழகத் தலைவர் கலைஞர் தலைமை தாங்கி சென்னையில் மறியல் அறப் போராட்டம் நடத்துவது என்ற முடிவு உறுதிபடுத்தப் படும் என்பதை இந்த நிர்வாகக் குழு தெரிவித்துக் கொள்வதுடன் சென்னையில் தலைவர் கலைஞர் அறப்போரில் ஈடுபடுவதையொட்டி தமிழகம் முழுவதும் மாநிலம் தழுவிய மறியல் அறப்போர் மாவட்ட தலைநகரங்களிலும் நடைபெறும் என்று இந்த நிர்வாகக் குழு அறிவிக்கிறது.

தலைவர் கலைஞர் பேட்டி!

நிர்வாகக் குழு கூட்டத்திற்குப் பிறகு மேற்கொள்ளப் பட்ட முடிவுகளை கழகத் தலைவர் கலைஞர் பத்திரிகையாளர்களுக்கு எடுத்துக் கூறினார். அதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் எழுப்பிய வினாக்களுக்குத் தலைவர் பதிலளித்தார் அவை வருமாறு:-

செய்தியாளர்: மாவட்டத் தலைநகரங்களில் என்றைய தினம் அறப்போர் நடைபெறும்?

கலைஞர்: அதுவும் அன்றைக்கேதான் (செப்டம்பர் 15ஆம் தேதி)

செய்தியாளர்: 15–ஆம் தேதி அன்று உங்களுடன் எத்தனை பேர் கலந்து கொள்கிறார்கள்?

கலைஞர்: தலைமைக் கழகத்தின் சார்பில் நான் தலைமை தாங்குகின்றேன். மற்றபடி அதில் பொதுச் செயலாளரோ, பொருளாளரோ, துணைப் பொதுச் செயலாளரோ கலந்து கொள்ளவில்லை. மற்றபடி எத்தனை பேர் என்பதெல்லாம் கலந்து பேசி முடிவு செய்யப்படும்.

செய்தியாளர்: நிர்வாகக் குழு முடிவினைப் பார்க்கும் போது மறியல் நடத்துவதில் கொஞ்சம் தயக்கம் ஏற்பட்டிருப்பது போல் தெரிகிறதே?

கலைஞர்: நாங்கள் மறியல் நடத்தித் தான் தீர வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் அல்ல: அண்ணா அவர்கள் சொன்னது போல போராட்டத்தைத் தேடி அலைபவர்களும் அல்ல; வந்த போராட்டத்தை விட்டு விட்டு ஓடுபவர்களும் அல்ல.

செய்தியாளர்: இலங்கையில் சூழ்நிலை சில மாற்றம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்: அதற்குப் பிறகும் மறியல் ஏன்?

கலைஞர்: அப்படி ஏற்பட்டும்கூட கைதானவர்களை விடுதலை செய்யாமல் எம். ஜி. ஆர். வைத்திருப்பது தேவை தானா?

செய்தியாளர்: மற்றக் கட்சிக்காரர்கள் மறியல் செய்யவில்லை: தி. மு. கழகத்தினர் மட்டும் மறியல் செய்ததால் தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று எம். ஜி. ஆர். காரணம் கூறியிருக்கிறாரே?

கலைஞர்: தி. மு. கழகத்திற்கு மட்டும் தடை உத்திரவு பிறப்பிக்கவில்லையே, ஊர்வலத்திற்கும், உண்ணாவிரதத்திற்கும் சேர்த்துத் தானே தடை போட்டிருந்தார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தடையை மீறித் தானே உண்ணாவிரதம் இருந்தார்கள், தடையை மீறி உண்ணாவிரதம் இருந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் என். ஜி. ஓ. சங்கத் தலைவர் சிவ. இளங்கோ உண்ணாவிரதம் இருந்த போது மட்டும் ஏன் கைது செய்து இருபது நாள் சிறையில் வைத்திருந்தார்கள்? மறியல் செய்ததால்தான் இப்

போது கைது செய்யப்பட்டார்கள் என்று எம். ஜி. ஆர் கூறுகிறார், சிவ. இளங்கோ மறியல் செய்யப் போக வில்லையே; உண்ணாவிரதம் தானே இருந்தார். அவரை ஏன் கைது செய்தார்கள்? சட்டத்தை ஆட்சியாளர் இஷ்டத்திற்கு வளைத்துக் கொள்வதா?

செய்தியாளர்: பிரதமர் நாளைய தினம் வருகிறார்களே, சந்திப்பீர்களா?

கலைஞர்: பிரதமருடைய அலுவலகத்திலிருந்து எனக்கு தொலைபேசி மூலம் அம்மையார் அவர்கள் வருவதாக தகவல் வந்திருக்கிறது. நான் விமான நிலையத்தில் பிரதமரைச் சந்திப்பேன்.

செய்தியாளர்: தனியாகச் சந்தித்துப் பேசவிருக்கிறீர்களா?

கலைஞர்: அவர்கள் அவசர வருகையாக—அரசாங்க அலுவல் காரணமாக வருகிறார்கள்; நாளையே திரும்புகிறார்கள் அவர்களுக்கு வசதியும் நேரமும் இருந்தால் சந்திப்பேன்.

செய்தியாளர்: இலங்கைப் பிரச்சினை தவிர்த்து வேறு ஏதாவது தமிழக அரசைப் பற்றி புகார் ஏதாவது பிரதமரிடம் கூறுவீர்களா?

கலைஞர்: பேசுவதற்கு ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. சந்தர்ப்பம் கிடைத்தால் பேசுவேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் தலையங்கத்தை எடுத்துக் கொடுத்தாலே போதுமே; அந்த அளவிற்கு ஏராளமான புகார்கள் இருக்கின்றன.

செய்தியாளர்: தனபதி குடும்பத்துக்கு நீங்கள் கொடுத்த மூவாயிரம் ரூபாய்க்கான 'டிராப்ட்' திரும்பி வந்து விட்டதா?

கலைஞர்: ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஆனால் அத்துடன் 'டிராப்ட்' வரவில்லை. தனபதியின் சகோதரர் அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார். மனம் உவந்து கொடுத்தீர்கள். வாங்கிக் கொண்டோம். டிராப்டை திருப்பி அனுப்புவதற்காக மன்னிக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார். அது ரிஜிஸ்டர் தபாலில் வந்தது. ஆனால் அத்துடன் 'டிராப்ட்' எதுவும் இணைக்கப்படவில்லை. அந்த டிராப்டின் 'பிளாக்' மக்கள் குரலில் வெளிவந்திருக்கிறது.

எனவே டிராப்ட் மக்கள் குரல் அலுவலகத்தில் இருக்கலாம் என்று கருதுகிறேன். அது தாமதமாக வரும் என்று எண்ணுகிறேன்.

இவ்வாறு செய்தியாளர்களின் வினாக்களுக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் பதில் அளித்தார்.

★

இடர் எதுவரினும் ஏற்பேன் !

உடன் பிறப்பே,

நமது கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு எடுத்துள்ள முடிவும்-அந்த முடிவினை எடுப்பதற்கான விளக்கமும்-உனக்குக் கிடைத்து அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும்.

செப்டம்பர் 15ஆம் நாள் மாநிலத் தலைநகராம் சென்னையில் மட்டுமின்றி, மாவட்டத் தலைநகர்களிலும் ஆயிரக்கணக்கானோர் மறியலில் ஈடுபடுவதென்ற நிலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அடக்குமுறையை எதிர்த்து சிறை புகுவது-தியாகம் புரிவது என்றாலும் ஆட்சிமன்றம் செல்வது என்றாலும் இரண்டையும் சமமாகக் கருதக்கூடிய உறுதி படைத்தவர்கள் என் தம்பிமார்கள்; என்று அண்ணன் அடிக்கடி கூறுவார் அல்லவா-அந்த அண்ணன் பிறந்தநாள் விழாவிலேதான் நமது அறப்போர், மாவட்டத் தலைநகரங்களில்! தமிழகத் தலைநகரில்!

உரிமைக்காகக் குரல் கொடுத்து- தமிழர் உயர்வுக்காகக் களம் பல கண்டு நம் உளம் நிறைந்த அண்ணன், ''எங்கே பதவி? எங்கே பதவி?'' என்று வாய்பிளந்து நிற்கும் பேராசைக்காரர்களைத் தன் தம்பியாக ஏற்றுக் கொண்டதில்லை! மாலைக்கு மட்டுமே இந்தக் கழுத்து நீளும்- அடக்குமுறை வாள் பாய்ந்தால் அஞ்சி நடுங்கும்- என்றுரைப்போர் முகம் காணவே விரும்பாத தியாக வேந்தர் நமது அண்ணன்!

அந்த அண்ணன் பிறந்த நாளில்தான் தமிழகம் முழுவதுமுள்ள கழக அமைப்புகள் -மாவட்டத் தலைநகரங்களில் அறப்போர் பாசறைகளை அமைக்கின்றன!

ஏன்? எதற்காக?

இலங்கையில் தமிழன்;கொடுமை தாளாமல் குமுறிக் கொண்டிருக்கிறான். அந்தத் தமிழன் இங்குள்ள எந்தக் கட்சிக்கு ஆதரவாளன் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கவில்லை! அவன் காங்கிரசா? கழகமா? அ.தி.மு.க.வா? கம்யூனிஸ்டா? என்றெல்லாம் குறுகிய நோக்குடன் பகுத்துப் பார்த்துக்கொண்டிராமல் நம் இனத்தவன் என்ற ஒரே உணர்வோடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினோம். அர்த்தால் நடத்திட அனைத்துக் கட்சிகளும் ஒரணியில் நின்றோம். சில கட்சிகளும் சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் மகஜர்கள் அளித்தன. சில கட்சிகள் அலுவலகத்திற்கு எதிரே அணிவகுத்துக் கண்டன முழக்கங்கள் எழுப்பின. சில கட்சிகள் போலீசின் தடையை மீறி உண்ணாவிரதம் மேற்கொண்டன தூதரகத்தின் முன்பாக!

இலங்கையில் தனபதியென்ற தமிழ்நாட்டு வாலிபன் கோடரி கொண்டு பிளக்கப்பட்டான் என்ற நெஞ்சு குலுக்கும் செய்தி வந்ததும் சட்டமன்றத்தில் அதுகுறித்துக் கண்டனம் எழுப்பினேன். இலங்கையில் தமிழர்களுக்குத் தொடரும் கொடுமைகளுடன் இந்தக் கொடுமையும் சேர்ந்ததே, என வெந்து போன உள்ளத்தினராய்-சென்னை மாவட்டக் சுழக உடன் பிறப்புக்கள் ஒருநாள் அடையாள மறியல் என அறிவித்து இலங்கைத் தூதரகம் செல்ல அண்ணாசிலையருகே ஊர்வலம் புறப்பட்டனர்!தடையுத்தரவு எனக் கூறிக் கைது செய்தது அரசு! பின்னர் சட்டப்பிரிவுகள் தேடப்பட்டன! வழக்கு தொடரப்பட்டது! அடையாள மறியலில் ஈடுபட்டோர் அடைக்கப்பட்டனர் சிறைச் சாலையில்!

இலங்கைத் தமிழர்களுக்காக எந்தக் கட்சிக் கிளர்ச்சி நடத்தினாலும் அதனை நாம் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை! ஆனால் நம் மீது காழ்ப்புக் கொண்டோர் நாம் சென்னையில் நடத்திட முனைந்த ஒருநாள் மறியலை ஏசியும் இழிமொழி வீசியும் கண்டித்தனர். பழி வாங்கும் உணர்வோடு எம்.ஜி.ஆர் அரசும் நடந்து கொண்டது!

அடையாள மறியலில் சிறைபட்டோர் ஐந்து நாட்களாகியும் விடுவிக்கப்படவில்லை — சட்டமன்றத்திலே இந்திரா காங்கிரஸ் சார்பில் திரு. இளையபெருமாள் அவர்

களும் திரு. சித்தன் அவர்களும், அடையாள மறியலில் ஈடுபட்ட கழகத்தினரை விடுவித்திட அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அரசு அதனைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

ஐந்து நாட்களுக்குப் பிறகு செப்டம்பர் மூன்றும் நாள் முதல் இலங்கைக் கொடுமையும் எம். ஜி. ஆர் அரசின் பழிவாங்கும் போக்கையும் கண்டித்திட தொடர் மறியல் தொடங்கியது!

இன்று வரை சுமார் ஐநூறு பேர் சென்னை மத்திய சிறைச்சாலையில்!

மகளிரும் பலர் இந்த அடக்குமுறையை எதிர்த்து சிறைக்கோட்டம் புகுந்துள்ளனர்.

இலங்கையில் கொல்லப்பட்ட தமிழன் தனபதி குடும்பத்திற்கு அ. தி. மு. க சார்பில் இருபத்திஐயாயிர ரூபாய் நிதி வழங்கப்படுகிறது!

நாடாளுமன்ற துணைச்சபாநாயகரும் திருவொற்றியூர் உள்ளிட்ட தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நமது நண்பர் ஜி. லட்சுமணன் அவர்களின் வேண்டுகோள் கடிதத்திற்கு இணங்கி இந்தியப் பிரதமர் நிதியிலிருந்து தனபதி குடும்பத்திற்கு ஐயாயிர ரூபாய் நிதி அனுப்பப்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன.

பம்பாய் நிகழ்ச்சியில் அங்குள்ள தமிழ்ப் பேரவையினரும் கழகத்தினரும் வழங்கிய மூவாயிர ரூபாய் நிதியை நமது பொருளாளர் சாதிக் அவர்கள், தனபதியின் குடும்பத்தாரிடம் செப்டம்பர் முதல் தேதியன்று வழங்கினார்.

முதன்முதலாக முந்திக் கொண்டு வழங்கிவிட்ட காரணத்தாலோ என்னவோ; அந்த நிதியைத் திருப்பி அனுப்புமாறு செய்து விட்டனர்.

இலங்கையில் நடைபெறும் கொடுமைகளைக் கண்டித்து ஒரே நோக்கில் செயல்படுகிறோம் எனினும்—அவரவர் பங்கினைச் செலுத்துவதும் அந்தந்தக் கட்சிகள்; தங்களது வாய்ப்புக்கேற்றவாறு கிளர்ச்சிகளை முறையாக நடத்துவதும் எப்படித் தவறாக இருக்க முடியும்?

குறுகிய உள்ளம்—கடுகினும் அளவில் சிறிய உள்ளம்—இந்தப் பொதுப் பிரச்சினையில் அணுகுமுறை எப்படியிருக்க வேண்டுமென்பதைச் சிந்திக்கும் ஆற்றலையிழந்துவிட்டதில் ஆச்சரியமிருக்க முடியாதல்லவா?

எனவேதான் என்னுயிர் உடன்பிறப்பே! பரந்து விரிந்த பேருள்ளத்திற்குச் சொந்தக்காரரான அண்ணன் பிறந்த நாளில் கடுகு உள்ளம் கொண்டோரையும் அவர் தம் கொடுங்கோன்மையையும் நாட்டுக்கும் நானிலத்திற்கும் உணர்த்த அறப்போரில் குதிக்கிறோம்!

அந்நாளில் வன்முறை தலைவிரித்தாடிச் செய்யும் பேச்சொன்றை நெல்லை மாநாட்டில் எம்.ஜி.ஆர். பேசியிருக்கின்றார்! அவரது நெல்லைப் பேச்சையொட்டித் திட்டங்கள் தீட்டப்படுவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன!

அவர்கள் நடத்தட்டும் வெறியாட்டத்தை! ஆனால் நமது அறப்போர் அணிவகுப்பும்—மறியல் களமும் நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்கிற அமைதி நிறைந்த தன்மை உடையவைகளாக விளங்கிடல் வேண்டும்!

மாவட்டத் தலைநகர்களில் மறியலில் ஈடுபடவும், தண்டனைகளைத் தாங்கிக் கொள்ளவுமான வாய்ப்புள்ள உடன் பிறப்புகளின் பட்டியலை உடனடியாகத் தயார் செய்து கொள்ளவும்!

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு அமைதியான முறையில் மறியல்!

சென்னையில் ஏற்கனவே அறிவித்தவாறு என் தலைமையில் அறப்போர் மறியல்!

செப்டம்பர் 15 காலையில் சென்னையில் வள்ளுவர் கோட்டத்திற்கு முன்புள்ள அண்ணன் சிலைக்கு மாலை யணிவிக்கிறேன்.

பொதுச் செயலாளரும் பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும்—அண்ணன் சிலைக்கு மாலையணிவித்து விட்டு பின்னர் என்னை அறப்போருக்கு வழியனுப்பி வைப்பார்கள்!

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, தில்லியில் நடைபெற்ற மாநாட்டில் பேராசிரியர் தலைமையில் அண்ணன்

என்னை கல்லக்குடி அறப்போருக்கு வழியனுப்பி வைத்தார்!

இன்று அண்ணன் சிலை முன்னுல் பேராசிரியர் என்னை வழியனுப்பி வைக்க இருக்கிறார்!

''என் தம்பி தனிமைச் சிறையிருக்கும் பாளையங் கோட்டை,எனக்கு யாத்திரைத் தலம்'' என்று நெல்லையிலே தான் அன்றொருநாள் அண்ணு பேசினுர்!

அந்தச் சொற்கள்—செப்டம்பர் 15-ல் அண்ணன் சிலைக்கு எதிரே நிற்கும்போது என் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்!

அந்த இனிய ஓசையில் மகிழ்ந்தவாறு களம் நோக்கி நடப்பேன்!

இடர் எதுவரினும் ஏற்பேன்!

அன்புள்ள

மு. க.

(கலைஞர் 13.9.81 அன்று எழுதிய கடிதம்)

★

சென்னைப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் உரை

சென்னை தெற்கு போக் ரோடில் செப்டம்பர் 13ஆம் தேதி நடைபெற்ற மறியல் விளக்கப் பொதுக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி:-

முதலமைச்சர் இன்றைக்கு அறிக்கை விடுகிறார்–பத்திரிகை நிருபர்களிடத்திலே சொல்லுகிறார் நாங்கள் இனி மேல் மறியலே நடத்தமாட்டோம் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும். அப்படி உத்தரவாதம் அளித்ததை கருணுநிதியே கூட ஒரு அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி

விட்டால் எல்லோரையும் விடுதலை செய்து விடுகிறேன் என்று எம். ஜி. ஆர். சொல்லுகிறார்.

நான் அதற்குப் பதிலளித்து இருக்கிறேன், என்ன பதில்?

பத்தாம் தேதி நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தலைமைக் குழுவினுடைய நிர்வாகக் குழுவில் நாங்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்திலே என்ன சொல்லி இருக்கிறோம்?

எப்படியும் மறியல் நடத்தியே தீர வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம் அல்ல; ஒருநாள் அடையாள மறியலில் ஈடுபட்டவர்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு—மற்ற கட்சிகளையெல்லாம் நடத்தாத விதத்தில் வேண்டுமென்றே திட்டமிட்டு—திராவிட முன்னேற்றக் கழகத்தை மாத்திரம்—ஏறத்தாழ 500 பேரை சிறையிலே இன்றைக்கு பூட்டி வைத்திருக்கின்ற காரணத்தால் அவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டும். 15-ம் தேதிக்குள்ளாக விடுதலை செய்யப்படுவார்களேயானால் 15-ம் தேதி நாங்கள் மறியல் செய்யத் தேவையில்லை. விடுதலை செய்யப்படாவிட்டால் 15-ம் தேதி தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையிலே மாத்திரமல்ல: தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மறியல் நடைபெறும் என்று தீர்மானித்திருக்கிறோம். அதற்குப் பிறகு என்ன உத்திரவாதம்?

15-ம் தேதிக்குள் விடுதலை செய்து விட்டால் மறியலே தேவையில்லை என்று தீர்மானத்திலே அறிவித்திருக்கிறோம், கருணாநிதி மாத்திரம் அல்லவே தலைமைக் கழகமே அறிவித்திருக்கிறதே! பிறகு எதற்காக எம். ஜி. ஆர். புது நிபந்தனை போடுகிறார்? உத்தரவாதம் கேட்கிறார்?

எந்தத் தூதுவராலயத்தின் முன்பும் இனிமேல் மறியலே நடத்தமாட்டோம என்று உத்தரவாதமாம்!

நல்லவேளை. இனிமேல் திராவிட முன்னேற்றக் கழகம் எந்தப் போராட்டத்திலும் ஈடுபடாது என்று எழுதிக் கொடு என்று கேட்டாலும் கேட்பார்.

நான் அவருக்குச் சொல்லுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழர்களை வளர்ப்பதற்காக-தமிழ்ச் சமுதாயத்தை வளர்ப்பதற்காக போராட்

டத்திலேயே பூத்து, போராட்டத்திலேயே கனிந்து, போராட்டத்திலேயே வளர்ந்து—போராட்டம் என்னும் புறமுதுகுகாட்டாமல்-பின்னடையாமல்-ஓரம் போகாமல்-புதர் எங்கே என்று பதுங்காமல் தமிழினத்தை வளர்த்து கொண்டுள்ள ஒருகட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

எங்களுடைய ஆசான் பெரியாராஞலும் அந்தப் பெரியாரைத் தலைவராக் ஏற்றுக் கொண்ட எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணுவாஞலும் அவர்கள் காணுத களங்களா எங்களுக்கே எண்ணிக்கை மறந்து போய் விட்டது. எத்தனை முறை சிறைச்சாலைக்குச் சென்றோம் என்று அந்த அளவிற்கு நாங்கள் சிறைச்சாலைக்கு சென்றிருக்கிறோம். தமிழகத்திலே உள்ள எந்த சிறைச்சாலையும் பாக்கி இல்லை என்கின்ற அளவிற்கு நாங்கள் அடைபட்டுக் கிடந்திருக்கிறோம்.

நண்பர் ஆலந்தூர் பாரதி இங்கே எடுத்துக்காட்டியதைப் போல் 14-வது வயதில் திருவாரூர் தெருவீதிகளில், பள்ளிக் கூடத்து மாணவனுக இருந்த கருணுநிதிதான் கையிலே தமிழ்க் கொடி ஏந்தி,ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே என்று இந்தி எதிர்ப்புப் பாடலை முழங்கி பொது வாழ்க்கையிலே அடியெடுத்து வைத்தவன் என்பதை எம். ஜி. ஆர். அவர்கள் மறந்திருக்கக் கூடும்.

திருமணநாள் செப்டம்பர் 15-ஆம் தேதி என்று நாஞ்சிலார் குறிப்பிட்டார். அந்தத் திருமணம் நடைபெற்ற நாளிலேயே மணப்பெண்ணை மணவறையிலே உடகார வைத்து விட்டு தெருவிலே சென்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலத்திலே கலந்து கொண்டு விட்டு பள்ளிக்கூடத்திற்கு எதிரே நடைபெற்ற அடையாள மறியலிலே கலந்து கொண்ட கருணுநிதிதான் நாளை மறுநாள் செப்டம்பர் 15-ம் தேதி இந்தப் போராட்டத்திலும் கலந்து கொள்ள இருக்கிறுன்.

ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற நானே, பொதுச் செயலாளரோ, பொருளாளரோ, துணைப் பொதுச் செயலாளரோ, நம்முடைய கழக மாவீரர்களோ, மாவட்டந்தோறும் இருக்கிற கழகத்தளகர்த்தர்களோ-கழகத்தினுடைய செயல் வீரர்களோ, உடன்பிறப்புக்களோ சிறைபட்டு விட்டால் கழகமே அழிந்துவிடும் என்று கருதுவார்களேயானுல் கழகத்திலே கடைசித் தொண்டனுடைய

உயிர் இருக்கின்ற வரையில்- அவனுடைய உடம்பிலே கடைசி சொட்டு இரத்தம் இருக்கிற வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை யாரும் அழித்துவிட முடியாது.

இந்திரா அம்மையார் விளக்கம் கேட்டார்!

அப்படியே ஒன்று நேர்ந்து விடுமானால், இதோ நாங்கள் இருக்கிறோம் என்று சிவாஜி மன்றத்தினுடைய செயலாளர் கத்திபாரா ஜனர்தனம் நான் வருகிற நேரத்திலே பேசிய பேச்சு என்னுடைய காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதுவும் சாதாரணமாகச் சொல்லவில்லை. அவரது அண்ணன் சிவாஜியை அருகாமையிலே வைத்துக் கொண்டு சாட்சியோடு சொல்லி இருக்கிறார்.

எனவே நான் இந்தப் பேச்சை சான்றாக வைத்து பிறகு விடமாட்டேன்; சொன்ன வாக்குறுதி எங்கே என்று கேட்பேன். உங்களுடைய வாக்குறுதி வெறும் எம். ஜி. ஆருடைய வாக்குறுதி என்று கருதுபவன் அல்ல.

எனவே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கத்திலே நின்று கொண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் நாளை மறுநாள் நடத்துகின்ற போராட்டம் அமைதியாக நடைபெற வேண்டும்.

நம்மை விடுதலை செய்து விடுவார்கள் என்று எதிர் பார்த்து நாளை மறுநாள் போராட்டம் இருக்காது என்று யாரும் கருதத் தேவையில்லை.

நான் எம். ஜி. ஆரிடத்தில் அப்படிப்பட்ட பண்பாட்டை எதிர்பார்க்கவும் இல்லை.

எனவே எத்தனை நாள்? எத்தனை மாதம்? எத்தனை ஆண்டு? சிறைச் சாலையிலே பூட்ட வேண்டும் என்று எம். ஜி. ஆர். கருதினாலும் நான் அந்த சிறை தவத்தை மனமுவந்து ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அன்மையிலே சென்னைக்கு வந்த அம்மையாரிடத்திலே கூட-பிரதமர் அவர்களிடத்திலே கூட-நான் பேசும்பொழுது குறிப்பிட்டேன். செப்டம்பர் 15-ம் நாள் மறியல் போராட்டம். நானே கலந்து கொள்கிறேன் என்று குறிப்பிட்டேன்.

இந்திரா அம்மையார் மறியலைப் பற்றி விளக்கம் கேட்டார்கள். நான் அவர்களிடத்திலே விளக்கிச் சொன்னேன். ஒருநாள் அடையாள மறியல்தான் செய்தோம். அது இந்த அளவிற்கு வளர்ந்ததற்குக் காரணம் தாங்களல்ல எம்.ஜி.ஆர். தான் என்று குறிப்பிட்டேன்-

500 பேரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டபல் அத்தனைப் பேரும் மொத்தமாக அரசின் ஒரு ஆணையின் மூலம் விடுதலை செய்யப்படுவார்களேயானால் நாங்கள் நிச்சயமாக மறியலுக்குச் செல்ல வேண்டிய அவசியம் கிடையாது என்று சொன்னேன்.

நிருபர்கள் கேட்டார்கள். அவர்களிடத்திலும் தாங்கள் போரரட்டத்தைத் தடி அலைபவர்கள் அல்ல; ஆனால் வந்த போராட்டத்தை விட்டுவிட்டு ஒதுங்குபவர்களும் அல்ல என்று நான் சொல்லி இருக்கின்றேன்.

எனவே அந்தப் போராட்டம் நடந்தே தீரும். அதற்கான ஆயத்தங்கள் நடைபெறட்டும்.

மாலையில் கோவையிலிருந்து கண்ணப்பன் என்னோடு தொலைபேசி மூலமாகப் பேசியவர், 15ம் தேதி சிறை செல்ல இதுவரையிலே ஆயிரம் பேர் தயார் என்று சொன்னார்.

அதைப்போலவே மதுரையிலிருந்து பொன்முத்து ராமலிங்கம்—மதுரை மாவட்டச் செயலாளர்—ஆயிரத்து ஐநூறு பேர் தயார் என்று சொன்னார்.

ஒவ்வொரு மாவட்டத்திலே இருந்தும் ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் 15-ம் தேதி சிறை செல்லத் தயாராக இருக்கிறார்கள்.

அதற்கு அடுத்த கட்டப் போராட்டம் என்ன என்பதை எங்களையெல்லாம் உள்ளே அனுப்பிய பிறகு வெளியே இருக்கிற தலைவர்கள் எல்லாம் யோசித்து முடிவு எடுப்பார்கள்.

எனவே நான் வெளியிலே இருக்கிறவரையிலேதான் அடுத்தக் கட்டப் போராட்டத்தைப் பற்றி எதுவும் சொல்ல

முடியும். நான் உள்ளே சென்று விட்டால் அதைத் தீர் மானிக்க வேண்டிய பொறுப்பு வெளியிலே இருக்கிற பேரா சிரியருக்கும் சாதிக் அவர்களுக்கும் - நாஞ்சிலாருக்கும் தலைமைக் கழகத்திலே யாராவது மிச்சமிருந்தால் அவர் களுக்கும்தான் உண்டே தவிர எனக்கல்ல!

எனவே, நாஞ்சிலார் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல எம். ஜி. ஆர். ராஜதந்திரமாக நடந்து கொள்ளப் போகிறாரா? அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைக் களத்திலே இறக்கிவிட்டு அதை அழித்து விடலாம் என்று ஒரு தவறான கணக்கைப் போடப் போகிறாரா?

அவருக்கு ஒன்றைமாத்திரம் சொல்லிக்கொள்வேன்.

நாங்கள் புறநானூறு பயின்றவர்கள். புறமுதுகிட்டு அறிந்தவர்கள் அல்ல.

நாங்கள் திருக்குறளிலே படித்ததெல்லாம் — திருக் குறளைக் கற்று எங்களுடைய உள்ளத்திலேதெளிய வைத்துக் கொண்டு, பதிய வைத்துக் கொண்டு இருப்பதெல்லாம்.

'கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியாநகும்''

என்ற குறளைத்தான்.

தன்னுடைய கையிலே உள்ள வேலை போர்க்களத்திலே யானை மீது வீசி எறிந்துவிட, அது யானையின் மேல் தொற்றிக் கொள்கிற நேரத்தில் இன்னொருவன் வேலோடு எதிர்க்க வருகிற நேரத்தில் நான் எறிந்த வேல்; அந்த யானை யோடு போய்விட்டதே! இவனை எதிர்க்க வேல் இல்லையே என்று திரும்பிப் பார்க்கும் போது தன் மீது குத்தப்பட்ட இன்னொரு வேல் தன்னுடைய மார்பிலே தொற்றிக் கொண் டிருப்பதைப் பார்த்து அந்த வேலைப் பிடுங்கி எதிரியை வீழ்த்தினான் என்பது திருக்குறள். அந்தத் திருக்குறளைப் பயின்றவர்கள் நாங்கள்.

உன் மகன் எங்கே என்று கேட்டவனிடத்தில் ஒரு தாய் சொன்னாள். புறநானூற்றில்;—என் மகனா? அவன் எந்தப்

போர்க்களத்துக்குப் போனானே தெரியாது; ஆனால் அந்தப் புலி வாழ்ந்த குகை இதோ இருக்கிறது, என்று வயிற்றைக் காட்டினானே அந்தத்தாய்க்கு பிறந்தவர்கள் நாங்கள் (பலத்த கைதட்டல்)

போர்க்களத்திலே விழுப்புண்களே ஏந்திக் கொண்டு வருகின்ற நெஞ்சங்களில் முத்தமிட்டார்களே காதலிகள்- அதுவே ஒத்தடமாகத் தெரிந்தது அந்தக்கால வீரக்காதலர் களுக்கு. அந்தப் பாரம்பரியத்திலே வளர்ந்தவர்கள் நாங்கள்.

வேலும் வாளும் உண்டாக்கிய இரத்தக்கடலில் பயங் கர மூச்சு விட்டுக் கொண்டு செல்லும் வீரர்களின் மண்டை ஓடுகளே முத்தமிட்டபடி பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும் அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகாரி பாடாமல் முதுகு காட்டாமல்-முகஞ்சுளிக்காமல்-எந்தப் பக்கம் இருந்து ஈட்டி பாயுமோ எதிரியின் கணைபாயுமோ என்று சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை என்ற போர்க்களத்து அரிச் சுவடியைத் தவறியும் மறந்துவிடாமல் — (கைதட்டல்) மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு-மங்கை யின் இதழைவிடச் சுவையானது என்ற மனோபலத்தோடு படையை நடத்திச் செல்லுகின்ற பாராட்டுக்குரிய பேரறி ஞர் அண்ணா அவர்களுடைய தம்பிமார்கள் நாங்கள்- உண்மையான தம்பிமார்கள் நாங்கள்.

அதை உணருங்கள் எம். ஜி. ஆர். அவர்களே என்று கூறி, அவரிடமும் உங்களிடமும் விடைபெறுகிறேன்.

★

முதலமைச்சருக்கு கலைஞர் பதில்

சென்னை, செப். 13—

''இலங்கைத் தூதரகம் முன் அறப்போர் மறியல் கண்டனப்பேரணி நடத்தி கைது செய்யப் பட்டு சிறையில் இருச்சும் கழகத் தோழர்களை விடுதலை செய்வது பற்றி முதலமைச்சர் எம். ஜி.

இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கைக்கு கழகத் தலைவர் கலைஞர் பதிலளித்து அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

அது வருமாறு:—

இலங்கைத் தமிழர்களுக்காக அறப்போர் மறியலி லும்-தடை மீறி நடத்தப் பட்ட கண்டன ஊர்வலத்தி லும் கலந்து கொண்டு சிறையிலிருக்கும் சுமார் ஐநூறு தி. மு. கழகத்தினரையும் செப்டம்பர் 15-ம் தேதிக்குள் விடுதலை செய்யாவிட்டால் செப்டம்பர் 15-ம் தேதி சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் தி. மு. கழகம் அறப்போர் மறியல் நடத்தும் என்று தான் 10-ம் தேதிமாலை சென்னையில் நடந்த தி. மு. கழக தலைமை நீர்வாகக் குழுவில் முடிவு செய்து அறிவிக்கப்பட் டுள்ளது.

அந்தத் தீர்மானத்தின்படி சிறையிலிருக்கும் கழகத் தினர் அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டால் செப் டம்பர் 15-ம் தேதி மறியல் அவசியம் இல்லை என்பது ஏற்கனவே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதில் புதி தாகச் சொல்வதற்கு எதுவும் இல்லை.

இவ்வாறு தலைவர் கலைஞர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

★

நாங்களிருக்குமிடம் நீயிருப்பாய்!
ஆருயிர் அண்ணனே,

இன்று உனக்குப் பிறந்த நாள்! உனது ஐம்பத்தி மூன் றும் ஆண்டு பிறந்தநாள் விழா; ஆம்-அதுதான் முதன்முத லாக உனக்குக் கோலாகலமாகக், கொண்டாடப்பட்ட பிறந்தநாள் விழா—1961-ஆம் ஆண்டு தஞ்சை மாநகரில் நடைபெற்றபோது மேசையென்றும், நாற்காலியென்றும் கடிகாரமென்றும் பீரோ என்றும் ஐம்பத்துமூன்று பொருள் களை உனக்கு வழங்கி, உவகை பெருக்கெடுக்க நின்றோம். அந்த விழாவில் நீ ஆற்றிய உரை எங்களுக்குத் தேன்! தேன்! தேன்!

அறுபதாம் ஆண்டு மணிவிழாவினை அனைத்து நாடுகளிலும் பரவிக் கிடக்கும் தமிழர்களையெல்லாம் அழைத்து நடத்திட வேண்டுமெனத் திட்டங்களை நாங்கள் தீட்டிக் கொண்டிருந்த போது தான் எங்கள் கண்களை குருதி கொட்டும் நீர்வீழ்ச்சிகளாக்கி விட்டு நீடுதுயில் கொண்டுவிட்டாய்!

''ஒளிவெள்ளம் பாய்ந்திடும் விழாக்கள் எடுத்து வெளியிலே கொண்டாடப்படும் என் பிறந்த நாள் விழாக்களில் எனக்கேற்படும் மகிழ்ச்சியை விடச் சிறைக் கோட்டங்களில் என் பிறந்தநாளைக் கொண்டாடுவது தான் பெருமகிழ்ச்சியில் என்னை ஆழ்த்துகிறது''

—என்று எத்தனையோ முறை நீ கூறியது மட்டுமல்ல; வேலூர், சென்னை போன்ற சிறைச்சாலைகளில் நீ அப்படிப் பிறந்த நாட்களைக் கொண்டாடிக் களித்திருக்கிறாய்!

ஐம்பத்தி ஒன்பது ஆண்டுகளுடன் அகவையை முடித்துக்கொண்ட உனக்கு நாங்கள் எடுத்து வரும் பிறந்த நாள் விழாக்களில் இந்த எழுபத்தி மூன்றாவது பிறந்தநாள் விழா சற்று வித்தியாசமானது!

நீயே சிறையில் இருந்து உன் பிறந்தநாள் விழாக்களைக் கொண்டாடினாய் அல்லவா; இப்போது நாங்கள் சிறை புகுந்து அங்கே உன் பிறந்தநாள் விழாவை கொண்டாடும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம்!

''தமிழ் இனத்தின் மானமும் மரபும் காப்பாற்றப்பட, கலையும் இலக்கியமும் பாதுகாக்கப்பட, மொழியுணர்வும் வரலாறும் மங்கி மறைந்துவிடாமல் இருக்க, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தாலும் அமராவிட்டாலும் தி. மு. கழகத்திற்கு இன்னும் ஐம்பதாண்டு காலப்பணி, பாக்கியிருக்கிறது''

—என்று, 1966-ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற சென்னை விருகம்பாக்கம் மாநாட்டில் நீ கொட்டிய முரசம் இன்னமும் காதுகளில் ஒலித்துக் கொண்டு தானிருக்கிறது!

தமிழன் உயிரிழக்கிறான்-தமிழச்சி கற்பிழக்கிறாள்— இந்தச் செய்திகள்; இலங்கைத் தீவிலிருந்து இங்கே வந்திடும் போது இதயமுள்ளோர் துடித்திடாமல் இருந்திட இயலுமோ?

மரபுகள் அழிக்கப்படுவதும், மாண்புகள் குலைக்கப்படுவதும், மானம் சிதைக்கப்படுவதும், மெல்ல மெல்லத் தமிழ் இனத்தை ஒழித்து விடத் திட்டம் தீட்டப்படுவதும் சிங்களவர்களின் வெறிச்செயலால் அன்றுடம் தொடர்கின்றன என்ற தகவல்களே அறிந்த பின்னும், எப்படியண்ணே எங்களால் தாங்கிக் கொள்ள முடியும்!

எங்கள் கண்ணீரை இலங்கைத் தமிழர்களுக்குக் கவசமாக்கிப் பார்த்தோம்! பாறையில் வைக்கப்பட்ட வெண்ணெய் உருண்டை: வெயிலில் உருகிடும் போது அதனைப் பாதுகாக்கவும் முடியாமல் யாரையும் கூவி அழைத்திடவும் முடியாமல் தவித்தான் கைகள் இல்லாத ஊமையொருவன் என்று இலக்கியப் பாடல் ஒன்று இயம்பிடுமே; அந்தக் ''கையில் ஊமை'' போல எத்தனை நாள் இங்குள்ள தமிழன் இலங்கைத் தமிழன் சீரழிவைக் கண்கொண்டு பார்க்க முடியும்! செவி கொண்டு கேட்க முடியும்!

''கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத்தீவு
கருவிழிதான் ஆழ்கடல்கள்! தமிழ்
மண்ணுக்குப் புகழ்தந்த பெருவீரர்.
உருவில் சிங்கம்; உள்ளம் தங்கம்! யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டார்—மலைத்தமிழர்!''

இவரெல்லாம் மிதிபடவும், இந்திய வம்சாவளித் தமிழர்களின் உயிர் அறுபடவும், கொடுமை கோரத்தாண்டவம் ஆடிடும் வேளை உறையிலிடவோ இங்குள்ள தமிழர் அறப்போர் வாளையென்றுதான் ஆர்த்தெழுந்தனர்.

தனபதியென்றொரு தமிழன், தாயகமிருந்து அந்தத் தீவுக்குச் சுற்றுலா சென்றதே அவன் செய்த குற்றம்! சிங்கள வெறியர் கோடாரி கொண்டு பிளந்தனர் அவன் தலையை! கொதித்தது தமிழகம்! கண்ணீர்! கண்டனம்! அவன் ஒரு கட்சிக்குரியவன் எனினும்—கட்சிக்காரன் என்பதற்காக இலங்கையில் கொல்லப்படவில்லை; தமிழன் என்பதற்காகக் கொல்லப்பட்டான்! கட்சியை மறந்து தமிழ் நெஞ்சம் துடிக்காதா அண்ணே!

அதனையும் இங்குள்ள சிலர் அரசியலாக்கி விட்டனர்!

அத்துடன் நிறுத்தினரா? சட்டம் பேசுகின்றனர்! சர்வ தேசியம் பேசுகின்றனர்! தூதரகங்களின் சிறப்பு பற்றியெல் லாம் மகாத்மியங்கள் தீட்டுகின்றனர்! உன்னுல் வளர்க்கப் பட்ட எங்களுக்கு இவைகள் எல்லாம் தெரியாதாம் அண்ணு!

அரசியல் சட்டம்கூடப் புனிதமானது என்றே வாதிடு வர்! அது தமிழர் நலனுக்கு விரோதமாக அமைந்த போது இந்தித் திணிப்பை எதிர்க்க, அரசியல் சட்டத்தின் சில பகுதிகளே பொது மேடையில் எரிக்கச் சொல்லி ஆணையிட்ட தலைவன் நீ என்பதெல்லாம் அவர்களுக்கு எங்கே நினை வூக்கப்போகிறது!

குடியரசு நாள் கூட சிறப்புக்குரியதுதான்! நமது மொழிப் போரின் அடையாளமாக அந்த நாளில் தமிழர் தம் இல்லங்களில் கறுப்புக்கொடி பறக்கவிடச் சொன்ன தலைவன் நீ என்பதை, தங்கள் வீட்டிலோ, அலுவலகத் திலோ கறுப்புக்கொடி கட்டாத அந்த வீராதிவீரர்கள் (?) எப்படி நினைத்துக் கொண்டிருக்க முடியும்?

பொருள் உற்பத்தி பாதிக்கப்படக்கூடாதென்று வேலை நிறுத்தங்களைத் தடை செய்து சட்டம் பிறப்பிக்கப்பட்டி ருக்கும் போது—பொருளாதார நிபுணர்கள் கணக்கிட்டுச் சொல்லியிருப்பது போல ஐம்பது கோடி ரூபாய் தொழில் துறையில் உற்பத்தி பாதிக்கப்படும் அளவுக்கு ஒரு நாள் முழு அடைப்புச் செய்திட இங்குள்ள மாநில அரசு, ஒத்து ழைப்பு தருவது குற்றமில்லையென்று வாதிடுவது இலங்கைத் தமிழர்களுக்காகத்தானே!

அந்த வாதம், ஆகஸ்டு 29-ம் நாள்—ஒரு நாள் அடை யாள மறியலுக்குத் தடையை மீறி ஊர்வலம் நடத்தினர் களே; அந்தக் கழகக் கண்மணிகளுக்குப் பொருந்தாது என்று இங்குள்ளோர் கூறுகிறார்கள் அண்ணு!

ஆகஸ்டு 29-ல் மறியல் செய்ய வேண்டிய இடத்திற்கே போகவில்லை! ஊர்வலம் புறப்பட இருந்த இடத்திலேயே கைது செய்யப்பட்டு விட்டார்கள்!

தடையை மீறி ஊர்வலம் நடத்தியதற்காகத்தான் கைது செய்யப்பட்டனர்.

மறியல் களமே சென்றிடவில்லை! அவர்களை சிறையில் அடைத்து விட்டு, பொய்வழக்கும் தொடுத்துவிட்டு, தூதுவராலயம் என்முல் என்னவென்று தெளிபொருள் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

''என்ன தம்பி செய்வது! நரிக்கு நாட்டாண்மை கொடுத்து விட்டால் அது ''கிடை''க்கு எட்டு ஆடு கேட்கத்தானே செய்யும்''

—என்று நீ புன்னகை மூலம் பதில் அளிப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது அண்ணா!

நான் புரிந்து கொண்டிருப்பதை நாடும் வேகமாகப் புரிந்து கொண்டுதான் வருகிறது!

புகைச்சல்தானே என்று பொல்லாதவர்களால் அலட்சியப்படுத்தப்பட்டவைகள்தான் எரிமலைகளாகப் பொங்கியிருக்கின்றன என்ற சரித்திரத்தைப் படிக்காதவர்கள்; அதிகாரமிருக்கும் வரையில் ஆட்டம் போடத்தான் செய்வார்கள்—

உனது இந்தப் பொன்மொழியை உள்ளத்தில் ஏந்தி கரத்தினிலே நீ தந்த கொடியேந்தி — உன் பிறந்த நாளில் கடமையாற்றிடப் பயணம் தொடருகிறோம்; நாங்கள் இருக்குமிடமெல்லாம் நீ இருப்பாய் என்ற நம்பிக்கையுடன்!

உன் தம்பி,

மு. கருணாநிதி

(கலைஞர் 15-9-81 அன்று எழுதிய கடிதம்)

★

கலைஞர் கைது

சென்னை, செப். 15—

மனித உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் பாடுபட்ட அண்ணன் பிறந்த நாளான இன்று இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்தும், எம். ஜி. ஆரின் அடக்கு

முறைகளைக் கண்டித்தும் அறப்போர் களம்புக முனைந்த தலைவர் கலைஞர். அவர் இல்லம் விட்டுப் புறப்படும்போதே கைது செய்யப்பட்டார். சிங்கத் தமிழர் தம் தலைவராம் கலைஞர்- அவர்கள் சிரித்த முகத்துடன் சிறை புகுந்தார். தலைவர் கைதான செய்தி தலைநகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது! சென்னையின் பல பகுதிகளில் போக்குவரத்து பாதித்தது! கடைகள் அடைக்கப்பட்டன! வள்ளுவர் கோட்டம் அண்ணா சிலை அருகில் போலீஸ் வெறித்தாக்குதல் நடத்தியது. எண்ணிலடங்கா அளவு கண்ணீர்புகை பிரயோகம் நடத்தப்பட்டது. பலர் காயமுற்றனர். தமிழகத்தின் பல பகுதிகளில் பல்லாயிரக் கணக்கானோர் கைதாகியுள்ளனர்.

தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்ட செய்தி வெளியானதும் நாடெங்கும் பல இடங்களில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது. பல நகரங்களில் கடைகள் மூடப்பட்டன. பஸ்கள் நிறுத்தப்பட்டன. பஸ்கள் கொளுத்தப்பட்டன.

தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளி கோவிலடி கிராமத்தில் பிருந்தாவன் என்ற 25 வயது வாலிபன் தீக்குளித்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயிர் துறந்தான்.

தஞ்சை மாவட்டத்தில் முதல் நாள் மட்டும் ஐந்து பஸ்கள் எரிக்கப்பட்டன.

சென்னை புதுக்கல்லூரியில் கலைஞரை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது போலீசார் தடியடி செய்து கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர். போலீஸ் ஜீப்புக்கு தீ வைக்கப்பட்டது.

16 ஆம் தேதி தூத்துக்குடி, திருப்பத்தூர் (வ.ஆ)ஆகிய நகரங்களில் முழு அர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது.

17 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்தில் மேலும் ஒரு பஸ் எரிக்கப்பட்டது. தஞ்சை நகரில் முழு கடை அடைப்பு நடைபெற்றது. பஸ்கள் முன் படுத்து மறியல் செய்யப்பட்டன. சேலத்தில் அனைத்துக் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். சென்னையில் காயிதே மில்லத்

கல்லூரி, அண்ணா நகர் வைஷ்ணவா கல்லூரி, அம்பேத்கார் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளை விட்டு வெளியே வந்தனர்.

18 ஆம் தேதி மதுரையிலும் நெல்லையிலும் முழு அடைப்பு நடைபெற்றது. நெல்லையில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. பஸ்கள் கொளுத்தப்பட்டன. புதுக் கோட்டைமாவட்டத்தில் ஆலங்குடியிலும் பஸ்சுக்குதீவைக் கப்பட்டது. மதுரை புதூரில் பி.ஆர்.சி. டவுன் பஸ்சுக்கு தீ வைக்கப்பட்டது. மதுரையிலிருந்து தேவக்கோட் டைக்குச் சென்ற பஸ் ஒன்று தேவக்கோட்டையில்கொளுத் தப்பட்டது. மதுரை கல்லூரி அருகே ஒரு பஸ் எரிக்கப் பட்டது.

கலைஞர் விடுதலை கோரி பாண்டிச்சேரியில் அனைத்துக் கல்லூரிகளும் மூடப்பட்டன. தமிழகம் முழுவதும் உள்ள கழகத்தினர் பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்துச் சிறைச்சாலை களிலும் அடைக்கப்பட்டனர். சிறைகள் எல்லாம் கழகத் தினரால் நிரம்பி வழிந்தன.

சென்னை ஆழ்வார்பேட்டையில் ஒரு பஸ் எரிக்கப்பட் டது. சேலத்தில் கலெக்டர் அலுவலகம் முன்னுல் தீக் குளிக்க முயன்ற 25 வயதுடைய செழியன் என்ற வாலிபன் தடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டான்.

கலைஞர் விடுதலை கோரி செப்டம்பர் 20ஆம் தேதியன்று திருச்சியில் பீமாநகரில் மனைகரன் என்ற 22 வயதுடைய வாலிபன் தீயிட்டுக் கொண்டு இறந்தார். கலைஞர் விடுதலை கோரி கோவையில் எம்.ஜி.ஆருக்கு கறுப்புக்கொடி காட்டக் வந்தமுன்னுள் அமைச்சர்கண்ணப்பன் உட்படநூற்றுக்கணக் கானோர் கைது செய்யப்பட்டனர். அதே நாள் மதுரையில் தலைவர் கலைஞரின் செல்வன் மு.க. அழகிரி நள்ளிரவில் கைது. தினகரன் போட்டோகிராபர் காவலர்களால் தாக் கப்பட்டார். திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் ஆசிரியர் வீரமணி தலைவர் கலைஞரின் விடுதலை கோரி அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தினார். இதில் விடுதலை வீரமணி திண்டிவனம் ராமமூர்த்தி எம்.எல். ஏ., அப்துல் சமத், எம்.பி., இளைஞர் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, சிவாஜி மன்றத்தலைவர் தளபதி சண்முகம்

அப்பன்ராஜ் S. K. T. ராமச்சந்திரன். திராவிடர் கழக தலைமை நிலையச் செயலாளர் துரைசாமி திருமறவன், செஞ்சி ராசேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக், விவசாயிகள் சங்கம் ஆகியவைகளும் தொழிலாளர் சார்பிலும் தலைவர் கலைஞர் விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. இத்தகைய சம்பவங்கள் நடைபெற்ற போதிலும் முதலமைச்சர் யாரையும் விடுதலை செய்ய இயலாது, சட்டப்படிதான் காரியங்கள் நடைபெறும் என்று உறுதியாக பதில் அளித்தார்.

செப்டம்பர் 21-ந்தேதி செங்கற்பட்டு மாவட்டத்தில் அர்த்தால் நடைபெற்றது. திருவொற்றியூரில் கழகத் தோழர்களின் கடைகள் அ. தி. மு. க.வினரால் பயங்கர மாகத் தாக்கப்பட்டு பொருட்கள் சேதப்படுத்தப்பட்டன.

பெரியார் மாவட்டத்தில் தீக்குளிக்க வந்த லட்சுமி அம்மாள் கைது. நெல்லையில் கலெக்டர் அலுவலகம் முன்னுல் மறியல் செய்யச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கள் கழக முன்னணியினர் கைது. சென்னையில் 25ம் தேதி மாணவர்கள் முழு அர்த்தால் நடத்த திட்டமிட்டதைத் தகர்க்க அரசு வெளிமாநிலத்திலிருந்து பல்லாயிரக்கணக் கான போலீசாரை இறக்குமதி செய்து நகர் எங்கும் பீதி ஏற்படக்கூடிய நிலையை ஏற்படுத்தியது.

தலைவர் கலைஞர் அவர்களை விடுதலை செய்ய வேண்டு மென்று கோரி திருவாரூரில் கிட்டு என்ற கழகத் தோழர் ஒருவர் தீக்குளித்து இறந்தார். அதைப் போலவே பெரி யார் மாவட்டத்தில் பெருந்துறையில் முத்துப்பாண்டியன் என்ற இளைஞன் தீக்குளித்து மறைந்தான். கோவை மாவட்டத்தில் பல்லடத்தைச் சேர்ந்த முத்துசாமி என்ற 25 வயது வாலிபன் தீக்குளித்து மருத்துவமனையில் சேர்க் கப்பட்டான். வேலூரில் ஜெகநாதன் என்ற வாலிப ரும், சேகர் என்ற வாலிபரும் தீக்குளித்து ஜெகநாதன் கவலைக்கிடமான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டி ருக்கிறார்.

திருச்சியில் தலைவரின் விடுதலை கோரி முழு அடைப்பு நடைபெற்றது. நெல்லையில் சங்கரன் கோவிலில் வெள் ளத்துரை என்பவரும், தீக்குளிக்க முயற்சி செய்து காவலர் களால் கைது செய்யப்பட்டார். தலைவர் கலைஞர் சிறையில்

இருந்தவாறு பொதுச் செயலாளர் மூலம் தன்னுடைய விடுதலைக்காக யாரும் தீக்குளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். தர்மபுரி மாவட்டத்தில் கல்லாவியைச் சேர்ந்த ராசேந்திரன் என்ற 27 வயது வாலிபர் தீக்குளித்து ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக் கிறார். ஜெயம்கொண்டத்தில் ராமையன் என்பவர் தீயிட்டுக் கொண்டு அவரும் தஞ்சை மருத்துவ மனையில சிகிச்சை பெற்று வருகிறார். பெருந்துறையில் புலவர் குரு சாமி தீக்குளிக்கப் போவதாக அறிவித்ததை யொட்டிகைது செய்யப்பட்டார். திருப்பூரில் திருவேங்கடம் என்பவர் தீக்குளித்து கவலைக்கிடமான நிலையில் இருக்கிறார். நாமக் கல்லில் ராமசாமி என்ற 33 வயது உடையவர் தீயிட்டுக் கொண்டு ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார். நெல்லிக் குப்பத்தில் தீயிட்டுக் கொண்ட குமரன் தடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். சென்னையில் மேரி என்ற 30 வயது உடைய இளப்பெண் தலைவர் விடுதலைக் கோரி தீயிட்டுக் கொண்டு இறந்தார். வேலூரில் பேரணி மற்றும் தமிழகம் முழுவதும் அமளிக்காடாக மாறுகின்ற சூழ்நிலை உருவாயிற்று. சிறையிலும் வெளியிலும் தலைவர் விடுதலைக் காக பல இடங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடை பெற்றது. கோவையில் தொழிற்சங்கத் தலைவர் கண்ணைக் குட்டியின் துணைவியார் தீக்குளிக்கச் சென்ற போது கைது செய்யப்பட்டார். அரசு காவல்துறையினர் மூலம் தீக் குளித்தவர்களிடமும், அவர்கள் இல்லத்தாரிடமும்நெருங்கி பயமுறுத்தி தீக்குளிப்பிற்கு வேறு காரணம் கற்பிக்க முயன்றனர்.

★

பேராசிரியர் அறிக்கை!

கழகத்தின் அறப்போராட்டத்தையொட்டி கழகத் தலைவர் கலைஞரும் மற்றும் முன்னணித் தலைவர்களும் கழகக் கண்மணிகளும் எம். ஜி. ஆர். அரசின் வெறித்தாண் டவத்திற்குப்பின் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டதை அடுத்து செய்தியாளர்கள் கழகப் பொதுச்செய

லாளர் பேராசிரியரைச் சந்தித்தனர். அப்போது பொருளாளர் சாதிக், துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார் ஆகியோரும் உடன் இருந்தனர்.

முதலில் பேராசிரியர் செய்தியாளரிடம் அறிக்கையொன்றை படித்தார்.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முன்னதாகவே தீர்மானித்து அறிவித்திருந்தவாறு இன்று 15-9-81 காலை 9-30 மணி அளவில் வள்ளுவர் கோட்டத்திலுள்ள அண்ணாசிலைக்கு மாலை அணிவித்து விட்டு ஊர்வலமாக—இலங்கைத்தூதர் அலுவலகம் சென்று மறியலில் ஈடுபடுவதற்காக அவரது இல்லத்திலிருந்து வெளியே வந்தவுடனேயே கைது செய்யப்பட்டார். அவருடன் அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் எம்.எல்.சி., முன்னாள் அமைச்சர் மன்னை நாராயணசாமி, வெளியீட்டுச் செயலாளர் எல். கணேசன் எம்.பி., மகளிர் அணிச் செயலாளர் திருமதி அலமேலு அப்பாத்துரை, முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் குழந்தைவேல் முதலான பலர் கைது செய்யப்பட்டதுடன் சூழ்ந்து நின்று முழக்கமிட்ட ஆயிரக்கணக்கான தோழர்கள் அடித்து விரட்டப்பட்டனர்.

கலைஞரும் மற்றவர்களும் கைதானவுடன் அண்ணா சிலைக்கு தோழர் நீலநாராயணன் அவர்கள் மாலை அணிவித்த போதும்—அண்ணா சிலையைச் சுற்றி நாலா பக்கமும் பல நூறு காவலர்கள் கையில் தடியுடன் நின்று ஆங்காங்கு கூடியிருந்த கழகத் தாய்மார்களையும—தோழர்களையும் தடியால் அடித்து விரட்டியதுடன்—கண்ணீர்ப் புகைவீச்சும் நடத்தி மக்களைக் கூடவிடாமல் கலைத்த வண்ணமிருந்தனர். தலையில் தடியடிபட்டு இரத்தம் ஒழுக ஓடிய பல தோழர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நீலநாராயணனுடன் சென்ற தோழர்களில் திரு.க. அறிவழகன் புருடோத்தமன் முதலானோர் கண்ணீர் புகைக்குண்டு வீச்சிலும், 24வது வட்ட இராசு, புதுப்பேட்டை சம்சுதீன் தடியடியிலும் காயமடைந்துள்ளனர்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நெல்லை மாநாட்டில் பேசியதற்கேற்ப எப்படியாவது ஒரு கலவரச் சூழ்நிலையை உரு

வர்க்கி, கழகத் தோழர்களை காவலர்களைக் கொண்டு கடுமையான தாக்குதலுக்கு உட்படுத்தி ஆத்திரமூட்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் நோக்கத்துடனேயே அரசு செயல்பட்டுள்ளது.

இன்று சென்னையில் காவல் துறையினர் நடத்திய காட்டுத்தனமான அடக்குமுறைகளையும் மனிதத் தன்மையற்ற வன்முறைகளையும், ஆத்திரமூட்டும் செயல்களையும் அமைதியோடு தாங்கிக் கொண்ட ஆயிரக்கணக்கான தோழர்கள் அண்ணாவின் உண்மையான தம்பிகள் என்பதை நிரூபித்திருக்கின்றனர். இராணுவ முற்றுகைக்கு உள்ளானது போலவே இன்று சென்னை நகரம் காட்சியளித்தது.

ஜனநாயக ஆட்சி முறையில் எதிர்ப்பைக் காட்டுவதற்கும்—கண்டனத்தைத் தெரிவிக்கவும்-வன்முறையற்ற அறப்போராட்டம் நடத்துவது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தும் அதிலும் இலங்கையில் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட தமிழர்களுக்காக—என்று அடையாளமாகத் தொடங்கப்பட்ட அறப்போராட்டத்தை—வன்முறை மூலமும்—சிறைக் கோட்டத்தில் அடைத்து வைப்பது மூலமும்—அடக்கிவிட எண்ணும் அரசின் செயல்—எதேச்சாதிகார—அராஜக மனப்பான்மையின் விளைவேயாகும்.

கலைஞர் அவர்கள் கைது செய்யப்படும் முன்னர் நேற்று இரவே சென்னையில் உள்ள கழக முன்னணித் தோழர்கள்—ஆற்காடு வீராசாமி எம். எல். சி., துறைமுகத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.செல்வராசன் முதலானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்டத் தலைநகர்களிலும் முன்னணித் தோழர்கள்—மாவட்டச் செயலாளர்கள் முதலான பல்லாயிரம் பேர் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளதுடன் இன்றும் மாவட்டத் தலைநகர்களில் கண்டன ஊர்வலம் நடத்திய பல்லாயிரம் தோழர்கள் (திருவள்ளூர் நாகரத்தினம் எம்.பி உட்பட பலர்) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர்களின் கண்ணீரைக் கண்டு வேதனை தாங்காது தமிழ் மக்கள் ஈடுபடும் போராட்டத்தில் இப்படியும் ஒரு அடக்குமுறை ஆணவ ஆட்சியோ எனவே தனையுறும் அளவுக்கு அராஜகம் தலைவிரிகோலமாக ஆர்ப்பரிக்கிறது. அரசாங்கத்தின் இந்தத் தவறான போக்கினைத் தமிழ்நாட்டு மக்கள் கண்

டிக்கத் தவறமாட்டார்கள் என்பதை அரசுக்கு அறிவுறுத்த நான் கடமைப்பட்டுள்ளேன். அராஜகம் நீடிக்க முடியாது ஆணவ ஆட்சி நிலைக்காது—என்பதை ஆட்சியாளர் நினைவிற் கொள்வார்களாக.

★

தியாகத் தீயால் என் உள்ளத்தைக் கருக்கிடாதீர் சிறையிலிருந்து கலைஞர் வேண்டுகோள்

கழகத் தலைவர் கலைஞர் அவர்களை நான் சிறையில் சந்தித்தபோது, தம்முடைய விடுதலையைக் கோரி உடன்பிறப்புக்கள் பலர் தங்களைத் தாங்களே தீயிட்டுப் பொசுக்கிக் கொள்ளும் துயரச் செய்தி நாள் தோறும் வருவதைக் கேட்டு மிகவும் வருந்தினார்.

தனது விடுதலை கோரி இதுவரை நான்கு ஐந்து பேர் தீக்குளித்து மாண்டதைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று தழுதழுத்த குரலில் கூறினார்.

அன்பு பாசம் எனும் தென்றலாக விளங்கிடும் எனது உடன்பிறப்புகள் தீக்குளித்து அவர்களது தியாகத் தீயால் என் உள்ளத்தை கருக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள்வதாக வேண்டு கோள் விடுத்துள்ளார்.

தியாக தீபங்களாக மாறிவிட்ட பிருந்தாவன் மனோகரன், கிட்டு, முத்துப்பாண்டியன் ஆகியோரின் குடும்பத்தாருக்கு தனது இதயமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

கலைஞரின் உள்ள முருக்கும் வேண்டுகோளை உணர்ந்து இனியேனும் எவரும் இப்படிப்பட்ட துக்கம் விளைவிக்கும் தியாகத்தில் ஈடுபட வேண்டாமென வேண்டிக் கொள்கிறேன்.

க. அன்பழகன்
25.9.81
பொதுச் செயலாளர், தி.மு.க

கண்ணீர்த் துளிகளல்ல;
இரத்தத்துளிகள்!

''என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே, என் நெஞ்சத்தைப் பிளந்தது போதாதா? தீயினுக்கு உங்கள் தேகங்களைத் தாரை வார்த்தீர்கள் — இலக்கியமாகி விட்டீர்கள்!''

''இது அண்ணு ஏற்றுக் கொண்ட முறையல்ல! நான், வரவேற்கும் முறையுமல்ல! எனக்கு நீங்கள் தேவை! வருங்காலத் தமிழகத்திற்கு உங்களின் சேவையன்றே எனக்குத் தேவை!''

உங்களது சாதனைகளைக் கேட்கும் எனக்கு, உங்களது தீயத்துவிட்ட சாம்பலை அளிக்கிறீர்களே, நியாயம்தானா?

தமிழகத்தை வாழவைக்க கடுமையான உங்களது உழைப்பு எனக்குத் தேவை! கரித்துண்டுகளாக மாறுகிறீர்களே!

சிறைவாசங்களின் மூலம் நான் பெற்ற சித்திரவதை சாதாரணமானது!

ஆனால், என் சிந்தை உடல் அணு ஒவ்வொன்றிலும் குடியிருக்கும் என் உடன் பிறப்புகளே தீக்குளித்து பலியாகிறீர்கள் என்ற சேதிதான் எனது நிம்மதியை அழிக்கிறது, அணு அணுவாக நான் சித்திரவதைக்காளாகிறேன்!

மலர்ந்த உங்களது திருமுகங்களை, சிறை மீண்ட பிறகு பார்க்க விரும்பிய எனக்கு நீங்கள் அளிக்கும் அன்புக் காணிக்கை, கல்லறைகள் தானா? எப்படி சகிப்பேன்? எப்படிப் பொறுப்பேன்?

'பிரிந்துவிட்ட பிருந்தாவனும்,
எரிந்து சாம்பலாகி விட்ட கிட்டுவும்,
கரித்துண்டாகி விட்ட மனோகரனும்
மூடித்துக்கொண்டேன் என் வாழ்வை என முழங்கிய முத்துப்பாண்டியனும்,

பயனுள்ள காரியங்களுக்கு அவர்களைப் பயன் படுத்த வேண்டுமென்று விரும்பியவன் நான்.

என்னை, என் தெய்வங்களே, ஏமாற்றி விட்டீர்களே!

தாய்க்குலத்தின் சார்பில் ஈரோட்டில் அன்புச் சகோதரி சென்னிமலை இலட்சுமி, தீக்குளிக்கும் முயற்சியில், ஈடுபட்ட நேரத்தில் தடுக்கப்பட்டு காப்பாற்றப் பட்ட சேதி கேட்டு ஓரளவு மனதைத் தேற்றிக் கொண்டேன்; என் தாயும் தமக்கைமார்களும் தங்கைமார்களும் நானேய தமிழகத்தின் வீராங்கனைகளே நீங்கள் அன்றே?

தீக்குளிக்கும் முயற்சியை கைவிடுங்கள். கட்சியை இலட்சியத்தைக் கட்டிக் காப்பாற்றுங்கள் என நானும் பொதுச் செயலாளர் பேராசிரியரும் அறிக்கை மேல் அறிக்கை விட்டதற்குப் பிறகும்;

இதயத்தைச் சுக்கல் சுக்கலாகப் பிளக்கும் தீக்குளிப்பு சேதிகள்...இதோ என் கண்முன்னே.

திருப்பூரில் திருவேங்கடம் கழகத் தோழன் கல்லாவியில் இராஜேந்திரன் தீக்குளித்தனராம்; கவலைக்கிடமான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களாம்!

அண்ணாவே, இவர்களை இழந்துவிட்டு நான்நடைப்பிணமாக காராக்கிருகத்தில் நாட்களை நகர்த்துகிறேன்.

எனது உயிரினும் மேலான உடன் பிறப்புகளே! என் இறுதி வேண்டுகோள்.

அருள் கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன். உயிரை அழிக்காதீர்கள்; தமிழகத்தை உருவாக்க உங்களைத் தயாராக்குங்கள்! எனக்காக நீங்கள் செய்கிற தியாகம், காட்டுகிற பாசம், உங்களைன் பக்கத்திலே உட்கார வைக்க வேண்டுமே தவிர என்னைத் தவிக்க விட்டு பிரிந்து போவதற்கா? என்னை அணு அணுவாக சிதைக்கும் இந்த நிலை தொடர வேண்டாம் என கழக உடன் பிறப்புகளை கால் வருடிக்கேட்டுக் கொள்கிறேன்.

மேலே பொழிந்திருக்கும் கண்ணீர்த் துளிகள் வெறும் கண்ணீர்த் துளிகளல்ல, கலைஞர் அவர்களே இன்றைக்கு நான் சிறைச் சாலையில் சந்தித்தபோது, சிந்திய இரத்தத் துளிகள்.

தலைவர் கலைஞரின் சார்பாக, பொதுச் செயலாளர் பேராசிரியரின் சார்பாக, பொருளாளர் சாதிக்கின் சார்பாக, தலைமை நிலைய மாவட்ட, வட்டக் கழகங்களின் சார்பாக கழகக் கண்ணின்மணிகளைக் கேட்டுக் கொள்கிறேன். நாம் வாழத் துடிக்கும் சமுதாயத்தின் பிரதிநிதிகள், எதையும் தாங்கும் இதயத்தைப் பெறுவோம். விழி திறக்கட்டும்—வழி பிறக்கட்டும்.

கி. மஞ்சைகரன்

26. 9. 81

துணைப் பொதுச் செயலாளர் தி. மு. க.

★

நாங்கள் குற்றவாளிகள் அல்ல! நீதிமன்றத்தில் கலைஞர் வாக்கு மூலம்

29—9—81 அன்று எழும்பூர், சென்னைப் பெருநகர 2-வது நீதிபதி ரங்கசாமி முன்னிலையில் தலைவர் கலைஞர் அவர்கள் படித்தளித்த வாக்கு மூலம்.

மாண்புமிகு நடுவர் அவர்களே,

எங்கள் மீது தொடரப்பட்டுள்ள இந்த வழக்கு குறித்து சில விபரங்களை உங்கள் முன்னிலையில் அளிப்பது உண்மைகளை ஒளியேற்றிக் காட்டப் பயன்படுமென்று நம்புகிறேன்.

சுமார் இருபதாண்டு காலமாக இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அவ்வப்போது கண்டித்து வரும் திராவிட முன்னேற்றக் கழகம், ஓரிரு மாதங்களுக்கு முன்பு இலங்கையில் எல்லை கடந்த துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும், உயிர் உடமை இழப்பு

களுக்கும் ஆளாகிய தமிழர்களுக்காக முதல் குரல்கொடுத்து மத்திய அரசுக்குத் தந்தித் தகவல்களை அனுப்பி, இந்தியப் பிரதமரையும் நேரிலே சந்தித்து தனது வேதனையை எடுத்து கூறியது.

தமிழக சட்டப் பேரவையில் ஆளுங்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவுத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றின.

மாநிலம் தழுவிய அர்த்தால் ஒன்று நடத்திட நாள் குறிக்கப்படுமென ஆகஸ்டு 22-ம் நாள் தமிழக முதல்வர் பேரவையில் அறிவித்தார்.

ஆனால் அந்த அறிவிப்பு உடனடியாக — முறையாகச் செயல்பட—உரிய வழிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் செப்டம்பர் 12-ந் தேதி வரையில் அந்த அர்த்தால் தள்ளிப் போடப்பட்டது.

இதற்கிடையே இலங்கையில் அமளி தொடர்ந்து கொண்டேயிருந்தது. அர்த்தாலுக்கு முன்னதாக மாணவர்கள் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். வேறு சில கட்சிகளும் தூதரகத்திற்கு முன் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தின.

அப்போதுதான் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா சென்றிருந்த தனபதி என்ற தமிழ்வாலிபன் சிங்கள வெறியர்களால் வெட்டிக் கொல்லப்பட்டான்.

தனபதி இங்குள்ள ஆளுங்கட்சியான அ.தி.மு.க உறுப்பினர் என்ற கட்சி வட்டத்துக்குள்ளே அந்தக் கொடுஞ் செயலை அணுகாமல் வெளிநாட்டில் ஒரு தமிழனுக்கு ஏற்பட்ட அவலம் என்ற உணர்வோடு தான் தி.மு.க அதனை அணுகியது.

பம்பாய் தமிழ் அகாடமி விழாவுக்கு சென்றிருந்த என்னிடம் அங்குள்ள தமிழர்கள் அகாடமி சார்பாகவும், கழகச் சார்பாகவும் தனபதி குடும்பத்திற்கு மூவாயிர ரூபாய் நிதி வழங்கினர்.

அதனை தனபதி குடும்பத்தினர் பெற்றுக் கொண்டனர். பெற்றுக் கொண்ட பிறகு ஆறு நாட்கள் கழித்து அந்த நிதியை தி.மு. க. பொருளாளருக்கு திருப்பியனுப்புமாறு தனபதி குடும்பத்தினர் வற்புறுத்தப்பட்டனர்.

சட்டத்தை அமுல் படுத்துவதிலும் குழப்பம்

இதற்கிடையே சிங்கள வெறியர் கொடுமை உச்சகட்டத்திற்குச் செல்வதன் அடையாளமாகத் தனபதி கொல்லப்பட்டதைக் கண்டித்து சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், ஆகஸ்டு 29-ம் நாள் சென்னை இலங்கைத் தூதுவரகத்தின் முன்னே ஒரே ஒரு நாள் அடையாள மறியல் செய்வதென அறிவித்தனர்.

அடையாள மறியலுக்கும் அண்ணா சாலையில் அண்ணா சிலையிலிருந்து ஊர்வலமாகப் புறப்படுவதற்கும் தமிழக அரசு தடை விதித்தது.

தடை விதித்த போதிலும், அறிவித்தவாறு அடையாள மறியலில் ஈடுபட கழகத்தின் அறப்போராட்ட வீரர்கள் ஆகஸ்டு 29 காலையில் அண்ணா சிலையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டனர்.

இருநூறு பேர் கைது செய்யப்பட்டு அவர்களில் சுமார் எழுபது பேர் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

130 பேர்—பத்து மகளிர் உட்பட — மத்திய சிறைச் சாலையில் அடைக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இங்கேயே குழப்பம்.

மறுநாள் அரசின் தடையை மீறி இளைஞர் காங்கிரசார் இலங்கைத் தூதரகத்தின் முன்பு உண்ணாவிரதம் மேற்கொள்ள முனைகின்றனர். அவர்கள் காலையில் கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டு விடுகின்றனர். ஆனால் ஆகஸ்டு 29-ல் ஒருநாள் அடையாளமறியல் செய்யச் சென்ற கழகத்தினர் மட்டும் விடுவிக்கப்படவில்லை. அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து செப்டம்பர் 12ல் அர்த்தால் நடத்துவதற்கு ஏதுவாக மகளிர் உள்ளிட்ட 130 கழகத்தினரையும்விடுதலை செய்யுமாறு சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அரசாங்கம் அந்த வேண்டுகோளைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

பொறுத்திருந்து பார்த்த தி மு கழகம் செப்டம்பர் மூன்றும் தேதி முதல் தொடர் மறியலை அறிவித்து அவ் வாறே நாள்தோறும் மறியல் செய்த கழகத்தினர் சுமார் நானூறு பேர் கைதாகி சிறைப்பட்டனர்.

நிர்வாகக்குழு தீர்மானத்தில்!

அரசும் அனைத்துக் கட்சிகளும் முன்னின்று நடத்திய செப்டம்பர் 12ந் தேதி அர்த்தாலிலும் தி மு கழகம் முழு ஒத்துழைப்பை நல்கியது. செப்டம்பர் 10ம் தேதி கூடிய தி. மு. கழக தலைமை நிர்வாகக் குழுவில் செப்டம்பர் 14க்குள் கழகத்தினர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டால் செப்டம்பர் 15 ஆம் தேதி என் தலைமையில் சென் னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் மறியல் இருக்காது என்ற முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எங்களைப் போலவே ஆளும் கட்சிக்கு ஒருமித்த கருத்து இருப்பதாக நம்பியதன் காரணமாகவே செப்டம்பர் 14க்குள் கழகத்தினர் நானூறு பேரையும் விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தி, அப்படி விடுதலை செய்யும் பட்சத்தில் செப்டம்பர் 15-ஆம் தேதி மறியல் தேவைப்படாது என்றும் ஒருமுறைக்கு இரு முறை அறிவித்தோம்.

திரு. எம்.ஜி.ஆர். தலைமையில் உள்ள இந்த அரசு தூதுவர் ஆலயங்களின் மகிமைகளைப் பற்றி மாறி மாறி அறிக்கைகளை வெளியிட்டதே தவிர, தி.மு.கழகத்தைப் பழி வாங்கும் எண்ணத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள் ளவில்லை. ஒரு உத்தரவின் மூலம் சிறையில் இருந்த நானூறு கழகத்தினரையும் விடுதலை செய்திருந்தால்-இன்று பத்தாயிரம் கழகத்தினரை சிறையில் அடைத்திருக்கத் தேவையில்லை. ''இருந்திங்கே அந்தியிடை வாழ வேண்டாம்; இறப்புலகில் இன்பம் காண்போம்'' என்று ஏழெட்டுப் பேர் தீக்குளித்திடவும், அதில் நாலைந்து பேர் மாண்டிடவும் மிஞ்சியிருப்போர் கருகிய உடலுடன் கவலை க்கிடமான நிலையில் மரணப்படுக்கையில் வீழ்ந்து கிடக்கவு மான சோகம் தமிழகத்தை கப்பியிருக்காது.

நாங்கள் செப்டம்பர் 15-ந் தேதி எங்கள் அண்ணன் பிறந்தநாளில் மறியல் செய்தே தீரவேண்டும்- சிறை

சென்றே ஆகவேண்டும்—என்று பிடிவாதம் கொண்டிருந்தால்; செப்டம்பர் 10-ந் தேதி எங்கள் கழக நிர்வாகக் குழுவில் 15-ந் தேதி மறியல் பற்றி மறு பரிசீலனை செய்திருக்க மாட்டோம். எங்களின் தீர்மான வாசகங்களை மாநில அரசினர் ஊன்றிப் படித்திருந்தாலோ- அல்லது எங்களின் அறிவிப்பை உதாசினப்படுத்தாமலிருந்தாலோ— செப்டம்பர் 15-ந் தேதி எங்களது அறப்போராட்டத்தைத் தவிர்த்திருக்கலாம்.

மனித உரிமைகளுக்காக வாழ்நாள் முழுதும் பாடுபட்ட எங்களின் இனிய தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பிறந்தநாளே எங்களுக்கும் உரிமைகளை மூன்வைத்து அறப்போர் நடத்தும் நாளாக ஆகிவிட்டது.

இந்த நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களாக நிறுத்தப்பட்டுள்ள என் மீதும், எங்கள் கழகத்தினர் பலர் மீதும் முதல் தகவல் அறிக்கை எனப்படும் (எப்.ஐ.ஆர்.) பட்டியலில் நாங்கள் பிறர் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய காரியங்களைச் செய்தோம் என்றும், ஐம்பது ரூபாய் பெறுமானத்துக்கு மேற்பட்ட சொத்துக்களை நாசப்படுத்தினோம் என்றும், மறியல், தடுத்தல் போன்ற காரியங்களில் ஈடுபட்டோம் என்றும், இன்னும் சில இ. பி. கோ. சட்டப்பிரிவுகளின்படி குற்றங்கள் புரிந்திருக்கிறோம் என்றும் குறிப்பிட்டு 15 நாட்களாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளோம்.

சிறையில் இருக்கத் தயார்தான்!

சிறைச்சாலையில் எவ்வளவு காலம் இருப்பதற்கும் நாங்கள் தயார் என்ற போதிலும், எங்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கும், அதன் தொடர்பான எந்த சட்டப்பிரிவுகளும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செப்டம்பர் 15-ஆம் நாள் வழக்கம் போல் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து விட்டு மறியலில் அறப்போர் முறையில்—அண்ணா வழியில் ஈடுபட என் இல்லத்திலிருந்து புறப்பட்ட என்னை என் இல்லத்து வாசலிலேயே கைது செய்து-அப்படிக் கைது செய்த தவறை மறைத்திட இத்தனை சட்டப்பிரிவுகளில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்பது தான் உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையாகும்.

குற்றவாளிகள் அல்ல

கழகத்தினர் யாரும்-அதிலும் குறிப்பாக நான்-அண்ணா சிலைக்கு மாலை போட வந்துவிடக் கூடாது என்பதற்காக வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி எந்தப் பகுதியிலும் மக்கள் நடமாட முடியாமல் காவல் துறையினரால் அடித்து விரட்டப்பட்டதும்-வீட்டு வாசலிலேயே நான் கைது செய்யப்பட்டதும் நாடறிந்த உண்மைகளாக இருக்கும் போது, தமிழ்நாடு அரசாங்கம் தன்னைத் தூய்மையானதாகக் காட்டிக் கொள்ள எங்களைக் குற்றவாளிகள் எனக் கூறுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல! எனவே நாங்கள் குற்றவாளிகள் அல்ல!

(முரசொலியில் 30-9-81 அன்று வெளியானது)

★

தலைவர் கலைஞர் திடீர் விடுதலை! காவலை நீடித்து சிறைக்கு அனுப்பியபின் விடுதலை செய்து உத்தரவு!

சென்னை, செப். 29ர்

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மறியல் செய்ய முயன்று செப். 15 அன்று கைது செய்யப்பட்ட தலைவர் கலைஞர் அவர்கள் இன்று நீதிமன்றம் கொண்டு வரப்பட்டு மீண்டும் ரிமாண்ட் செய்யப்பட்டார். ஜாமீனில் செல்கிறீர்களா? என்று நடுவர் ரங்கசாமி அவர்கள் கேட்டதற்கு, தலைவர் கலைஞரும் மற்றவர்களும் மறுத்துவிட்டனர் வழக்கு விசாரணை மீண்டும் அக்டோபர் முதல் நாள் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்ட பின் கலைஞர் முதலானோர் சிறைச் சாலை சென்றனர். பின்னர் போலீஸ் சார்பில் புதுமனுதாக்கல் செய்யப்பட்டு தலைவர் கலைஞர் விடுதலை செய்யப் பட்டார்!

இலங்கைத் தமிழர்களின் படுகொலையைக் கண்டித்தும் எம். ஜி ராமச்சந்திரன் அரசு கழகத்தினரை பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்த்தும் கடந்த 15-ந் தேதி அறப்போர் மறியலில் ஈடுபட்ட கழகத் தலைவர் கலைஞரையும் மற்றும்

கழகத்தினரையும் கைது செய்து சிறையில் வைக்கப் பட்டதையொட்டி வழக்கு இன்று எழும்பூர் பெருநகர இரண்டாவது நீதிபதி ரங்கசாமிமுன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

வழக்கு விசாரணையையடுத்து தலைவர் கலைஞர் இன்று நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இலங்கையில் நடைபெற்ற தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து கழகம் நடத்திய அறப்போர் மறியலையொட்டி கழகத்தினரை எம். ஜி. ராமச்சந்திரனின் அ. தி. மு க. அரசு அடுக்கடுக்காகக் கைது செய்து சிறையில் அடைத்தது.

இந்தத் தமிழின விரோதப் போக்கைக் கண்டித்து கழகத் தலைவர் கலைஞர் செப்டம்பர் 15-ஆம் தேதி அன்று அறப்போர் மறியலில் ஈடுபடவிருந்தார்.

இதையொட்டி தலைவர் கலைஞரை வீட்டு வாசலிலேயே வைத்துக் கைது செய்து எம். ஜி. ராமச்சந்திரனின் அரசு சிறையில் அடைத்தது. தலைவருடன் 120 தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை இன்று எழும்பூரி லுள்ள பெருநகர இரண்டாவது நீதி மன்றத்தில் நடை பெற்றது

வழக்கு விசாரணையையொட்டி தலைவர்கலைஞரும் மற் றும் மன்னை. எல். கணேசன். சா. கணேசன், டாக்டர் குழந்தைவேலு எம். பி. நெல்லை நெடுமாறன், திருப்போரூர் சொக்கலிங்கம் எம். எல். ஏ, ஆகியோர் உட்பட கைதாகி சிறையில் உள்ள கழகத் தோழர்கள் 117 பேர்களும் நீதி மன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தலைவர் கலைஞர் இன்று நீதி மன்றம் வருவதையொட்டி காலை 8 மணிமுதல் நீதி மன்றம் இருக்கும் ஆரிஸ் சாலையின் போக்குவரத்து முழுவதும் வேறு வழியாக திருப்பி விடப் பட்டது.

காலை 7-30 மணிமுதலே கழகத்தோழர்கள் நீதி மன்றம் நோக்கி அணிதிரளத் தொடங்கிவிட்டனர். நீதி மன்றத் தின் மூன்று திசைகளில் இருந்தும் சாரிசாரியாக அணி வகுத்து வந்து எழுச்சி முழக்கம் எழுப்பியபடி குவிந்த தோழர்களை நீதிமன்ற வளாகத்திற்குள் நுழைய விடாதபடி

தடுப்பதில் போலீசாரின் கெடுபிடி வரம்பு கடந்து செயல் பட்டது.

சுமார் 9 மணிக்கு மேல் யாரையும் நீதி மன்ற வளாகத் தீற்குள் நுழைய விடாதபடி தடுத்து மேற்குப் புறத்தில் அசோகா ஓட்டல் சந்திப்பிலும் கிழக்குப் புறத்தில் மிக நீண்ட தூரத்திலேயும் போலீசார் நூற்றுக்கணக்கில் குவிந்து நின்று தடுத்து விட்டனர்.

எனினும் 9 மணிக்கு முன்னதாகவே ஏராளமான தோழர்களும், தாய்மார்களும் நீதி மன்ற வளாகத்திற்குள் குவிந்து விட்டனர்.

சுமார் 11. 20 மணியளவில் கழகத் தலைவர் கலைஞரை யும் மற்றும் தோழர்களையும் போலீசார் மத்திய சிறையில் இருந்து அழைத்து வந்தனர். அப்போது பொங்கி எழும் பெருங்கடலின் பேரிரைச்சல் போல கழகத் தோழர்கள் ''கலைஞர் வாழ்க!'' ''கழகத் தலைவரை விடுதலை செய்'' ''அராஜக ஆட்சி ஒழிக'' என்று முழக்கம் எழுப்பினர். அப் போது எங்கும் உணர்ச்சி மயமான நிலை பரவியிருந்தது.

ஏராளமான வெடிகள் வெடிக்கப்பட்டு சில பகுதிகளில் சற்று நேரம் புகை மூட்டம் நிலவியது.

நீதி மன்ற வளாகத்திற்கு வெளியே திரண்டிருந்த ஆயிரக்கணக்கான தோழர்களையும், தாய்மார்களையும் பொது மக்களையும் கட்டுப்படுத்த போலீசாரின் குதிரைப் படை மிக மோசமாகச் செயல்பட்டது. பொது மக்களையும் தோழர்களையும் நீதிமன்றத்தை அண்டவிடாமல் ஓட ஓட விரட்டினர்.

எங்கு நோக்கினும் போலீஸ் மயமாகவே தோற்றம் அளித்து பொதுமக்களை பீதியடையச் செய்ய வேண்டும் என்பதில் அரசு மிகுந்த அக்கறை காட்டியிருந்தது.

சரியாக 11.24க்கு நீதிபதி ரங்கசாமி தனது இருக்கை யில் வந்து அமர்ந்ததும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் வரிசையாகப் படிக்கப்பட்டது. அப்போது பெரும்பாலானவர்களைபோலீசார்நீதிபதியின் முன்கொண்டு வராதது தெரிந்தது.

அதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் சிறிது நேரம் தடைப்பட்டன. அதனால் நீதிபதி போலீசார் மற்றவர்

களையும் கொண்டு வரட்டும் என்று கூறி எழுந்து உள்ளே போய்விட்டார்.

இதையடுத்து போலீசார் பரபரப்படைந்தவர்களாக கீழே இருந்த மற்ற குற்றம் சாட்டப்பட்ட தோழர்களையும் அழைத்து வந்தனர். அதையடுத்து 11.53க்கு மீண்டும் நீதிபதி தனதுஇருக்கையில் வந்து அமர்ந்து தனது விசாரணையைத் தொடர்ந்தார்.

இன்று தலைவர் கலைஞர், முன்னாள் அமைச்சர் மன்னை, வெளியீட்டுச் செயலாளர் எல். கணேசன் எம். பி, டாக்டர் குழந்தைவேலு எம். பி, சொக்கலிங்கம் எம் எல் ஏ தலைமை நிலையச் செயலாளர் சா. கணேசன், நெல்லை நெடுமாறன், திருமங்கலம் கோபால், அன்புச் செழியன், தூய மணி உட்பட 117 தோழர்கள் நீதிமன்றம் வந்திருந்தனர்.

நீதிபதி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பினும் நகல்கள் வழங்க இன்னும் இரண்டு மூன்று நாட்கள் ஆகும் என்பதால் தலைவர் கலைஞரையும் மற்றவர்களையும் ஜாமீனில் செல்வதாக இருந்தால் அனுமதிக்கிறேன் என்றார். அதற்குத் தலைவர் கலைஞர் ஜாமீனில் போக மறுப்புத் தெரிவித்து தங்கள் மீது அரசு சுமத்தியுள்ள குற்றச்சாட்டை மறுத்து அறிக்கையொன்றை வாசித்து அளித்தார். அறிக்கையில் தீக்குளித்த தியாகிகளையும் தீக்குளித்து மருத்துவமனையில் உள்ள தோழர்களையும் பற்றிக் கூறும்போது கலைஞர் உணர்ச்சி மிகுதியினால் உள்ளம் நெகிழ்ந்து போனார்.

இன்று நீதி மன்றத்தில் தலைவர் கலைஞர் தனது வாக்கு மூல அறிக்கையைப் படித்த பிறகு ஜாமீனில் போகிறீர்களா என்று நீதிபதி கேட்டபோது நாங்கள் ஜாமீனில் போக மாட்டோம் என்று கலைஞர் உறுதியாகத் தெரிவித்து விட்டார்.

அதன் பிறகு நீதிபதி அக்டோபர் முதல் தேதி அன்று அனைவருக்கும் குற்றப் பத்திரிகை பிரதிகள் தரப்படும் என்றும் அதுவரையில் சிறையில் ரிமாண்டில் இருக்க வேண்டும் என்றும் அறிவித்து தலைவர் கலைஞர், முன்னாள் அமைச்சர் மன்னை மற்றும் கழக முன்னணியினர் உட்பட 117 தோழர்களையும் சிறைக்கு அனுப்பி வைத்தார்.

இந்தச் செய்தி பரவியதும் நீதி மன்றத்தைச் சூழ்ந்திருந்த மக்கள் வெள்ளம் கொந்தளித்தது.

உடனடியாக தலைவர் கலைஞரையும் மற்றும் சுழகத்தினரையும் போலீசார் சென்னை மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

சென்னை நகரம் முழுவதும் தீபோல் இந்தச்செய்தி பரவியதும் அமளிக்காடாயிற்று.

நீதிமன்றத்திலிருந்து கலைஞரை ஏற்றிச் சென்ற வேன், நகர முடியாதபடி நூற்றுக்கணக்கான பெண்கள் வேனின் குறுக்கே படுத்து மறியல் செய்தார்கள்.

அவர்கள் மீது குதிரைப் படையை ஏவி விரட்ட முயற்சி செய்யப்பட்டது.

கழக முன்னணியினர் பிறகு கழகத் தோழர்களைச் சமாதானம் செய்து வேனுக்கு வழிவிடச் செய்தார்கள்.

தலைவர் கலைஞர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, நகரம் முழுவதும் பல இடங்களில் கொந்தளிப்பின் விளைவாகப் பல சம்பவங்கள் நடைபெற்றன.

இதைக் கண்ட எம் ஜி ஆர் அரசு மிரண்டது.

போலீஸ் துறையினர் தலைவர் கலைஞர் அவர்களை மீண்டும் சிறையில் வைத்தால் நிலைமையைக் கட்டுப்படுத்த இயலாதென்றும்சட்ட ஒழுங்கைக் காப்பாற்றஇயலாதநிலை ஏற்பட்டுவிடும் என்றும் அரசாங்கத்திற்குத் தெரிவித்ததாகவும் தெரிகிறது.

எனவே, இன்னும் தலைவர் கலைஞர் அவர்களைச் சிறையில் வைத்திருப்பது பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருதி அவரை உடனடியாகச் சிறையிலிருந்து விடுத்து அக்டோபர் முதல் தேதியன்று நீதி மன்றத்துக்கு வந்தால் போதும் என்று ஆணை பிறப்பிக்குமாறு நீதிபதியிடம் அரசாங்கத்தின் சார்பில் – அரசாங்க வழக்கறிஞர் இன்று பிற்பகல் ஒரு மனியளவில் மனுவைத் தாக்கல் செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்களை நீதி மன்றத்திலிருந்து அழைத்துச் சென்ற பிறகு. அந்தச் சுற்றுவளைவுக்குள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

மாஜிஸ்டிரேட், அரசாங்க வழக்கறிஞரின் மனுவை ஏற்று அமுல்படுத்திஞல்' சென்னை நகரத்திலும், தமிழகம் முழுவதும் ஏற்படக்கூடிய பெரும் கொந்தளிப்பையும் இது வரையில் தொடர்ந்து வருகிற நிகழ்ச்சிகள் மேலும் தொட

ராமலிருப்பதற்கும் வழிவகுக்க முடியும் என்பதையும் மிகத் தாமதமாக எம். ஜி. ராமச்சந்திரன் அரசு உணர்ந்திருக் கிறது,

முடிவாக மாலை 4-50 மணியளவில் தலைவர் கலைஞர் விடுதலை செய்யப்பட்டார்!

(30-9-81 அன்று முரசொலி பத்திரிகையில் வெளியானது.)

அரசு வாக்கு மூலத்திற்கு தலைவர் கலைஞர் பதில்! நீதி மன்றத்தில் அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் கலைஞர் வாதம்!

கழகத் தலைவர் கலைஞர் மற்றும் கழகத் தோழர்கள் 117 பேர்கள் மீதான வழக்கு விசாரணை இன்று எழும்பூர் பெரு நகர் 2-வது நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணையை யொட்டி ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும். மகளிர் அணியினரும், பொது மக்களும் நீதிமன்றவளாகத்திற்குள் குவிந்து இருந்தனர்.

எழுச்சி மிகுந்த மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவ தற்காக ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்,

தலைவர் கலைஞரின் கார் சரியாக 10-55 மணிக்கு நீதி மன்ற வளாகத்திற்குள் நுழைந்தபோது "கலைஞர் வாழ்க" "தானைத் தலைவர் கலைஞர் வாழ்க" "தமிழினத் தலைவர் வாழ்க" "போடாதே போடாதே பொய் வழக்குப் போடாதே" என்பன போன்ற எழுச்சி மிகுந்த முழக்கங்களே இடி முழக்கமென எழுப்பி தலைவர் கலைஞரை வரவேற்றனர்.

சரியாக 11 மணிக்கு நீதிபதி ரங்கசாமி தனது இருக்கை யில் வந்து அமர்ந்தார். இதையடுத்து, இன்று நீதிமன்றத் தில் தமிழ்நாடு அரசு சார்பாக உயர்நீதி மன்ற அரசு தரப்பு வழக்கறிஞர் ராசமாணிக்கம் ஆஜராகி, அன்று (29-9-81) கழகத் தலைவர் அவர்கள் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்கு மூலத்திற்குப் பதிலாக அரசாங்கத்தின் சார்பில் தான் ஒரு அறிக்கையைப் படிக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

உடனே கழக வழக்கறிஞர் என். வி. என் சோமு எழுந்து அன்று கழகத் தலைவர் கலைஞர் குற்றப்பத்திரிகை தாக்கல்

செய்ததையொட்டி தன்னுடைய வாக்குமூலத்தைப் படித்தார், ஆனால் இன்றைக்கு அரசு வழக்கறிஞர் அறிக்கையைப் படிக்க எந்த வகையிலும் நியாயமில்லை என்று தன்னுடைய மறுப்பைத் தெரிவித்தார்.

அதற்கு அரசாங்க வழக்கறிஞர் இது எதிர் மனு என்று குறிப்பிட்டார். உடனே வழக்கறிஞர் என் வி என் சோமு எம் எல் ஏ அன்று கழகத்தலைவர் தாக்கல் செய்தது மனு அல்ல; அது ஒரு அறிக்கை; எனவே இதை அரசாங்க வழக்கறிஞர் படிக்கக் கூடாது; இதைப்போல் அரசாங்க வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் வந்து அறிக்கைகள் படிப்பதற்கு முன்னுதாரணம் கிடையாது எனவே நீதிபதி அவர்கள் அதனை அனுமதிக்கக கூடாது என்று தன்னுடைய கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்தார். ஏனைய கழக வழக்கறிஞர்களும் அதற்கு ஆட்சேபனைகளைத் தெரிவித்தார்கள்.

பிறகு நீதிபதி ஆட்சேபனைகளை பதிவு செய்து கொண்டு அரசாங்க வழக்கறிஞரை அந்த அறிக்கையைப் படிக்க அனுமதித்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் உடனே நீதிபதியை நோக்கி, "நீதிபதி அவர்களே, அவருக்கு அறிக்கையினைப் படிக்க வாய்ப்பளித்தால், அதற்குப் பதில் சொல்கின்ற வாய்ப்பை எனக்கும் உடனே தரவேண்டும்" என்று சொல்லவே, நீதிபதி அதற்கு ஒத்துக்கொண்டார்.

இந்நிலையில் அரசாங்க வழக்கறிஞர் தான் படிக்கிற அறிக்கையின் நகலை கழக வழக்கறிஞர்களுக்குக் கொடுக்காமல் படிக்கத் தொடங்கியவுடன், கழகத் தலைவர் கலைஞர் அந்த அறிக்கையின் பிரதி ஒன்று தனக்கு வேண்டுமென்று கேட்டார். அதற்கு அரசு வழக்கறிஞர் படித்து முடித்ததும் தருகிறேன் என்றார்.

(அன்றைய தினம் 29-9-81 அன்று கழகத் தலைவர் கலைஞர் நீதிமன்றத்தில் படித்த அறிக்கை முன்கூட்டியே அரசு வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிக்கும் தரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது)

கழகத் தலைவர். பின்னர் நீதிபதியைப் பார்த்து, "நீதிபதி அவர்களே, என்னை உடனே பதில் சொல்ல தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். எனவே அந்த நகல் இல்லாமல்

நான் எப்படி பதில் செல்ல இயலும்?'' என்று கேட்கவே, அரசு வழக்கறிஞர் என்னிடம் வேறு நகல் இல்லை என்று சொன்னார்.

நீதிபதி நகல் தந்தார்!

உடனே நீதிபதி அவர்கள் தன்னிடம் இருந்த நகலை தலைவர் கலைஞரிடம் கொடுத்துப் பார்த்துக் கொள்ளச் சொன்னார். அரசாங்க வழக்கறிஞர் அவருக்குத் தயாரித்து தரப்பட்ட அந்த அறிக்கையைப் படித்தார்.

படித்து முடித்த பிறகு நீதிபதி குற்றப் பத்திரிகை நகல்களை குற்றம் சாட்டப்பட்டவர்களை பெற்றுக் கொள்ளும்படி சொன்னார். அனைவர் சார்பிலும் வழக்கறிஞர் என். வி. என். சோமு அவைகளைப் பெற்றுக் கொண்டார்.

பின் நீதிபதி கலைஞரைப் பார்த்து, ''குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று கேட்டார்

கலைஞர் பதில்!

''நாங்கள் குற்றத்தை மறுக்கிறோம்'' என்று சொல்லி அரசு வழக்கறிஞர் ராஜமாணிக்கம் அவர்கள் படித்த அறிக்கையில் இருந்த அரசியல் வியாக்யானங்களுக்கு பதிலளித்து சுமார் முப்பது நிமிட நேரம் தொடர்ந்து நீதிபதியை நோக்கி கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் வாதிட்டார்.

அதன்விவரமாவது .-

கழத் தலைவர் கலைஞர் அவர்கள் நீதிமன்றத்தில் கூறியதாவது:-

முதலமைச்சர் வாக்குமூலத்தை அரசாங்க வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தில் படித்திருக்கிறார். கடந்த 29-ஆம் தேதி சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து போலீசார் இந்தமன்றத்திற்கு எங்களைக் கொண்டு வந்து உங்கள் முன்னால் நிறுத்தியபோது, தங்களிடம் வாக்குமூலத்தை நான் கொடுத்தேன். அப்போது நீங்கள் 'ஜாமீனில் போக விரும்புகிறீர்களா'' என்று கேட்டீர்கள். ''நாங்கள் ஜாமீனில் போக விரும்பவில்லை'' என்று தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்தேன். அப்படியானால் ரிமாண்டில் இருக்க வேண்டியிருக்கும் என்று நீங்கள் பதிலளித்தீர்கள்.

அதன்படி கமார் 11.45 அல்லது 11.55 மணி அளவில் எங்களுக்கு ரிமாண்டு வழங்கப்பட்டு நாங்கள் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டோம்.

பிறகு மாலை 3 அல்லது 3.30 மணி அளவில் இதே நீதிமன்றத்தில் அரசு சார்பில் அரசு வழக்கறிஞர் ரிமாண்ட் நீடிக்கத் தேவையில்லை என்றும், விசாரணைக்கு வந்தால் போதும் என்றும் மனு கொடுத்ததன் பேரில் இதே நீதிமன்றத்தில் இருந்து எங்களை சிறையிலிருந்து விடுவிக்க உத்தரவு விடப்பட்டது. இந்த அரசு எவ்வளவு குழப்பமான அரசு என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. (சிரிப்பு)

என்னை மன்னிக்க வேண்டும். நீதிபதி அவர்களே, நீதிமன்றத்தின் மரபிற்கு மாறாக நான் இதைக் கூறவில்லை. ஒரு நீதிபதி குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு ரிமாண்ட் கொடுத்து அவர்களை சிறைக்கு அனுப்பிய பிறகு, அதே நீதிமன்றத்திலிருந்து அவர்களை விடுதலை செய்ய இரண்டொரு மணி நேரத்தில் வேறு ஒரு உத்தரவு வருகிறது என்றால் இதைப் போன்ற நிகழ்ச்சி உலக சரித்திரத்திலேயே 1981-ல் தான் நடந்திருக்கிறது. இந்த நீதிமன்ற புரட்சியை முதலமைச்சர் எம். ஜி. ஆர். தான் செய்திருக்கிறார், அவரைத் தவிர வேறு யாரும் செய்ற்து இல்லை.

நீங்கள் சட்டம் பயின்றவர்கள். சட்டத்தின் நுணுக்கங்களை நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள் இங்கு அரசாங்க வழக்கறிஞர் படித்த அறிக்கையில் எவ்வளவு முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் அடங்கிக்கிடக்கின்றன என்பதைப் பார்க்கலாம். அரசு வழக்கறிஞர் இங்கு பேசியது முழுக்க முழுக்க அரசியல்.

நீதிபதி (குறுக்கிட்டு): 15-ஆம் தேதி நடந்த சம்பவத்தை மட்டும்தான் நான் பார்க்கப்போகிறேன். அதற்கு முன்புள்ள சம்பவங்களை நான் கவனிக்கப் போவதில்லை.

கலைஞர்: நீதிபதி அவர்களே, இதை அரசாங்க வழக்கறிஞர் படிக்கும் போதே நீங்கள் தெரிவித்திருந்தால்இந்தப் பிரச்சனை எழுந்திருக்காது. (என்று கூறிவிட்டு நீதிபதியைப் பார்த்து தொடர்ந்து கூறியதாவது)

இலங்கை தமிழர்களுக்காக முதல் குரல் கொடுத்தது அ தி. மு. க. தான் என்று அரசாங்க வழக்கறிஞர் படித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது,

இருபதாண்டு காலமாக எங்களுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி. மு. கழகம் செயல்பட்டதிலிருந்து இலங்கைத் தமிழர்களுக்காக அவ்வப்போது தொல்லைகள் ஏற்படும்போதெல்லாம் நாங்கள் எப்படி குரல் கொடுத்தோம் என்பதை பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

டெல்லியில் பிரதமரைச் சந்தித்து இலங்கைத் தமிழர்களுக்காக முதலமைச்சர் பேசினார் என்று அரசு தரப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் டெல்லியில் நிருபர்களைச் சந்தித்த முதலமைச்சர் இலங்கையில் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை; எனவே உண்மையான தகவல்களைச் சேகரித்துத் தரும்படி பிரதமரிடம் கேட்டிருக்கிறேன் என்றுதான் கூறியிருக்கிறார்.

இலங்கையில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டதைப் பலரும் கண்டித்தார்கள். இதை நாங்கள் மறுக்கவில்லை. தி. மு. க. அ. தி. மு. ம. மற்ற எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து கண்டனத்தைத் தெரிவித்தோம் ஆனால் கண்டனம் தெரிவித்த கட்சிகளில், தி. மு. கழகம் மட்டும் ஏன் பழி வாங்கப்பட வேண்டும்? என்பது தான் என்னுடைய கேள்வி. ஏன் இந்த பாரபட்சம்?

கண்டனம் தெரிவித்த மற்ற கட்சிகள் எல்லாம் சட்டத்தை மதித்தார்கள். ஆனால் தி. மு. கழகம் சட்டத்தை மதிக்கவில்லை என்று இங்கே அரசு தரப்பில் கூறப்பட்டது.

31-ஆம் தேதி இளைஞர் காங்கிரசார் உண்ணாவிரதம் இருந்தார்கள். 28-ஆம் தேதி இரவே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தடையை மீறித்தான் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களைக் கைது செய்து உடனே விடுதலை செய்தார்கள்.

அதேபோன்று தான் ஆர். டி. சீத்தாபதியும். புருடோத்தமனும். என். வி. என். சோமுவும். மற்றவர்களும் தடையை மீறி கைதானார்கள்.

இளைஞர் காங்கிரசாரை விடுதலை செய்தவர்கள் தி. மு. கழகத்தவரை ஏன் விடுதலை செய்யவில்லை? அவர்கள் சட்டத்தை மீறவில்லையா? சட்டத்தை மீறியவர்கள் என்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது ஏன்?

12-ஆம் தேதி அர்த்தால் என்று அறிவிக்கப்பட்டது, அதை நான் குறை கூறவில்லை. இதற்கிடையில் தனபதி

என்ற தமிழன் இலங்யையில் படுகொலை செய்யப்பட்டான். இதைக் கண்டித்துத்தான் தமிழ் நாடு முழுவதும் அல்ல, சென்னை மாவட்டத் தி. மு. கழகம் மட்டும் இலங்கைத் தூது வரகம் முன் மறியல் என்று அறிவித்தது. அதற்கு தடை விதித்தார்கள்.

12-ஆம் தேதி பொது அர்த்தாலை அறிவித்தது கூட முறையாகச் செய்யவில்லை. அர்த்தால் தேதியை நிர்ணயிக்க 26-ம் தேதி பிற்பகல் அனைத்துக்கட்சியினர் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டு அதற்கு ஒரு கடிதம் அனுப்பினர்கள். அந்தக் கடிதம் எனக்கு 27-ம் தேதிக்குப் பிறகு தான் கிடைத்தது. இது ஒரு புரட்சி. அ. தி. மு. க. வின் தோழமைக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு நெடுமாறன் அவர்களே கூட 26-ஆம் தேதி மாலையில் தான் அந்தக் கடிதம் தனக்குக் கிடைத்ததாக சட்டப் பேரவையிலேயே சொல்லியிருக்கிறார்.

இப்படிப்பட்ட முறைகெட்ட காரணத்தினால் அர்த்தால் தேதி தள்ளி வைக்கப்பட்டது. இதற்கிடையில் மாணவர்கள், கா. கா. தே. கா. கட்சியினர், இளைஞர் காங்கிரசார் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

பார்வை இருவிதம்

இளைஞர் காங்கிரசாருக்கும் 143-வது செக்ஷன் தான் கழகத்தினருக்கும் அதே செக்ஷன்தான். ஆனால் இளைஞர் காங்கிரசார் விடுதலை செய்யப்பட்டார்கள். கழகத்தினர் சிறையில் வைக்கப்பட்டார்கள்.

ஒரே செக்ஷனைப் போட்டுவிட்டு, பார்வை தான் வேறு விதமாக இருக்கிறது. டெல்லியைப் பார்க்கும் பார்வை வேறு தி. மு. கழகத்தைப் பார்க்கும் பார்வை வேறு.

வன்முறையை ஊக்கப்படுத்தக் கூடாது என்று இங்கே அரசு தரப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1980-ஆம் ஆண்டு அ. தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டதும். அ. தி. மு. க. வும் அதனைச் சார்ந்த கட்சியினரும் வன்முறையில் ஈடுபட்ட செயலைச்சட்ட சபையில் போலீஸ் மானிய அறிக்கையில் முதலமைச்சரே தாக்கல் செய்திருக்கிறார்கள். அதிலே "காவல் நிலையத்தில் நுழைந்து முப்பத்தைந்து போலீசாருக்கு காயம், காவலரிடமிருந்து துப்பாக்கியைப் பறிக்க முயற்சி" என்றெல்லாம்

படித்தார். அப்படி வன்முறையில் ஈடுபட்ட 235 பேர்களும் பிறகு எம் ஜி. ஆர். அரசாலேயே விடுவிக்கப் பட்டனர்,

அ.தி.மு.க. என்ரூல் தவிநீதி!

வன்முறையில் ஈடுபடுகிறவர்கள் அ. தி. முக. வாக இருந்தால் உடனே விடுவிக்கப்படுகிறூர்கள். ஆனல் தி. மு. கழகத்தினர் வன்முறையில் ஈடுபடா விட்டாலும் வன்முறை என்ற முத்திரையைக் குத்தி வழக்குகளில் சிக்க வைப்பது இந்த அரசின் வாடிக்கையாக இருக்கிறது.

விவசாயச் சங்கத் தலேவர் நாராயணசாமி நாயுடு மீது 302. 307. 120 (பி) போன்ற செக்ஷன்களேயெல்லாம் போட்டு அ. தி. மு. க. ஆட்சி தான் வழக்குப் போட்டது. அ. தி. மு. க. ஆட்சி கலேக்கப்பட்ட பிறகு நாராயணசாமி நாயுடுவை அந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று எம். ஜி. ஆர். தான் வாதாடினுர். இதிலிருந்து நேரத்திற்கு நேரம் முதலமைச்சர் ஒரு முடிவெடுப்பார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மற்றவர்கள் எல்லாம் ஆர்ப்பாட்டம் தான் செய்தார்கள்; தி மு. கழகத்தினர் மட்டும் மறியல் செய்தார்கள் என்கிறூர் யார் ஆர்ப்பாட்டம் செய்யச் சென்ருலும் நூறு அல்லது இருநூறு பேர்கள் செல்வார்கள் அவர்களே தூதுவரகத்தின் முன்னல் அனுமதித்து விட்டால் அது வன் முறையில் தான் போய் முடியும். எனவே மறியல் என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு வேண்டுமென்றே செய்கின்ற வல்லடி வழக்கே தவிர வேறு அல்ல.

வெளிநாட்டுத் தூதுவரகம், வெளி நாட்டுத்தூதுவரகம் என்று சொல்கிறவர்கள் சீனத் துணேப் பிரதமர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த போது மீனம்பாக்கம் விமான நிலேயத்தில் அவர் மீது அழுகிய முட்டையையும், அழுகிய தக்காளியையும் வீசிய போது அதைத் தடுக்க முடியாதவர்கள் இப் போது வெளி நாட்டு தூதுவரகம் என்று பேசுவது வேடிக்கையாக இருக்கிறது,

ஆர். டி. சீத்தாபதி, என். வி. என். சோமு, புருடோத்தமன் போன்றவர்கள் எல்லாம் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டு ஏற்கெனவே சிறையில் இருந்த காலத்தை

தண்டனையாக ஏற்று விடுதலையாகி இருக்கிறார்கள் என்று அரசு வழக்கறிஞர் சொல்கிறார்.

கருணாநிதியின் மீதும் அதே செக்ஷன்தான்; அவர் மட்டும் வழக்கை எதிர்த்து வாதாடுகிறாரே என்றும் கேட்டிருக்கிறார்,

வாதாடத்தான் போகிறேன்

நான் வாதாடத்தான் போகிறேன். நான் சாட்சிகளை விசாரிக்கப் போகிறேன்; அப்போது உண்மை தெரியும். ஏனென்றால் நான் கைது செய்யப்பட்டது, என்னுடைய வீட்டு வாசலில்; அண்ணா சிலைக்கு மாலையிட்ட பின்புதான் மறியல் செயயப் போவதாக திட்டமிட்டிருந்தோம். ஆனால் அண்ணா சிலைக்குக் கூடமாலையிட முடியாமல்தடுத்து என்னைக் கைது செய்திருக்கிறார்கள்.

இந்த அரசுக்கு இழிவை உண்டாக்க போராட்டம் நடத்தினார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் ஒன்றும் புதிதாக இழிவு கற்பிக்கத் தேவையில்லை. ஆயிரமாயிரம் இழிவுகள் இந்த ஆட்சி மீது அம்பாரம் போல் குவிந்து கிடக்கின்றன. எரிசாராய ஊழல், கப்பல் பேர ஊழல், பிளண்டிங்பாட்டிலிங் ஊழல் போன்றவை இந்த ஆட்சி மீது குவிந்து கிடக்கின்றன.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று குறிப்பிட்டிருக்கிறார். கா. கா. தே. கா. கட்சியைச் சேர்ந்த குமரி அனந்தன் மத்திய அரசுக்குச் சொந்தமான மணியாச்சி ரெயில் நிலையத்திற்குள் நுழைந்து மணியாச்சி என்ற பெயரை ''வாஞ்சி'' என்று எழுதினார்.

வாஞ்சி என்று அந்தப் புகைவண்டி நிலையத்திற்குப் பெயர் வைப்பது எனக்கு உடன்பாடுதான்.

நான் முதலமைச்சராக இருந்தபோது கூட, இது பற்றி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறேன்.

ஆனால் மத்திய அரசுக்கு சொந்தமான ரயில் நிலையத் திற்குள் நுழைந்து அங்கே போராட்டம் நடத்தியவர்களை கைது செய்து பிறகு, விடுதலை செய்தார்களே, அது, எந்த சமநீதி? எனவே சமநீதி என்று பேசுவது பித்த லாட்டம்!

தீக்குளித்தவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது வேதனையாக இருக்கிறது. "சாராயம் குடிக்க காசு கேட்டான்; கொடுக்க மறுத்து; அதனால் தகராறு ஏற்பட்டு தற் கொலை செய்து கொண்டாள்" என்று கூறியிருக்கிறீர்கள். தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கத்தான் மதுவிலக்கைத் தளர்த்தினேன் என்று சொன்னீரே, இந்த வாதப்படி அது என்ன வாயிற்று?

தீக்குளித்தவர்களைப் பற்றி நாடே அறியும். தீக்குளித்தவர்கள் அனைவரும் குடிசையில், ரோடு ஓரத்தில் குடியிருப்பவர்கள் என்று கேலி பேசுகிறீர்கள்.

பணக்காரர்கள், கோபுரத்தில் இருப்பவர்கள். கோபுரத்தில் இருக்கும் கோமான்களா, பூமான்கள், சீமான்கள் இந்தக் கருணாநிதிக்காக வர மாட்டார்கள். இந்தக் கருணாநிதியும் கோபுரத்தில் இருப்பவர்களுக்காக வாதாட மாட்டான்.

தீக்குளிப்பை நாங்கள் ஊக்கப்படுத்துகிறோம் என்று அரசு வழக்கறிஞர் மூலம் குற்றம் சாட்டுகிற முதலமைச்சர் 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் தீக்குளித்து இறந்த சின்னசாமியின் குடும்பத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் அன்றைய தினம் வழங்கினாரே, அது தீக்குளிப்பை ஊக்கப் படுத்தியது ஆகாதா? நாங்களும் தீக்குளிப்பை ஊக்கப் படுத்தவில்லை எங்களுடைய பொதுச் செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர், சிறையில் இருந்தபடி நானும் யாரும் தீக்குளிக்க வேண்டாம் என்று மாறிமாறி அறிக்கை விடுத்தோம்.

ஆனால் வன்முறை கூடாது என்று சொல்கிற அ. தி. மு. கழகத்தினர் 1972-ல் தி மு. கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். விலக்கப்பட்டதும் எத்தனை பஸ்களுக்குத் தீ வைத்தார்கள்? எத்தனை பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன? அமைச்சர் மன்னை நாராயணசாமியின் மண்டை உடைக்கப்பட்டது; அமைச்சர் வேழவேந்தனின் கார் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

சமீபத்தில் ஐ. ஜி. கூட ஒரு அறிக்கை கொடுத்திருந்தார். பஸ்களை சேதப்படுத்துகிறவர்களுக்கு ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்க சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். உடனே அந்தச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள். முன்தேதியிட்டு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், 1972-ல் நடந்த சம்பவங்

கள் பற்றியும் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். உடனே அந்தச் சட்டத்தை ரெட்ரோஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து கொண்டுவர வேண்டும்.

அரசு வழக்கறிஞர் இங்கு படித்த அறிக்கைக்கு என்னுடைய பதில் சுருக்கமாக கூறியிருக்கிறேன். மற்றவைகளுக்கு தேவைப்படும்போது உரிய தேரத்தில் பதில்களை அளிப்பேன் என்று குறிப்பிட்டு மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்; நாங்கள் குற்றவாளிகள் அல்ல.

இவ்வாறு கலைஞர் தனதுபதில் வாதத்தில்தெரிவித்தார்.

தலைவரின் பதிலுக்குப் பிறகு நீதிபதி வழக்கு விசாரணையை அக்டோபர் 21ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

வழக்கு விசாரணை அக்டோபர் 21ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதும் தலைவர் கலைஞர் நீதிமன்றத்தைவிட்டு வெளியே வந்தபோது கூட்டம் அலைமோதியது. மிகுந்த சிரமத்திற்கு இடையில் ஆர்வம் மிகுந்த கூட்டத்தின் மத்தியில் இருந்து தலைவர் தனது காருக்கு வந்து சேர்ந்தார்.

அப்போது மீண்டும் எழுச்சி முழக்கங்களும், வாழ்த்தொலிகளும் விண்ணை முட்டி எதிரொலித்தது.

கழக வழக்கறிஞர்கள்

கழகத்தின் சார்பில் வழக்கறிஞர்கள் என். வி. என். சோமு எம். எல். ஏ. ஆலந்தூர் பாரதி. ஜனகன். ரகுமான் கான் எம். எல். ஏ. நாகரத்தினம் எம். பி. விழுப்புரம் பழனியப்பன் எம். எல். ஏ. எ. எல். சுப்பிரமணியன், ராஜ இளங்கோ, டி. வி. கணேசன், அண்ணாநகர் ஜி. கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் ஆஜராகினர்.

அரசு தரப்பில் உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் ராஜ மாணிக்கம் ஆஜரானார்.

இன்றைய வழக்கில் நீதிமன்ற நடவடிக்கையைக் காண்பதற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார் தலைமை நிலையச் செயலாளர் ஆற்காடு வீராசாமி எம். எல். ம. தொ. மு. ச. பேரவைத் தலைவர் செ. குப்புசாமி. மகளிர் அணி செயலாளர் அலமேலு அப்பாத்துரை, இணைச் செயலாளர் எஸ். பி. சற்குணம், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி. டி. தண்டபாணி, டாக்டர் அ. கலாநிதி, இரா. மோகன், சி. பழனியப்பன், கந்தசாமி.

மற்றும் அ. செல்வராஜன், எம். எல். ஏ. வீரபாண்டி ஆறுமுகம் எம். எல். சி. மதுராந்தகம் சி. ஆறுமுகம், திருச்சி மாவட்ட அவைத் தலைவர் ஆர். நாகசுந்தரம், கவிஞர் குடியரசு போலீஸ் வெ. கண்ணன், பி. ஏ. என். ராசரத்தினம், டி. ஆர். பாலு, எஸ். ஏ. எம். உசேன், எல். பலராமன், சா. முத்து, என். வி. என். செல்வம், மகளிர் அணியைச் சேர்ந்த வி. தமிழ்ச்செல்வி, ராஜம் நட ராஜன், முத்துலட்சுமி மற்றும் செயல்வீரர்கள், பொது மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்தனர்.

(2-10-81 அன்று முரசொலியில் வெளியானது.

தியாகிகள் தினம்! பேராசிரியர் அறிக்கை!!

இலங்கைவாழ் தமிழ் இனத்தவருக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கண்டிக்கவும், மனித உரிமை பறிக்கப் படுவதை உலகோர் கவனத்திற்கு உரியதாக்கவும் தி.மு.க. ஒருநாள் அடையாள மறியல் மேற்கொண்ட போது, கழகத் தவர்களைக் கைது செய்து சிறையில் வைத்த எம். ஜி. ஆர். அரசின் பழிவாங்கும் போக்கையும் சேர்த்துக் கண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு - தொடர் மறியல் நடத்த நேரிட்டு, இறுதியில் கலைஞர் அவர்களே - அண்ணா பிறந்த நாளில் மறியலில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் கலைஞர் அவர்களும் அவருடன் மறியலில் ஈடுபட இருந்த மன்னை முதலான நண்பர்களும் - மறியலில் ஈடுபட வாய்ப்பில்லாமலே - கலைஞர் இல்லத்திலே இருந்து புறப் படும் வேளையிலேயே தடுத்துக் கைது செய்யப்பட்டு, வழக் குப்பதிவு செய்து - சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த அநீதியினைக் கண்டு - தமிழ்மக்கள் உள்ளங்குமுறி னர். இளைஞர்கள் கொதித்தெழுந்தனர். தாய்க்குலம் கண்ணீர் சிந்தியது. "தமிழ் இன அழிவைத் தடுக்கக் குரல் கொடுத்த தமிழ் இனத் தலைவனையே சிறையில் தள்ளிவிடும் துணிவா ஒரு அரசுக்கு, அதிகார மமதை எதைச் செய்ய வும் துணிவளித்திடுமோ? - அப்படியாயின் - தமிழினத்துக்கு ஒரு எதிர்காலம் உண்டென்று நம்பவும் இடமில்லையே!" என்று ஏங்கிய தமிழ் உள்ளங்கள், 'கலைஞரை விடுதலை செய்' தமிழ் இனக் காவலனை விடுதலை செய் என்று முழங்க லாயினர். உணர்ச்சிவயப்பட்டோர், பல்வேறு வகையில்

தங்கள் எதிர்ப்பையும், கண்டனத்தையும் காட்டத் தலைப்பட்டனர்.

வன்முறையை கழகம் ஏற்காது!

ஆனால், கழகம் எந்நாளும் வன்முறையை ஏற்காது - அப்படிப்பட்ட வன்முறைகளை கழகத்தலைமை ஆதரிக்கா என்பது கழகத்தின் மரபு என்பதை எண்ணிய செயல்வீரர் கள் - 'செய் அல்லது செத்துமடி' என்னும் மொழியைச் சிந்திக்க முற்பட்டுவிட்டனர். மக்களிடம் மங்கியுள்ள தமிழ் இன உணர்வு - சுடர்விட்டு ஒளிர வழி என்ன என்று கருதிய அந்த உள்ளங்கள் தங்களையே தியாகத் தீக்கு இரையாக் கினால்தான் - அந்த உண்மை உலகோர் கண்ணுக்குத் தெரி யும் - கருத்துக் குருடருக்கும் புலனாகும் என்று தீர்மானித்து விட்டன.

தீக்குளித்த தியாகிகள்!

அதன் பயங்கர விளைவுதான், திருக்காட்டுப் பள்ளி யில்-கோயிலடி பிருந்தாவன் என்னும் இளைஞன் தீக்குளித் தான். கலைஞர் விடுதலையாகி விட்டாரா என்று கேட்ட வாறே உயிர் விட்டான். திருச்சியில் மனோகரன் என்னும் இளைஞர்-'கலைஞரை விடுதலை செய்' என்று முழங்கியவாறே தீக்குளித்தான். திருவாரூர் தோழர் கிட்டு, மனைவி, மக்களைத் துயரக்கடலில் தள்ளிவிட்டுத் தீக்குளித்து மரணம் தழுவி னார். பெருந்துறை முத்துப்பாண்டியன் தீக்குளித்து, எரியும் உடலுடன் 'அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க நடந்து வீழ்ந்து மறைந்தான். சென்னை நகர் ஓட்டேரி மேரி அம்மை-தனது கணவனையும் குழந்தைகளையும் தவிக்க விட்டுத் தீக்குளித்து தியாகியானார்.

பல்லடம் முத்துச்சாமி, தீப்பற்றிய நிலையில் - கைதாகி மருத்துவமனையில் இருக்கிறார். திருப்பூர் திருவேங்கடம் தீப் பற்றி முகம் கருகி, கைதாகி மருத்துவமனையில் உள்ளார்.

தருமபுரியில் இளைஞர் அணிச்செயலாளர் இராசேந் திரன் தீக்குளித்து வெந்து, உயிருக்குப் போராடிக் கொண் டிருக்கிறார்,

ஜெயங்கொண்டம் இராமையன், தீப்பற்றிய நிலையில் கைதாகி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார். நாமக் கல்லில் கொண்டிச்சட்டி இராமசாமி அவர்கள் மனைவியை

யும் மகனையும் தவித்திடவிட்டு - தீக்குளித்து மருத்துவமனையில் கவலைக்கிடமாக உள்ளார். வேலூர் மேல் மயில் கிராமம் ஜெகநாதன் தீக்குளித்து கவலைக்கிடமான நிலையில் மருத்துவ மனையில் இருக்கிறார்.

சேலத்தில் - பி. டி. செழியனும் சங்கரன்கோவிலில் வெள்ளதுரையும், ஈரோட்டில் சென்னிமலை இலட்சுமி அம்மாளும், பெருந்துறை அருகில் புலவர் குருசாமியும், நெல்லிக்குப்பத்தில் குமரனும் - தீக்குளிப்பதற்கு முயன்ற போது தடுத்துக் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப் பட்டுள்ளனர்.

தலைவனின் விடுதலை கோரி வரலாறு படைத்த இனம்!

கழகக் கண்மணிகளில் ஐவர் மரணத்தையே தழுவி விட்டனர். அந்தோ! எம்மாலாவதுதான் என்ன? ஆறு பேர் தீக்குளித்த நிலையில் - மருத்துவ மனையில்; அதிலும் மூவர் கவலைக்கிடம் - மருத்துவமனையில் உள்ளோர் உயிரோடு திரும்பி வரும் நாளை வழிமேல் விழிவைத்து எதிர்பார்த் திருக்கிறோம். ஐந்து பேர் நல்லவேளையாக தீக்குளிக்கும் முன்னர் தடுக்கப்பட்டுக் கைதாகியுள்ளனர். இப்படி ஒரு தீக்குளிப்பு தியாக நிகழ்ச்சிகள் என்றும் தொடர்ந்ததுமில்லை. தங்கள் தலைவனை விடுதலை செய்யத்தங்களையே தீக்கு இரையாக்கும் தியாகம் எங்கும் நடைபெற்றதுமில்லை அப்படிப்பட்ட தியாகிகளின் தீவிர உணர்வு அவர்களைத் தீக்குளிப்புக்கு ஆளாக்கிவிட்டதை நம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நமது கழகம் இந்த முறையை ஏற்கவும் இல்லை. ஆனாலும் என்ன பயன்? கழகக் கண்மணிகளை - ஒப்பற்ற தியாக உள்ளங்களைப் பெற்ற வீரர்களை வருங்காலச் சமுதாயத் திற்கு வழிகாட்ட வேண்டிய செம்மல்களை நாம் இழந்து விட்டோம். கலைஞரும் - நானும் - பொருளாளரும் துணைப் பொதுச் செயலாளரும் முன்னணியினர் அனைவரும் எங்கள் கண்ணிரைத்தான் காணிக்கையாக்க முடிகிறது. அவர்கள் மீது பரவி உடலை எரித்த தீயை எங்கள் கண்ணீராலா அணைத்திருக்க முடியும்? உயிரையும் பொருட் படுத்தாது, உரிமை வேட்கையில் உயிர் துறந்த உத்தமர் களின் தியாகத்தை மதித்திடும் மனப்பாங்கற்ற உலுத்தர் கள்-சிலர், ஏதோ கதைகளைக் கற்பித்து உண்மையை

மறைத்துவிட முயன்றனர். ஞாயிற்றின் ஒளியை நாய்க் குடையா மறைக்கும்? அப்படிப்பட்ட கபோதிகள் கண் களுக்கும் ஒளியூட்டும் தியாகமன்றே தீக்குளித்தோர் தீவிரக் செயல்.

அந்த மாசற்ற மாணிக்கங்களின் - ஈடில்லாத தியாகம் - பொது வாழ்வையே தூய்மைப்படுத்துவது அன்றே! தமிழ் இன மக்களின் அகக் கண்ணைத் திறக்கும் ஆற்றல் பெற்ற தன்றே?

ஆணவத்திற்கும் - அதிகார மமதைக்கும் - அராஜகத் திற்கும் அவர்களது தியாகம் அபாய விளக்கு அன்றே!

அப்படிப்பட்ட ஒப்பற்ற தியாகிகளுக்குக் கழகம் இறுதி வணக்கம் தெரிவித்து அஞ்சலி செலுத்தும் நாள் தான் 11-10-81.

அன்று மாலை-ஒவ்வொரு நகரிலும்-பேரூரிலும்-எல் லோரும் துக்க அடையாளமாக ஒரு கறுப்புச் சின்னம் (பேட்ஜ்) அணிந்து, மௌன ஊர்வலம் நடத்தி, இறுதியில் பொதுக்கூட்டம் நடத்தி தீக்குளித்தியாகிகளுக்குவணக்கம் செலுத்தும் தீர்மானமும் நிறைவேற்றிடக் கேட்டுக்கோள் கிறேன்.

தீக்குளித்த மறவர் திருப்பாதங்களுக்கு வணக்கம்!
தியாகிகள் புகழ் திக்கெட்டும் பரவட்டும்!

(4-10-81 அன்று முரசொலி பத்திரிகைகளில் பேராசியரின் அறிக்கை வெளியானது)

எனக்காக-இந்த எளியோனுக்காக!

உடன் பிறப்பே,

எனக்காக,
இந்த எளியோனுக்காக,
சாதாரணமானவனுக்காக,
சாமான்யனுக்காக,
மிக உயர்ந்த வகுப்பில் தோன்றுமல்
மிக மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பில்
தோன்றியவனுக்காக,

அன்பையும் பாசத்தையும் அள்ளிக் கொட்டும் லட்சோப லட்சம் உடன்பிறப்புக்களும் என்னுடன் இணைந்து இலட்சியப் பாசறையாம் அண்ணன் உருவாக்கிய கழகத்தின் பணிகளை அயராது நடத்திடுவதைத்தானே அடியேன் விரும்பிடுவேன்! அதை விடுத்துச் சில உடன்பிறப்புக்கள் தீக்குளிப்பானேன்; என்னைத் திகைக்க வைப்பானேன்!

அய்யோ! பருவ வசந்தங்கள் பலவற்றைச் சந்திப்பதற்கு நீண்ட ஆயுள் பெற்ற தளிர்கள் எல்லாம் தணலில் கருகித் தியாகத் தங்கங்கள் ஆகிவிட்டிருக்கின்றனவே! அவர்கள், தங்கள் உடலுக்கா நெருப்பிட்டுக் கொண்டனர்?-இல்லை! இல்லை! என் நெஞ்சில் அல்லவா பெருநெருப்பை மூட்டி விட்டனர்!

தாய் கண்ணீர் பொழிந்திட, தந்தை சோர்ந்து வீழ்ந்திட, அண்ணன் தம்பிகள் அலறி அழுதிட-துணைவியரும் மழலையரும் துடித்துத் துவண்டிட இப்படியொரு தியாக வேள்வி தீக்குளிப்புப் படலம்-மொழிப்போர் காலத்தில் தொடங்கி அப்போதே முடிந்துவிட்டதென நம்பியிருந்த நம்மையெல்லாம் சோர்ந்து விழச் செய்திட-ஒருவரா இருவரா அந்த முயற்சியிலே ஈடுபட்டனர். பலர் தீயிட்டுக் கொள்வதற்கு முன்பே தடுக்கப்பட்டனர், ஐவர் தீ நாக்குகளுக்குத் தங்களைத் தின்னக் கொடுத்து எரிந்து கருகித் ''தியாக மகா காவியம்'' படைத்து விட்டனர். அறுவர், கரிக்கட்டைகளாக, ஆனால் கழக மாவீரர்களாக மரணப் போராட்டத்திலும் மன வலிமை குன்றாதவர்களாக மருத்துவ மனைகளில் கிடத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கத்தக்கதல்ல இந்த முறையென்று சிறையிலிருந்து நானும் வெளியில் இருந்து நமது பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும் விடுத்த அறிக்கைகளையும் புறக்கணித்துவிட்டு; அந்த உடன்பிறப்புக்கள் என் மீது கொண்ட எல்லையற்ற பாசத்தைக் காட்டிக் கொள்வதற்கு இதுவா வழி? இல்லை! இல்லவே இல்லை! என்னுடனும் தமிழினத்தை வாழ வைக்கத்துடிக்கும் தலைவர்களுடனும் அணி வகுத்து நின்று அண்ணாவின் கொள்கைகளை அய்யாவின் இலட்சியங்களை வெற்றி முகட்டில் ஏற்றி வைக்க வேண்டியவர்களன்றோ; தியாகத் திருவிளக்குகளாகத் தங்களை ஏற்றி வைத்துக் கொண்டார்கள்!

அந்த விளக்குகளையும் இழித்துரைக்கும் விழியற்ற பிறவிகள் ஒன்றிரண்டு இருக்கத்தான் செய்கின்றன! ''ஞாயிற்றின் ஒளியை நாய்க் குடையா மறைக்கும்?'' எனப் பேராசிரியர் கேட்டிடும் கேள்வியைத்தான் நாடே கேட்கிறது, அந்த நாத்தழும் பேறிகளைப் பார்த்து!

பொச்சரிப்பு

பொறுமை

பொல்லாங்கு

இந்தப் புன்மைகளின் கிடங்காய்த் தோன்றும் புழுத்துப்போன உள்ளங்கொண்டோர்க்கு, இந்தச் செய்திகளைத் தாங்கிக் கொள்ளத்தான் முடியாது!

எரிச்சலைக் கொட்டுவர்

ஏகடியம் பேசுவர்

எடுத்திடுவர் பேனுக்களை

எழுதிடுவர் ஏதேதோ!

அத்தகையோரைத்தான் அன்றைக்கே அண்ணா சொன்னார் ''நரகல் நடையழகர்கள்'' ' நடுங்கா நாக்கழகர்கள்'' என்று! ''சந்துமுனைச் சிந்து பாடிகள்'' என்பதும் அந்த இழிதகையோர்க்கு அண்ணன் சூட்டிய பட்டம்தானே!

இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின் போது தீக்குளித்து மடிந்த சிங்கத்தமிழன் சின்னச்சாமி மீதும் அவன் குடும்பத்தார் மீதும் வாரியிறைத்த அவதூறுகள் காது கொடுத்துக் கேட்கக்கூடியவைகளா? அவை மட்டுமா?

கடன்காரன்!

தீருடன்

வயிற்றுவலிக்காரன்

பெருநோயாளி

இப்படியெல்லாம் தமிழ் காக்கத் தணல் புகுந்த மொழிப்போர் வீரர்கள் மற்ற ஏழு பேர் மீதும் களங்கச் சேறு வீசப்படவில்லையா?

அந்த நரிகளின் ஊளைகளுக்கெல்லாம் அலட்சிய மொன்றையே பதிலாகத் தந்து வலிவாக்கப்பட்டது தான் நமது கழகத்தின் பாடிவீடு!

இப்போதும் ''சிலது''களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

எனக்காக,
இந்த எளியோனுக்காக,
சாதாரணமானவனுக்காக,
சாமான்யனுக்காக,
மிக உயர்ந்த வகுப்பில் தோன்றுமல்
மிக மிகப் பிற்படுத்தப்பட்ட
வகுப்பில் தோன்றியவனுக்காக,

அன்பையும் பாசத்தையும் அள்ளிப்பொழிந்து உயிரையே தருவதற்கு முனைந்துவிட்ட உடன் பிறப்புக்களின் செயல், அந்தச் 'சிலது'களின் எரிச்சலை அதிகப்படுத்தியுள்ளது!

எழில்மிகு ரோஜாவை எருக்கம்பூ என்று சொல்லி விடுவதாலேயே ரோஜாவின் மணமும் மதிப்பும் குறைந்து விடுவதில்லையென்று நான் இன்னமும் அன்பு கொண்டிருக் கிற ஒருவர் அடிக்கடி சொல்வார்!

அதை எண்ணிக் கொள்கிறேன்- ஆயிரங்கோடி சூரியப் பிரகாசம் கொண்ட சுடர்விளக்குகளாக ஒளி விடும் தியாகப் பிழம்புகளே! உங்களை எவரும் எதைச் சொல்லியும் கறை படுத்திவிட முடியாது!

ஆனால் நீங்கள் தேவையில்லாத ஒரு தியாகத்தைச் செய்து--நமது இலட்சியப் படையின் மிகத்தேவையான போர்க்கலன்களை இழந்து நிற்கும் நிலைக்கு எங்களை யெல்லாம் ஆளாக்கி விட்டீர்களே என்பதை நினைத்திடும் போதுதான் எங்கள் நெஞ்சில் நீங்கள் மூட்டிக் கொண்ட நெருப்பின் ஜ்வாலை வீசி எங்களைத் தகிக்கச் செய்கிறது தவிக்கச் செய்கிறது!

இதைச் சொல்லிச் சொல்லித் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளத்தான் உடன்பிறப்பே, உன்னை நோக்கி இத்திங்கள் எட்டாம்நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறேன்.

அன்புள்ள
மு. கு.

(5-10-81 அன்று முரசொலியில் வெளியான கலைஞர் கடிதம்.)

கலைஞரின் நூல்க

DC, KA: 70

ரோமாபுரிப் பாண்டியன்	40 00
புதையல்	20 00
கலைஞரின் கவிதைகள் (மலிவுப் பதிப்பு)	16 00
கலைஞர் கருணாநிதியின் சிறு கதைகள்	13 50
சிலப்பதிகாரம் நாடக காப்பியம்	15 00
இனியவை இருபது	9 50
ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!	8 25
ஒரே ரத்தம்	7 00
மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று!	6 00
தேனலைகள்	5 50
கலைஞர் தொடுத்த கணைகள்	5 00
நீதிகேட்டு நெடிய பயணம்	4 00
இலங்கைத் தமிழா! இது கேளாய்!	3 90
பேசும்கலை வளர்ப்போம்	3 75
வைர மணிகள்	2 50
பரதாயணம்	2 00
வண்டிக்காரன் மகன்	1 50
புனித ராஜ்யம்	1 50
சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள்	1 50
யாரால்? யாரால்? யாரால்?	1 00

கிடைக்குமிடம்

பாரதி பதிப்பகம்

108, உஸ்மான் ரோடு
தியாகராய நகர் சென்னை—17
போன் 440205